விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

32°c - 25°c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 99 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 21, வெள்ளிக்கிழமை 04.03.2016

## அத்தியாவசிய பொருள்கள் விலை எகிறும்

கொழும்பு, மார்ச் 4
10 அத்தியாவசியப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு அரசு இணங்கியுள்ளதாக அத்தியாவசிய சில்லறை பக். 23

# மனித உரிமைகளை மீறாதவாறு திருத்திய பயங்கரவாதச் சட்டம்

### துறைசார் அமைச்சர்களிடம் கையளித்தது ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 4
மனித உரிமைகள் மீறப்படாத வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டவரைவு, சட்டவாக்க ஆணைக்குழுவினால் துறைசார் அமைச்சர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரிடம் இந்தச் சட்டத் திருத்த யோசனைகள் கையளிக்கப்பட்டுள்ளன என்று குறித்த ஆணைக்குழுவின் ஜனாதிபதி சட்டத்தரணி ருமேஷ் டி சில்வா பக். 23

# எல்லை நிர்ணயம் குறித்து வடக்கு - கிழக்கில் அமர்வு

### மாத இறுதியில் வருகிறது குழு

கொழும்பு, மார்ச் 4
உள்ளூராட்சிச் சபைகளுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான அமர்வுகள் இந்த மாத இறுதியில் நடத்தப்படவுள்ளன என்று தேசிய எல்லை நிர்ணயச் சபையின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.
கொழும்பில் அமைந்துள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபை அமைச்சில், அமைச்சர் பைஸர் முஸ்தபா தலைமையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பக். 25

## பாதாள உலக முக்கிய புள்ளி சுட்டுக் கொலை

கொழும்பு, மார்ச் 4
இராஜகிரிய - ஒபேசேகரபுரவில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.
குறித்த நபர் துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தில் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த கம்புறுப்பிட்டிய ஹர்ஷா என்பவரே உயிரிழந்துள்ளார்.
முகத்தை மறைக்கும் தலைக் கவசம் அணிந்து, பக். 23

# நல்லிணக்கத்தின் ஆரம்பம் தெற்கிலிருந்தே வேண்டும்

### போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் காயங்களை ஆற்ற அதுவே வழி என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 4
போரினால், வடக்கு - கிழக்கு மக்களே பாதிக்கப்பட்டவர்கள். அவர்களின் காயங்கள் ஆற்றப்படவேண்டும். நல்லிணக்கம் என்பது மக்கள் மனங்களிலிருந்தே உருவாகவேண்டும் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அது தெற்கில் உள்ள மக்களிடம் இருந்தே ஆரம்பமாகவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். பக். 23



"தெற்கிலுள்ள மக்களின் மனோநிலையை மாற்றுவது அவசியமாகும். தெற்கிலுள்ள மக்களின் மனங்களில், குறிப்பாக வளர்ந்தவர்களிடமே நல்லிணக்கம் விதைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. இளம் தலைமுறையிடம் நிலமை இதற்குச் சாதகமானதாகவே உள்ளது."

### முச்சந்தி முரளி



அந்த நல்லிணக்கம் தான் நிண்டு நிலைக்கும் கண்டியளே...

# கைதிகளில் மூவர் ஆபத்தான நிலையில்

### தொடர்கின்றது உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4
உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளில் 6 பேர் நேற்று மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, அவர்களில் 3 பேர் ஆபத்தான நிலையை அடைந்துள்ளதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கொழும்புமகசின்சிறையிலுள்ள கைதிகள் 14 பேர் கடந்த 23 ஆம் திகதியிலிருந்து உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.
அவர்களில் பலர் பக். 23

## தமிழில் உரையாற்றுவதற்கு கருவி பயன்படுத்திய மகிந்த

### அதற்காக ஜனாதிபதி செயலக நிதியில் 2 கோடி ரூபா செலவானதாகத் தகவல்

கொழும்பு, மார்ச் 4
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது ஆட்சியின்போது, எழுதி வைத்த எதனையும் பார்க்காமல் சிங்களத்தில் உரையாற்றுவதற்கும், தெரியாத பக். 23



# மாதிரி வீட்டை பார்வையிடுவார் அமைச்சர்

### இரவோடு இரவாக நிர்மாணப் பணிகளில் சீன அதிகாரிகள் மும்முரம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் உரும்பிராயில் அமைக்கப்படும் மாதிரி வீட்டை, அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் இன்று நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.
இந்த நிலையில் நேற்று இரவோடு இரவாக அவசர அவசரமாக - சீன அதிகாரிகள், குறித்த வீட்டை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை பக். 23



# அரசமைப்பு நிர்ணய சபை அமைப்பதற்கு சு.க. ஆதரவு

கொழும்பு, மார்ச் 4
நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவது தொடர்பிலான பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.
குறித்த பிரேரணைக்கு ஒத்துழைப்பு வழங்கக் கட்சியின் மத்திய பக். 23

# நடப்பாண்டு அபிவிருத்திக்கு கேள்வி கோரல்கள் விரைவில்

### நிதி ஆணைக்குழுவின் அறிவிப்பை அடுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 4
வடக்கு மாகாண சபையின் நடப்பு ஆண்டுக்குரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு நிதி ஆணைக் குழு பணித்துள்ளதாக, வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.
இந்த நிலையில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான கேள்வி கோரல்களை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பக். 23

# தமிழக அரசின் கடிதத்தை ஆராய்கிறது மத்திய அரசு

### ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களின் விடுதலை தொடர்பில்

கொழும்பு, மார்ச் 4
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற 7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அரசின் கடிதத்தை மத்திய அரசு ஆராய்ந்து வருவதாக பக். 23



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கற்றலுக்கு உகந்த சூழல் இல்லை

## நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாணவர்கள் கோரிக்கை

யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரியின் வகுப்பறைகளுக்குள் மாணவர்கள் இருந்து கல்வி கற்க முடியாதவாறு வெயில் வெக்கை அன்லாக வீசுகின்றது என்று மாணவர்கள் தெரிவிக்கின்றனர். அதிலிருந்து பாதுகாப்பாக இருக்க ஜன்னல்களுக்கு ஜன்னல் சீலைகளாவது பொருத்த வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.

வகுப்பறைகளுக்குள் மின்விசிறி வசதிகள் இல்லாத நிலையில் பாடங்களை ஒழுங்காகக் கவனிக்க முடியாத அளவுக்கு வெயில் வெக்கை அனலாக வீசுகின்றது என்று தெரிவிக்கும் மாணவர்கள், இயல்பான கற்றல் நடவடிக்கைக்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுவரை அங்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதுவரை இருந்த பணிப்பாளரிடம் இந்த விடயங்களைப் பலதடவைகள் எடுத்துக்கூறியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதுமட்டுமன்றி சில வகுப்பறைகளில் கற்றலுக்கு நுளம்பும் இடையூறு செய்கின்றது என்று மாணவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. இது தொடர்பில் சுகாதாரத் தரப்பினருக்குத் தெரிவிக்கவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இன்று அமைச்சர் மகிந்த சமரசிங்க உள்ளிட்ட குழுவினர் தமது கல்லூரிக்கு வரவுள்ளதால் அவர் குறித்த பிரச்சினைகள் மட்டுமன்றி கல்லூரியில் தீர்க்கப்படாதுள்ள பல பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும் என்று மாணவர்கள் கோருகின்றனர்.

கல்லூரியில் சிற்றுண்டிச் சாலை உரியதாக இல்லை. அதனைச் சீர்ப்படுத்துமாறு முன்னர் கோரப்பட்டது. அது மூடப்பட்டுப் பின்னர் தற்காலிக அடிப்படையில் என்று கூறித் திறக்கப்பட்டது. ஆனால் அவ்வாறே 5 மாதங்கள் கடந்து விட்டன. தவிர உணவுப் பொருள்களும் முன்னர் அறிவித்த விலையில் இல்லை. அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன என்றும் மாணவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ந-4 ,9)

# இடமாற்றம் வழங்குவதில் பாரபட்சம்; குற்றஞ்சாட்டுகின்றனர் 14 ஆசிரியர்கள்

## உரிய முறையிலேயே மாற்றல் நடக்கிறது என மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

பிறமாவட்டங்களில் பணிபுரியும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களில் சுமார் 14 பேர், தாம் இடமாற்றம் பெறத் தகுதியுடையபோதும் அதிகாரிகள் தம்மை இடமாற்றம் செய்யாது பின்னடிக்கிறார்கள் என்று குற்றஞ் சாட்டியுள்ளனர்.

எனினும் அவர்களது குற்றச்சாட்டை நிராகரிக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளர், உரிய முறையில் இடமாற்றம் இடம்பெறுகின்றது என்றும், பாடங்களுக்கேற்பவே இடமாற்றம் வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

தாம் பிற மாவட்டங்களில் 6 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளோம். இடமாற்றத்துக்கு 6 வருடங்களைப் பூர்த்தி செய்பவர்கள் தகுதியுடையவர்கள் என்று தெரிவிக்கும் குறித்த ஆசிரியர்கள், தாம் வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகின்றோம் என்று தெரிவிக்கின்றனர்.

முன்னர் பிறமாவட்டங்களில் 10 வருடங்கள் பணிபுரிய வேண்டும் என்றிருந்தது. பின்னர் அது 6 வருடங்களாகக் குறைக்கப்பட்டது. அவ்வாறு குறைக்கப்பட்டும் உரிய காலத்தை பிறமாவட்டங்களில் பூர்த்தி செய்துள்ளோம். எம்மைப்போன்றே பிறமாவட்டங்களில் பணிபுரிந்த பலர் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பியுள்ளனர். கல்வியியற் கல்லூரியிலிருந்து நியமனம் பெற்ற ஆசிரியர்களின் இடமாற்றமானது இந்த வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில் தமக்கு மட்டும் ஏன் பாரபட்சம் காட்டப்படுகிறது என்று ஆசிரியர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

இந்தப் பக்கச் சார்பு குறித்து வடமாகாண முதலமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது என்றும் எனினும் இன்னும் பயன் கிடைக்கவில்லை என்றும் குறித்த ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து வடமாகாணக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் செ.உதயகுமாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது–

6 வருடங்களைப் பூர்த்தி செய்த அனைவரும் இடமாற்றம் பெறத் தகுதியுடையவர்கள். அவர்கள் மேன்முறையீடு செய்யலாம். ஆனால் இடமாற்றக் கொள்ளையின்படியே இடமாற்றம் வழங்குவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கலாம் என்று பதிலளித்தார்.

பிற மாவட்டங்களிலோ யாழ். மாவட்டத்திலோ பாட ரீதியான வெற்றிடம் இல்லாமலோ அல்லது அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமலோ – மாணவர்களைப் பாதிப்பதாகவோ இடமாற்றம் வழங்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-4)

## சீவல் தொழிலாளருக்கு முட்டிகள்

யாழ்ப்பாணம். மார்ச் 4

அச்சுவேலி பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகச் சீவல் தொழிலாளர்கள் 25 பேருக்கு 500 ரூபா பெறுமதியான 10 முட்டிகள் வழங்கப்பட்டுள்ளன என பனை தென்னை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் கே.வரதராஜன் தெரிவித்தார்.

பனங்கட்டி உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாகஅங்கத்தவர்கள் 25பேருக்கு முதற்கட்டமாக இவை வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டு கூடுதலான பனங்கட்டியை உற்பத்தி செய்யும் நோக்கோடு சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிப்பதற்காகவும் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மார்ச் மாதத்தில் இருந்து ஜூலை மாதம் வரையான காலப்பகுதியில் பனங்கள் அதிகமாகக் கிடைக்கூடிய பருவகாலமாகும். இந்தக் காலத்தில் பனங்கட்டி தொழில் மேற்கொள்ள ஏதுவான சூழல் காணப்படுகின்றது. அதையடுத்து சீவல் தொழிலாளர்களுக்கு சுண்ணாம்பு, சீவல் தொழில் உபகரணங்கள் என்பன வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ந-107)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் அளவெட்டி அருணாசலம் வித்தியாலய மாணவர்கள் 6 பேருக்கும் வட்டு.இந்துக்கல்லூரி மாணவி ஒருவருக்குமாக 93 ஆயிரம் ரூபா பெறுமதியான 7 சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. நேற்று வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க தலைமைக் காரியாலயத்தில் சங்க போசகரும் ஓய்வு பெற்ற மின்சார சபை பொறியியலாளருமான வி.வேலுப்பிள்ளை மற்றும் ஓய்வு பெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திருமதி வேலுப்பிள்ளை ஆகியோரால் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. பாடசாலை அதிபர் களினால் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இவை வழங்கப்பட்டுள்ளன. (ந)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 4

உரும்பிராய் ஏ.எஸ்.என். நிறுவனத்தின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. உரும்பிராய் இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறவுள்ள குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரி.குருகுலராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழில்உள்ள இந்தியத்துணைத் தூதுவர் ஏ.நடராஜன், கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் அதிபர் திருமதி வி.சண்முகரத்தினம், கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபர் வி.ஞானகாந்தன், உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அதிபர் ஏ.அருணந்திசிவம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-ரி)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஏழாலை தெற்கு மயிலங்காடு அறுமன்பதி ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தின் பொதுக்கூட்டம் இன்றுவெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடபெறவுள்ளது என்று நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் திருவிழா சம்பந்தமான கலந்துரையாடலும், புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ந-ரி)

# விபத்தில் குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 4

அராலியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தபோதும் சுமார் 15 நிமிடங்களாக அவரை எவருமே வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவில்லை. இதனால் அவர் தாமதமாகவே வைத்தியச ாலையில் சேர்க்கப்பட்டபோது அவர் உயிரிழந்துவிட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் அராலி வடக்கு செட்டியார் மடத்தடியில் நேற்று முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்றது. விபத்தில் அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குஞ்சுத்தம்பி வசந்தராஜா (வயது-49) என்பவரே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் செல்வதற்காக அங்குள்ள கடை ஒன்றில் காத்திருந்த அவர், பஸ் வருவதனைக் கண்டு வீதியைக் குறுக்கறுத்து ஓடியுள்ளார். அதன்போது பஸ்ஸை முந்திக் கொண்டு சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது. அவர் படுகயமடைந்த நிலையில் அங்கு சுமார் 15 நிமிடங்களாகக் கிடந்தபோதும் எவருமே அவரை வைத்தியசாலையில் சேர்க்க முயற்சி செய்யவில்லை என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் அவரது மனைவிக்கு அறிவித்து அதன் பின்னரே அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் இடைவழியில் உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணையை மேற்கொண்டார். (ந-4)

# உயிரிழப்பை ஏற்படுத்திய சாரதிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிப் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் முதியவர் ஒருவர் சாவடைவதற்குக் காரணமான டிப்பர் வாகனத்தின் சாரதியை இந்த மாதம் 15 ஆம் திகதிவரையும்விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் நேற்று உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிப் பகுதியில் சைக்கிளில்வந்த 68 வயதுடைய முதியவர் ஒருவரை டிப்பர் வாகனம் மோதியதில் அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் சாவடைந்திருந்தார்.



இந்தச் சம்பவம் தொடர்பாக கச்சாய், பளையைச் சேர்ந்த சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை இந்த மாதம் 15 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அதே வேளை இறந்தவருடைய உடல் இன்னமும் அடையாளம் காணப்படாததால் வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சாவடைந்த முதியவரை அடையாளம் காணும் வரை அவருடைய உடலைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு நீதிமன்றம் வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளது. (ந-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை மூப்புள்ள கல்விசாரா ஊழியர்களுக்கு உரியவாறு பதவியுயர்வு வழங்க வேண்டும்

## வலியுறுத்தி ஜனாதிபதிக்கு மகஜர்

அம்பாறை,மார்ச் 4

பதவி உயர்வில் புறந்தள்ளப்பட்டுள்ள சேவை மூப்புக் கொண்ட கல்விசாரா ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கக் கல்வி அமைச்சு ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடு முழுவதுமுள்ள தேசியப் பாடசாலைகளில் கல்விசாரா ஊழியர்களாகக் கடமை புரியும் காவலாளி, சுத்திகரிப்புத் தொழிலாளி, பாடசாலைத் தொழிலாளி ஆகிய தரங்களில் வகுப்பு 3 இல் மூன்று வருட சேவைக் காலத்துக்கு உட்பட்டவர்களுக்கு ஆய்வுகூடப் பணியாளர் எனப் பதவிப் பெயர் மாற்றப்பட்டு, கல்வி அமைச்சின் செயலாளரால் பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளன.

வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களும், பதவி உறுதிப்படுத்தப்படாதவர்களும் இவர்களுள் உள்ளனர்.

எனினும் பத்து வருடங்களுக்கு மேலான சேவை மூப்புக் கூடிய காவலாளி, பாடசாலைத் தொழிலாளி மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளிகளான கல்விசாரா ஊழியர்கள் பலர் இந்தப் பதவிப் பெயர் மாற்றம் மற்றும் பதவி உயர்வில் புறந்தள்ளப்பட்டுள்ளனர். ஜீ.சி.ஈ சாதாரணதரம், ஜீ.சீ.ஈ உயர்தரம் ஆகிய கல்வித் தகைமை கொண்டவர்களும் புறந்தள்ளப்பட்டுள்ளவர்களிலுள்ளனர்.

எமது நாட்டில் நல்லாட்சி அரசு உள்ளது. அதில் மக்களும் அரச ஊழியர்களும் நம்பிக் கொண்டிருக்கும் இந்தக் காலப்பகுதியில் கல்வி அமைச்சில் என்ன நடக்கிறது என்பதில் ஜனாதிபதியும், பிரதமரும் கவனமெடுக்க வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கு உதவவேண்டும் என்பது எமது தொழிற்சங்கத்தின் பணிவான வேண்டுதலாகும்.

கல்வி அமைச்சின் செயலாளரால் ஆய்வுகூடப் பணியாளர் வகுப்பு 3 எனப் பதவிப் பெயர் மாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள முறைமையை அவதானிக்கும்போது, பொது நிர்வாக அமைச்சின் அரச நிர்வாக சுற்றறிக்கையின் விதிமுறைமைகளுக்கு முரணாகவுள்ளது.

நாட்டிலுள்ள சகல அரச திணைக்கள அதிகாரிகளும் பொது நிர்வாக அமைச்சின் தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைமைகளைப் பின்பற்றிச் செயற்படவேண்டும் என்பதை பல தடவைகள் பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கைகள் மூலமாகத் தெளிவுபடுத்தியிருந்தும் அவை தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தாது செயற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சேவை மூப்புக் கூடிய ஊழியர்கள் அநீதியான முறையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பாதிப்புக்கள் இரண்டு விதமாக செய்யப்பட்டுள்ளன.

✦ குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமை ஆண்டு ஒன்பது அல்லது எட்டாம் தரத்தைக் கவனத்தில் கொண்டு பதவிஉயர்வை சேவை மூப்புக் கூடிய ஊழியர்களுக்கு வழங்காது, ஜீ.சி.ஈ சாதாரண தரக் கல்வித் தகைமை கோரி ஊழியர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்க முடியாது செய்தமை பெரிய அநீதியாகும்.

✦ ஓர் ஊழியர் ஆய்வு கூடப் பணியாளர் அல்லது நூலகப் பணியாளர் என்பவற்றில் ஒன்றுக்கே விண்ணப்பிக்க வேண்டும் என சுற்றறிக்கை வெளியிட்டு ஊழியர்களைக் கட்டுப்படுத்தியமை பொருத்தமற்ற செயற்பாடு.

✦ இரண்டு பதவிப் பெயர்களில் ஒன்றைத் தகுதியானவர்களுக்கு வழங்க வேண்டியது கல்வி அமைச்சின் செயலாளரது பொறுப்பாகும். ஊழியர்களிடம் விருப்பம் கேட்பது ஏற்புடையது. ஆனால் இறுதி முடிவு எடுத்து பதவி உயர்வு வழங்குவது கல்வி அமைச்சின் செயலாளரது கடமையாகும்.

இந்தச் செயற்பாடு கல்வி அமைச்சில் இடம்பெறாது ஊழியர்களுக்கு மறுக்கப்பட்டுள் ளது.

✦ சேவை மூப்பு கூடிய ஊழியர்களின் சேவையைப் பாராட்டி, மதித்து திணைக்களம் வழங்குகின்ற நடவடிக்கைகளில் ஒன்று பதவி உயர்வாகும். இசுறுபாய கல்வி அமைச்சு, முன்னர் அரச சுற்றறிக்கைகளை மதித்து அதன் பிரகாரம் செயற்பட்டதை சகலரும் அறிவர்.

ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளதை வேதனையுடன் தெரிவிக்கின்றோம்.

✦ நியமன அதிகாரியால் வழங்கப்பட்ட பதவியொன்றை ஏற்றுக் கடமை செய்யும்போது ஊழியர் ஒருவருக்கு அந்தப் பதவிப் பெயரை மாற்றி வழங்குகின்ற அதிகாரம் திணைக்களத் தலைவருக்கு பதவி உயர்வின் போது மாத்திரமே உண்டு என்பதை பொதுநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் த.வி.கோ.விதிமுறைமைகளை அவதானித்தால் தெளிவாகவுள்ளன. ஆனால் சகல விதிமுறைமைகளையும் கல்வி அமைச்சு புறந்தள்ளிச் செயற்பட்டுள்ளமை தெளிவாகவுள்ளது.

இந்தச் செயற்பாடுகள் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் இடம் பெற்றிருந்தால், தற்போது நிலைமையை எவ்வாறு நோக்கியிருப்பர்.

தயவு செய்து இந்த விடயம் தொடர்பில் கவன மெடுத்து அநீதியான முறையில், பதவி உயர்வு வழங்காது புறந் தள்ளப்பட்டு பாதிக்கப்பட்டுள்ள வசதி குறைந்த சேவை மூப்பு கூடிய கல்விசாரா ஊழியர்கள் சகலருக்கும், ஆய்வுகூடப் பணியாளர் மற்றும் நூலகப் பணியாளர் வகுப்பு 2 மற்றும் வகுப்பு 1 வழங்கி, கல்வி அமைச்சு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்குத் தாங்கள் பணிப்புரை விடுத்து உதவ வேண்டுமெனக் கோருகின்றோம். என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-ஜ-30)

# ஆசிரியர் வகுப்பில் இல்லாதபோது கழுத்தை நெரித்தாராம் மாணவன்!

யாழ்ப்பாணம் மார்ச் 4

வகுப்பில் ஆசிரியர் இல்லாத வேளை மாணவி ஒருவரின் கழுத்தைச் சக மாணவன் நசித்து நெரித்தார் என்றும் அதனால் 16 வயது மாணவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தென்மராட்சி பிரதேச பாடசாலை ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

எனினும் குறித்த சம்பவத்துக்குக் காரணமானவர் என்று கூறப்படும் மாணவனுக்கு எதிராக பாடசாலை நிர்வாகத்தினரால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பெற்றோர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகிறது.

வகுப்பாசிரியர் மற்றும் அதிபரிடம் முறையிட்டபோது, மாணவன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சக மாணவர்கள் வகுப்புக்கு ஆசிரியர் வருகை தராத வேளைகளில் தம்மை தகாத வார்த்தைகளால் ஏசுவதாக ஆசிரியை ஒருவரிடம் மாணவிகள் கூறியுள்ளனர். அதனையடுத்து ஆண் மாணவர்கள் ஒரு மாணவியின் கழுத்தை நசித்துள்ளனர் என்றும் அது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

ஏற்கனவே குறித்த பாடசாலை மாணவன் அதிபர் மற்றும் இரு ஆசிரியர்களால் தாக்கப்பட்டார் என்று கூறி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்று தகவல் வெளியாகியுள்ள நிலையில் அதே பாடசாலை மாணவி ஒருவர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் பெற்றோர்கள் கூறுகின்றனர். (ற-4,9)

# நாடாளுமன்றத்தில் புதிய பதவி

நாடாளுமன்ற பணிக்குழு பிரதானி எனும் பெயரில் புதிய பதவியொன்றை அரசு அறிமுகம் செய்துள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சொன்றின் செயலாளருக்குள்ள அதிகாரமும், சலுகைகளும் இந்தப் பதவிக்குரியவருக்கு கிடைக்கப் பெறுகின்றது.

இந்தப் பதவிக்கு பிரதிச் செயலாளர் நீல் இத்தவல நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# எனது ஜாதகம் அரசியலுக்கு எதிரானதல்ல கூறுகிறார் கோத்தபாய

கொழும்பு, மார்ச் 4



அரசியலுக்கு வரக்கூடாது என எனது ஜாதகத்தில் எந்தவொன்றும் கூறப்படவில்லை. நான் அரசியல்வாதியல்ல. கட்சிக்குரிய தலைமைப் பொறுப்பைத் தந்தால், அதனை மறுப்பதற்கும் இல்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச.

பெரியளவிலான லஞ்சம், ஊழல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு வாக்கு மூலம் வழங்குவதற்கு நேற்று அவர் வருகை தந்திருந்தார். இதன்போது, புதிதாக அமைக்கப்படவுள்ள கட்சிக்கு தாங்கள் தலைமை வகிக்கவுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி குறித்து ஊடகவியலாளர்கள் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

தற்போதுள்ள சோதிடர்களையும் நம்ப முடியாது. இதனால், தான் தற்பொழுது சோதிடர்களை நாடுவதில்லையெனவும் கோத்தபாய ராஜபக்ச மேலும் குறிப்பிட்டார்.

(வ)

**வாடகைக்கு**

ஆனைப்பந்திச் சந்திக்கு மிக அருகில் வீட்டின் அனெக்ஸ் வாடகைக்குண்டு. பெண்கள் இருவர் உள்ள குடும்பத்திற்கு மட்டும் வழங்கப்படும்.

தொடர்புக்கு - 077 6180186

**வேலையாள்கள் தேவை**

கொழும்பு நகரில் வேலை செய்வதற்கு பெயின்ட் வேலையாள்கள், உதவியாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 4707511, 077 2309164

**தேவை**

கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வரும் எமது நிறுவனத்திற்கு உப ஒப்பந்தகாரர்கள் ( Sub Contractors ) மேசன். கூலி மற்றும் தினக் கூலி அடிப்படையில் மேசன். கூலியாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு :
077 3614638, 077 8038567

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
IELTS Life skills UK
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
021226 2470 | 021227 0775 | 021224 1970 | 021228 5655

SUPER BALL சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 469
சீட்டிழுப்பு திகதி 2016.03.03
வெற்றி இலக்கங்கள்
07 33 51 53 E
ரூ. 45,604,320/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1242
சீட்டிழுப்பு திகதி 2016.03.03
வெற்றி இலக்கங்கள்
09 27 33 57 U
ரூ. 10,000,000/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**பொதுக்கூட்ட அறிவித்தல் - 2016**

மு.குமுழமுனை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமானது எதிர்வரும் 06.03.2016 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைக்குமாறு வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 330 1428 ( செயலாளர் O.S.A)
பழைய மாணவர்சங்கம்,
மு/குமுழமுனை மகாவித்தியாலயம்.

**யாழ்.மறைமாவட்டத்தில் இரக்கத்தின் யூபிலி ஆண்டு -2016 தவக்கால தியானங்களின் இறுதி வழிபாடுகள்**

இன்று
04.03.2016 வெள்ளிக்கிழமை மாலை
4.00 - 7.00 வரை யாழ். அடைக்கல அன்னை ஆலயம்.

அருட்பணியாளர் அல்பேட், சகோ.சாயு ஆகியோரால் நடத்தப்படும் உடல் ஆன்மீக குணமாக்கும் வழிபாடுகள்.

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.
யாழ்.தூய அடைக்கல அன்னை ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிக் கொடுப்பனவை அதிகரிக்குமாறு கோரிக்கை

வவுனியா,மார்ச் 4
பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்பாட்டுக்கு அரசால் வழங்கப்படும் பச்சை மரக்கறி கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட பாடசாலை அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்
உலக உணவு திட்டத்தால் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றன. இந்த உணவு வழங்கும் செயற்றிட்டத்துக்கு அரசால் பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கையைப் பொறுத்து வழங்கப்பட்டு வருகின்றது.
இந்தத் தொகைக்குள் தேங்காய், உப்புதூள், பச்சைமிளகாய் வெங்காயம், வாசனை திரவியங்களையும் பாடசாலை அதிபர்கள் கொள்வனவு செய்கிறார்கள். மரக்கறிகளுக்கே போதுமானதாக இந்தத் தொகை இல்லாதுள்ள நிலையில், செலவுகளை எவ்வாறு ஈடுசெய்வது என்று அவர்கள் கவலை தெரி வித்துள்ளனர்.
இந்தக் கொடுப்பனவு தொகை தற்போதுள்ள மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் குறைந்தபட்சம் மாணவர் ஒருவருக்கு 6 ரூபாவாக அதிகரிக்குமாறு வவுனியா மாவட்டத்தில் உள்ள உலக உணவு திட்டத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளிடம் பாடசாலை அதிபர்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளார். (ற-ஜ-402)

# ஒட்டவா உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள இணக்கம்

## ஜெனிவாவுக்கான இலங்கை பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4
நிலக்கண்ணி வெடி தடை தொடர்பான ஒட்டவா உடன்படிக்கையை முழுமையாக ஏற்றுக்கொள்வதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.
இந்த நடவடிக்கையானது இலங்கையில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவை மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
நிலக்கண்ணி வெடி தடை குறித்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வது குறித்து, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றும் ரவிநாத் ஆரியசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.
ஆள்களுக்கு எதிரான கண்ணிவெடிகளை உபயோகித்தல், சேமித்து வைத்தல், தயாரித்தல், இடமாற்றம் செய்தல் ஆகியவற்றை தடைசெய்து அவற்றை அழிப்பது சம்பந்தமாக உருவாக்கப்பட்டதே ஒட்டவா ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் 1999 ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி நடைமுறைக்கு வந்தது. இலங்கை இதுவரை இதில் கையெழுத்திடவில்லை.(ற-ஜ-5)

# 80,000 மெற்றிக்தொன் நெல் ஏற்றுமதி செய்யத் திட்டம்

கொழும்பு, மார்ச் 4
விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 80 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் ஏற்றுமதி செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நெல் கொள்வனவு சபையால் நாட்டின் பல பகுதிகளிலும் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல்லில் 80 ஆயிரம் மெற்றிக் தொன்னை உடனடியாக ஏற்றுமதி செய்வதற்கு அமைச்சரவையில் முடிவு எட்டப்பட்டுள்ளது.
மேலும், மீதமுள்ள நெல்லின் ஒரு பகுதி விலங்குணவு உற்பத்திக்காக வழங்கப்படவுள்ளது.
அத்துடன் புதிதாகக் கொள்வனவு செய்யப்படும் நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சியசாலையை வெற்றிடமாக்கும் தேவை இருப்பதாலும், கொள்வனவு செய்யப்பட்ட நெல், சந்தைகளில் சட்ட விரோதமாக விற்பனை செய்வதை தடுக்கும் முகமாகவுமே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-5)

# தன் பேச்சுக் கேட்காத சிறுவனின் கழுத்தில் சூடு வைத்த தந்தை



கொழும்பு,மார்ச் 4
தனது சொற்பேச்சு கேட்காத ஒன்பது வயதுச் சிறுவனின் கழுத்தில், சூடு வைத்த குற்றச்சாட்டில் அந்தச் சிறுவனின் தந்தையை தலவாக்கலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
தலவாக்கலை, நானுஓய தோட்டத்தைச் சேர்ந்த சிறுவனே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நிலையில், லிந்துலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
தனது சொற் பேச்சைக் கேட்காததாலும், குழப்பங்கள் செய்ததாலும் சிறுவனை, நெருப்பில் சூடு காட்டிய கரண்டியால் சுட்டதாக சிறுவனின் தந்தை பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.
இதனால், சிறுவனின் கழுத்துப் பகுதியில் எரிகாயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே மேற்படி நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன் சிறுவனை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (ற-ஜ)

# பிரிவுபசார விழாவும் வரவேற்பு விழாவும்

யாழ்பாணம், மார்ச் 4
பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் பிரிவுபசார விழாவும் வரவேற்பு விழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சங்கத்தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான வி.கே.அருந்தவநாதன், எஸ்.கணேஸ் மற்றும் ஓய்வு பெற்ற மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் வை.கைலைநாதன் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.
நிகழ்வில் வடமாகாண கூட்டறவு அபிவிருத்தி தலைமைக் காரியாலய உதவி ஆணையாளர் இ.பாலச்சந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஜ-17)

# சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 4
கோப்பாய் ஸ்ரீ சாந்திலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் பாற்குட அபிசேகமும் மகா சிவராத்திரி விழாவும் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஆலய சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். இந்த தினத்தில் காலை 9 மணிக்கு பாற்குட ஊர்வலமும் நடைபெறும். முற்பகல் 10.30 மணிக்கு பாலாபிசேகத்துடன் இரவு சிவராத்திரி நான்கு சாமப் பூசையும் நடைபெறவுள்ளது. (ற-ஜ-ரி)

# கைதடி இல்ல முதியோர்கள் ஆன்மிகசுற்றுலா

யாழ்ப்பாணம், மார்ச் 4
கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் மாதாந்தம் ஆன்மிக சுற்றுலாவை மேற்கொண்டு வருகின்றனர்.
குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள பிரபல்யமான ஆலயங்களுக்கு முதியோர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர்கள் ஆன்மிக வழிபாட்டில் ஈடுபட்டும் வருகின்றனர்.
ஒவ்வொரு மாதத்தின் கடைசி வாரத்தில் இந்த முதியோர்கள் ஆன்மிக சுற்றுலாவுக்கான ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்கள் பூசை வழிபாடுகளில் பங்கு பற்றியும் வருகின்றனர்.
கடந்தமாத இறுதியில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் முத்தையன்கட்டு, வன்னிச்சி அம்மன் ஆலயம், புதுக்குடியிருப்பு குழந்தை இயேசு தேவாலயம் போன்றவற்றுக்கு முதியோர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.
முதியோர்கள் இவ்வாறு மாதாந்தம் ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதன் மூலம் அவர்களின் ஆன்மிகம் மற்றும் மனவளர்ச்சி, சிந்தனைகள் என்பவற்றின் தாக்கங்கள் குறைவடை வதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ற-17)

# பொதுக் கூட்டமும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,மார்ச் 4
யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வடமராட்சிக் கிளையின் விசேட பொதுக் கூட்டமும், கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி பழைய சந்தைக் கட்டடத்தில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.
சங்கத்தின் தலைவர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், சிறப்புவிருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.மோகன், நெல்லியடி கிராம அலுவலகர் சசிக்குமார், வடமராட்சி கூட்டுறவு உத்தியோகத்தர் நா.குமணதாசன், வடமாகாண சிகை ஒப்பனைச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி.நாகராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-422)

# ஆஸ்திரேலியா அரசால் புலமைப்பரிசில் திட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 4
வடமாகாண அரச திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு ஆஸ்திரேலியா அரசால் 2017 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தப் பயிற்சித் திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் எட்டாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை யாழ்.பொது நூலகத்தில் உள்ள வட மாகாண சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் அமர்வில் கலந்து கொள்ளுமாறு

வீடு வாடகைக்கு உண்டு 076 921 8678
புலோபளை வீதி.பளை பச்சிலைப் பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (60752)(2.18.20)

தவறவிட்டது
நடராசா தர்சனன் என்பவருடைய தே.அ. அட்டை (911312069v). காப்புறுதிப்பத்திரம்.வரிப்பத்திரம்.தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் என்பன இராசாவின் தோட்ட வீதிக்கும். றக்கா வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். (60759)(2.16.20)
077 865 7841 .077 997 7182

தேவை
யாழ் நகரின் மத்தியில் உள்ள சண்றைஸ் மெடிக் கிளினிக்கிற்கு பின்வரும் தகைமைகட்டு ஆள்கள் தேவை.
1. நிர்வாக உத்தியோகத்தர்
2. தாதிய உதவியாளர்/ வரவேற்பாளர் — பெண்
3. கணக்குலிகிதர் Accounts clerk — பெண்
4. இரவுக் காவலாளி — ஆண்
5. அம்புலன்ஸ் சாரதி வயது 50 இற்கு மேல் — ஆண்
நேர்முகத் தேர்வு 06.03.2016 ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடைபெறும்.
இடம்
No.388, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
T.P:021 222 6069 (68529)(2..20)

புகைப்படப்பிரதியாக்கம்
4R-8
பாஸ்போட், விசா,N.I.C அளவிலான புகைப்படப்பிரதிகளையும் கலர்பிறிண்ட் மற்றும் டியுறோ.கிளாஸ் பிறேம்களையும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
யாழ் வீதி மானிப்பாய்.
T.P: 077 949 5065




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சளிப்பரிசோதனை ஆய்வுகூடம் அமைக்கப்பட்டு ஆறு மாத காலமாகியும் பூட்டப்பட்ட நிலையில்

## நோயாளர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க முடியாத நிலைமை

சளி வளர்ப்பு, பரிசோதனை ஆய்வுகூடம் என்பன அமைக்கப்பட்டு ஆறு மாதங்கள் கடந்து விட்ட போதும் இதுவரை அது திறக்கப்படாததால், அதற்கான பரிசோதனையை வெலிசறை மத்திய ஆய்வு கூடத்துக்கே அனுப்பப்பட வேண்டியுள்ளது. அதனால் நோயாளர்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.- இவ்வாறு யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி ஆர். மணிவாசகன் தெரிவித்தார்.

அதேவேளை, எக்ஸ் –றே பிரிவு கல்வி கற்பதற்கு தமிழ்ப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். அப்போது தான் ஆளணிப்பற்றாக்குறை நீக்கப்பட்டு பூரண சேவையை வழங்க முடியும் என்று வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் ஒரே ஒரு காசநோய் சிகிச்சை நிலையமாக பண்ணை காசநோய் சிகிச்சை நிலையம் உள்ளது. அங்கு வளங்கள் ஓரளவு இருந்தாலும், ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருவது நோயாளர்களுக்குப்பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

கடந்த வருடத்தில் சளிப்பரிசோதனையில் கிருமி உள்ள நோயாளர்கள், சளிப் பரிசோதனையில்கிருமி கண்டுபிடிக்கப்படாத நோயாளிகள், சுவா சப்பை சளிப்பரிசோதனை நோயாளர்கள், ஏனைய அங்கங்களில் ஏற்பட்ட சளித்தொற்று நோயாளர்கள் என 274 காச நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நிலையில் இவர்களுக்கு சிறந்த மருத்துவ சேவைகளை வழங்குவதற்கு மருந்து வசதிகள் காணப்பட்ட போதிலும் அதற்கான ஆளணிப் பற்றாக் குறை தொடர்ந்து நிலவிய வண்ணமே உள்ளன.

சளிப் பரிசோதனை செய்தல் தொடர்பான பகுதிக்கு ஆளணி இல்லாத நிலையில் தற்பொழுது ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் அது எமக்குப் போதுமானதாக இல்லை. அதுமட்டுமன்றி எக்ஸ் – றே பகு திக்கு இதுவரை நிரந்தரமாக ஒரு உத்தி யோகத்தரைக் கூட நிய மிக்கவில்லை. தாதியர் ஒருவரே இங்கு நியமிக் கப்பட்டுள்ளார்.

> “எக்ஸ் –றே பிரிவு கல்வி கற்பதற்கு தமிழ்ப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். அப்போது தான் ஆளணிப்பற்றாக்குறை நீக்கப்பட்டு பூரண சேவையை வழங்க முடியும்”

இது எமது சேவைக்கும் நோயாளர்களுக்கும் பெரும் பாதிப்பாக உள்ளது என்று வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் சளிவளர்ப்பு, பரிசோதனை ஆய்வு கூடம் என்பன அமைக்கப்பட்டு ஆறுமாதங்கள் கடந்து விட்டபோதும் இன்றுவரை திறக்கப் படாதுள்ளது. இன்றுவரை இதற்கான பரிசோதனையை மேற் கொள்வதற்கு வெலிசறை மத்திய ஆய்வு கூடத்துக்கே அனுப்பப்படுகிறது.

இதனால் நோயாளர் களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவை தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரனிடம் கேட்டபோது–

ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதில் கொழும்புசுகாதார அமைச்சே பொறுப்பாக உள்ளது. இது பற்றி நாங்கள் கொழும்பு சுகாதார அமைச்சிடம் தெரியப் படுத்தியுள்ளோம்.

எக்ஸ் – றே எடுக்கும் பிரிவுக்கு ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதற்கு முக்கிய காரணம் அந்தப் பிரிவில் தமிழர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். ஏனைய பிரதேசத்தில் இருந்து வருபவர்கள் வரும் கொஞ்ச நாள்களிலே தமது வசதி கருதி இடமாற்றம் பெற்றுச் சென்று விடுகிறார்கள். இந்தப்பிரச்சினை நீக்கப்பட வேண்டுமானால் எக்ஸ் – றே பிரிவு கல்வி கற்பதற்கு தமிழ் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆர்வம் காட்டவேண்டும்.

சளி வளர்ப்புப் பரிசோதனை ஆய்வு கூடம் அமைக்கப்பட்டாலும் இன்னும் பூரணப்படுத்தப்படாமல் உள்ளது. இதற்காக 5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்துக்குள் வேலைகள் நிறைவடைந்து அது திறக்கப்படும்.– என்றார். (ற–ஐ–4–ரி)

# மகிந்தவின் ஆட்சி சரிந்தமைக்கு விமலின் போராட்டமே காரணம்

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அலுவலகத்துக்கு எதிரில் விமல் வீரவன்ச நடத்திய உணவு தவிர்ப்புப் போராட்டமே மிகவும் பலமாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியின் சரிவின் ஆரம்பமாக அமைந்தது என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஐக்கிய நாடுகள் அமைப்பை விமல் வீரவன்ச, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளாக எண்ணினார். அந்த அமைப்புக்கு எதிராக போராட்டம் நடத்தியதால், சர்வதேசம் இலங்கையுடன் கோபம் கொண்டது.

உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்திய வீரவன்சவுக்கு இளநீர் பருகக் கொடுத்து மகிந்த ராஜபக்ச தவறிழைத்தார். இதனால் பல ஆண்டுகள் ஆட்சியில் இருக்க வேண்டிய சந்தர்ப்பத்தை மகிந்த இழந்தார். அத்துடன் குடும்ப அரசியல் குறித்து விமல் வீரவன்சவே முதலில் கூறினார். வீரவன்சவின் இந்தக் கருத்தை ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி என்பன தமது போராட்ட கோசமாக எடுத்துக் கொண்டன.– என்று தெரிவித்துள்ளார். (ற–ஐ–5)

# எமில்காந்தனுக்கு எதிராக மீள நீதிமன்று பிடியாணை

கொழும்பு, மார்ச் 4

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவின் தலைவர் எனக் கூறப்படும் எமில்காந்தனுக்கு எதிராக மீண்டும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

எமில்காந்தனுக்கு எதிராக பிடியாணை மற்றும் இன்ரபோலின் சிவப்பு அறிவித்தல் என்பன வெளியிடப்பட்டிருந்தது. நீதிமன்றத்தில் முன்னிலையாவதாக அவரது சட்டத்தரணி மூலம் எமில்காந்தன் அறிவித்ததை அடுத்து, குறித்த பிடியாணை விலக்கிக் கொள்ளப்பட்டது. சந்தேகநபர் இதுவரை நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை எனவும், இது பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது என்றும் நீதிமன்றத்தில் நேற்று அரச தரப்பு சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

அதனடிப்படையில் சந்தேகநபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அய்ராங்கனி பெரேரா உத்தரவிட்டுள்ளதுடன், சந்தேகநபர் எந்தச் சந்தர்ப்பத்திலும் நீதிமன்றத்தில் சரணடைய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வழக்கை மே மாதம் 18 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிவான் தீர்மானித்துள்ளார். (ற–ஐ–5)

# அபிவிருத்திக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 4

வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகப்பிரிவு அபிவிருத்தி குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களான இராஜங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்.மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேச விவசாயம், கடற்றொழில் சுகாதாரம், வீதிகள் நிர்மாணிப்பு, போக்குவரத்து உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன.

அத்தோடு கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை எதிர்த்துவரும் வடமராட்சி கிழக்குப் பட்டப்படிப்புமாணவர்கள் ஒன்றியம், வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியம், மற்றும் கடற்றொழிற்சங்கங்கள் உள்ளிட்ட அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற–ஐ–422–173)

# உளநலநோன்பும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 4

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியால் நடத்தப்படும் மங்கையர் தம் உடல் உளநலனோன்பும் கருத்தரங்கும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரிக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் வளவாளர்களாக தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் செல்வி.மருத்துவர் கிரிசாந்தி ராஜசூரியர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணர் மருத்துவர் எஸ். சிவதாஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற–ஐ–422)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்

மகா சிவராத்திரி விழா

மன்மத ஆண்டு மாசித்திங்கள் 24 ஆம் நாள்
(07.03.2016) திங்கட்கிழமை

அதிகாலை 6.00 மணி தொடக்கம் அடுத்தநாள் 6 மணிவரை
(24 மணித்தியாலங்கள்)
“ஓம் நமசிவாய சிவாயநம ஓம்”
என்னும்
திருவைந் தெழுத்து மந்திரம்
ஓதும்
அகண்டநாம வழிபாடும்
நான்கு யாமங்களிலும் விசேட அபிஷேக, பூசையும்
நள்ளிரவு 12.00 மணிக்கு
இலிங்கோற்பவருக்கு விசேட அபிஷேக,
ஆராதனையும்
அதிகாலை “துர்வாச சாகரம்” எனப்படும்
புண்ணிய
சமுத்திரத்தில் தீர்த்த நிகழ்வும் மாணிக்கவாசகர்
அன்னதான சபையினரால் பாறணையை
முடிப்பதற்கு
திருவமுது வழங்கலும் நடைபெறத்திருவருள்
கைகூடியுள்ளது.
சிவனடியார்கள் திரண்டு வருக
ஐந்தெழுத்து மந்திரம் ஓதி திருவருள் பெறுக.

ஆதீனகர்த்தாக்கள் காரைநகர் மணிவாசகர் சபை
திரு. ஆ. அம்பலவிமுருகன்
திரு. மு. சுந்தரலிங்கம்

அனுசரணை: கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(69770 (13.20)

பாராட்டி வாழ்த்துகிறோம்

திரு.பொன்னையா
தெண்டாயுதபாணி



வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஓய்வுபெற்ற திடீர்ப்பரிசோதகர். இவர் பல்லாண்டு காலமாக எனக்குத் தெரிந்தவர். இவர் எமது கல்லூரியில். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் உபதலைவராகவும், உப செயலாளராகவும் பல ஆண்டு காலமாகப் பணியாற்றியுள்ளார். இவர் பணியாற்றும் காலத்தில் ஆசிரியர்கள் ஆசிரியைகளிடமும் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். இவர் எமது கல்லூரியில் மாணவராகப் படிக்கும் காலத்தில் கரப்பந்தாட்டக்குழு தலைவராகவும் பச்சை இல்லத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இவர் ஒரு சமூகத் தொண்டனுமாவார். இவருக்கு 01.09.2014 அன்று சமாதான நீதிவான் பதவி கிடைத்ததைக் கேள்விப்பட்டதும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்துள்ளோம். இவர் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்ந்து மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டுமென்று கல்லூரி சார்பாக வாழ்த்துகின்றோம்.

(69536)(14,18.20) யா/வட்டு-இந்துக் கல்லூரி சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணின் மடியில்
31 . 07 . 1956

ஆண்டவன் நிழலில்
19 . 02 . 2009

## அமரர் சண்முகராஜா குலேக்மலர்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
பாசத்தின் உறைவிடமே! அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்முடன் வாழ்ந்த காலங்கள் பொன்னானவை
என்றுமே பசுமையானவை. நீங்கள் மறைந்து ஆண்டுகள்
ஏழு சென்றாலும், எங்கள் மனதை விட்டு என்றுமே மறைந்ததில்லை.
மறையப் போவதுமில்லை ஆண்டவன் அருகில் அமைதிபெற
எல்லோரும் பிரார்த்திக்கின்றோம்.

68, கணேசபுரம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
20 . 12 . 1936

மறைவு
05 . 02 . 2016

கடந்த 05.02.2016 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## சங்கரப்பிள்ளை சோமசேகரம்பிள்ளை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.03.2016) வெள்ளிக் கிழமை கீரிமலையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வு 06.03.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

231.திருநகர். கிளிநொச்சி. (69748)(11.19.20) குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
## கனகம்மா கந்தையா
(புங்குடுதீவு)



தோற்றம்
20.07.1933

மறைவு
03.02.2016

எமது குடும்பத் தலைவியின் மரணச்செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமாகவும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து எமக்கு அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.03.2016) வெள்ளிக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் அனைவரும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ள வேண்டும் என்று அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

4ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (69782)(11.18.20) குடும்பத்தினர்.

# நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 4

பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 22 ஆம் திகதி திங் கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைவராக சொ.சிவயோகலிங் கமும், உப தலைவராக திருமதி சிவாஜினி முகிலனும், செயலாளராக ந.சசிதரனும், உபசெயலாளராக த.அருண கிரிநாதனும், பொருளாளராக திருமதி றாஜினி ஜெய காந்தனும் மற்றும் உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர் என நிலையத்தி னர் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை செல்வி சுமதி கதிரவேலு
அவர்களின் தாயார்

## திருமதி மேரிநவமணி கதிரவேலு

அவர்கள் கர்த்தருக்குள் மரித்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/கோப்பாய் மகாவித்தியாலயம். (69789)(11,18,20)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
21.12.1939

மறைவு
23.02.2014

அமரர்
## கிருஸ்ணபிள்ளை கணேசன்

ஈராண்டுகள்சென்றாலும் கண்ணின் ஈரம் இன்னும் காயவில்லை அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

வைரவர் கோயிலடி,
காலுவன், சுழிபுரம்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் திருமதி
## பூமணி இராஜேந்திரன்
(பூமணி அம்மா)

தோற்றம்
15.12.1952

மறைவு
14.02.2015



எங்கள் குடும்பத் தலைவியாய்,
வாழவைத்த தெய்வமாய்,
எம்முன்னே தோன்றாப் பொருளாய்!
நல்வாழ்க்கைத் துணையாய்
எம்மோடு ஒன்றாய் இணைந்து வாழ்ந்தீர்கள்
என்றென்றும் உங்கள் நினைவலைகள்
எம்மை விட்டு அகலாது!
உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தங்கள் நினைவுகளுடன்...

குடும்பத்தினர். இந்திர அம்மன் கோயிலடி,
துன்னாலை, கரவெட்டி. (65941)(11.18.20)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
## செல்லம்மா சிவசாமி

பிறப்பு:
11.06.1921

இறப்பு
04.03.2014

திதி: வளர்பிறை சதுர்த்தி
(12.03.2016)

ஆண்டுகள் இரண்டானாலும் உம்மை என்றும் மறவோம்
ஆண்டவன் சந்நிதியில் என்றும் உம்
ஆத்ம சாந்திக்காக இறைவனை அனுதினம் இறைஞ்சுகின்றோம்!
ஆறுதல் கிடைத்தாலும் உம் நினைவலைகள் என்றும்
எம் மனதில் நிலைத்து நிற்கின்றன!
எம் பாசமுள்ள அம்மாவே. எங்கு சென்றாய்
உம் திருவடி நிழலை வாழ்த்தி வணங்குகின்றோம்!
உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வெளிச்சவீட்டு ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை. (69942)(11.20)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# ஹஜ் கோட்டாவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 4

இந்த ஆண்டு இலங்கைக்கான ஹஜ் கோட்டாவை அதிகரிக்கும் நோக்குடன் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம், இரா ஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி தலைமையிலான குழுவொன்று சவூதி அரேபியாவுக்கு நேற்றுப் புறப்பட்டுச் சென் றுள்ளது என்று முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்தது.

சவூதிஅரேபியாவால்விடுக்கப்பட்ட அழைப் பின் பேரிலேயே இலங்கை ஹஜ் குழு வினர் அங்கு சென்றுள்ளனர். இந்தப் பயணத்தின்போது சவூதியின் ஹஜ் துறை சார்ந்த அமைச்சர் உள்ளிட்ட அதி காரிகளை இலங்கைக் குழுவினர் சந்தித் துப்பேசவுள்ளனர். சவூதிஅரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அஸ்மி தாஸிமும் இந்தச்சந்திப்புக்களில்கலந்துகொள்ளவுள் ளார். இதன்போது ஹஜ் கோட்டாவை 7 ஆயிரமாக அதி கரிப்பதுதொடர்பில் அதிகளவில் கலந் துரை யாடப்படவுள் ளது.

மக்கா, மதீனாவில் இலங்கை ஹஜ் ஜாஜிகளின் வசதி வாய்ப்புகள், பாது காப்பு, உணவு விநி யோகம், போக்கு வரத்து வசதிகள் என்பன பற்றியும் கலந்துரையாடப்படும் என்று தெரி விக்கப் பட்டுள்ளது (ற-ஐ-5)

# திருட்டு மின்சாரம் மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

அச்செழுவில் சட்ட விரோதமாக மின் சாரம் பெற்று வந்த 3 பேருக்கு 69 ஆயிரம்ரூபா அபரா தம் விதித்தது நீதி மன்று. மல்லாகம் நீதிமன்றில் இந்த வழக்கு விசார ணைக்கு வந்தது.

மின்சார சபையின் புலனாய்வு அதி காரிகளும், அச்சு வேலி பொலிஸா ரும் இணைந்து கடந்த வாரம் திடீர் சோதனை நடவடிக் கையில் ஈடுபட்டனர். இதன்போது மின்மா னியைச் சேதப் படுத்தி மின்சாரம் பெற்ற ஒருவரும், பிரதான மின் வடத் தில் இருந்து மேல திக வயர் கொழுவி மின்சாரம் பெற்ற இருவருமாக மூவர் கைது செய்யப்பட்டி ருந்தனர். இரு வருக் குத் தலா 26 ஆயிரம் ரூபாவும், மற்றைய வருக்கு 17 ஆயிரம் ரூபாவும் அபராத மாக விதிக்கப்பட்டது. (ற-ஐ-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்மாணவேலை முடிவுற்றும் மூடப்பட்டுள்ள பிரதேச வைத்தியசாலையின் புதிய கட்டடம்

## கொடிகாமம் பிரதேச மக்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம்,மார்ச் 4
தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக் களுக்கென பல மில்லியன் ரூபா செலவில் கொடிகாமத்தில் நிர்மாணிக்கப்பட்ட பிரதேச வைத் தியசாலைக்கான மாடிக் கட்டடம் இன்னமும் திறக்கப்படாது - பொது மக்களின் பாவனைக்கு வழங் கப்படாதுள்ளது என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்ற னர்.

இதுகுறித்துக் கேட்டபோது - வைத்தியசாலைக்கான கட்டடம் நிர்மாணித்தலில் தரக் குறைபாடுகள் காணப்படுகின் றன. அது பற்றிய பேச்சு இடம் பெற்று வருகிறது. அந்தக் குறை பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் இந்த வருட முடிவுக்குள் அந்தக் கட்டடத்தைப் பயன் பாட்டுக்கு விட முடியும் என்று சுகாதார அமைச்சின் செயலா ளர் தெரிவித்தார்.

பிரதேச மக்களின் வேண்டு கோளின் பிரகாரம் வைத்திய சாலையில் விடுதி வசதிகளுடன் கூடிய மாடிக் கட்டடம் அமைக் கப்பட்டு வேலைகள் பூர்த்தி யடைந்துள்ளன. நிர்மாண வேலை கள் பூர்த்தியடைந்த போதிலும் இன்னமும் திறக்கப்படவில்லை.

கொடிகாமம் பிரதேசத்துக்கான வைத்தியசாலை ஆரம்பகாலத் தில் மத்திய மருந்தகமாகவும் பின்னர் விடுதி அமைக்கப்பட்டு மகப்பேற்று நிலையமும் செயற் பட்டுவந்தன. 2000ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் ஏற்பட்ட சேதம் காரணமாக அவை புனர மைப்புச் செய்யப்பட்டதுடன் வெளிநோயாளர் பிரிவுக்கென தனியான கட்டடம் அமைக் கப்பட்டு இயங்கி வருகிறது.

இந்த நிலையில் பிரதேச பொது அமைப்புகள் மற்றும் மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து விடுதிகளுடன் கூடிய மாடிக் கட் டடம் நிர்மாணிக்கப்பட்டு வேலை கள் பூர்த்தியடைந்துள்ளன.

> பிரதேசத்தைச் சேர்ந்த பதினைந் துக்கு மேற் பட்ட கிராமங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்துக்கும் அதிகமான மக் கள் தமது வைத்திய தேவைகளுக்காக வேறு வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்

இந்த வைத்தியசாலை யில் இரு வைத்திய அதிகாரிகள் கடமையாற்றுகின்ற னர். யாழ். பிராந்திய சுகா தார சேவை கள் பணிப் பாளருக்கு பிரதேச மக்கள், பொது அமைப் புகள் விடுத்த வேண்டு கோளையடுத்து, நிதி ஒதுக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டு வேலை கள் ஆரம்பிக்கப்பட்டு கடந்த வருடம் வேலை கள் பூர்த்தி செய்யப் பட்டு கட்டடம் கையளிக் கப்பட்டுள்ளது. ஆனால் அது இன்னமும் திறக் கப்படாதுள்ளதால் பிர தேசத்தைச் சேர்ந்த பதினைந் துக்கு மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்துக்கும் அதி கமான மக்கள் தமது வைத்திய தேவைகளுக்காக வேறு வைத்தி யசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சுகாதார அமைச் சின் செயலாளர் திருவாகரனிடம் கேட்ட போது:

குறித்த கட்டடத்தைப் பரிசோதித்த போது அவற்றில் கட்டடத் தரத் தில் சில குறைபாடுகள் காணப் படுகின்றமை அவதா னிக்கப்பட் டுள்ளது. அந்தக் கட்டடம் மத்திய அரசால் ஒப்பந்தகாரர் நியமிக் கப்பட்டு நிர்மாணிக்கப் பட்டுள்ளது. அதனால் கட்டடக் குறைபாடு தொடர்பில் மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பேச்சு இடம்பெற்று வருகிறது. குறைபாடுகள் தீர்க் கப்பட்டு இந்த வருடம் அதனைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார். (ந-ஜ-4-9)

### நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 4
வடமாகாணத்திலுள்ள பாட சாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரி கள் மூலமாக ஆசிரியர் சேவை 3.1 இற்கு நியமனம் செய்வதற் கான நேர்முகத்தேர்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற வுள்ளது.

கல்வி அமைச்சின் அலுவலகத் தில் இன்று காலை 8.30 தொடக் கம் தேர்வு இடம்பெறவுள்ளது என்று வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வவுனியா மாவட் டங்களிலிருந்து பட்டதாரிப் போட்டிப் பரீட்சைக்குத் தோற் றிச் சித்தியெய்திய, தமிழ் பாடத்துக்கு விண்ணப்பித்தவர் கள் அவர்களின் தகைமை களைப் பரிசீலனை செய்வதற் கான உரிய ஆவணங்களுடன் வருமாறு அழைக்கப்பட்டுள்ள னர்.

தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ், க.பொ.த உயர்தர மற்றும் சாதாரணதரச் சான் றிதழ், பட்டச் சான்றிதழ், பாட சாலை அதிபர், கிராம அலு வலரின் நற்சான்றுப் பத்திரம், வதிவிடச் சான்றிதழ், வாக்காளர் இடாப்பின் ஒரு பிரதி என்பவற் றுடன் சமுகமளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள் ளது. (ந-ஜ-4)



எழுதுமட்டுவாழ் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த பிக்கப் ரக வாகனம் வீதியை விட்டு விலகிக் குடைசாய்ந்து சேதமடைந்தது. வாகனத்தினுள் நால்வர் பயணித்தபோதிலும், அவர்கள் தெய்வாதீனமாக சிறுகாயங்களுடன் தப்பினர். கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கருவாடு ஏற்றிவந்த வாகனமே இவ்விதம் குடைசாய்ந்தது. (ந-ஜ-9)

### முன்பள்ளி கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 4
கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத்திட்டத்தின் கீழ் நாம கள் சனசமூக நிலையத்தால் அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட் டடத்தின் திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ். மாவட்ட அரச அதி பர் நா. வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக காணி மேலதிக மாவட்ட செயலர் முரளி தரனும், பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் திருலிங்கநாதனும், சண்டிலிப் பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கிருஷ்ணேந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறித்த வேலைத்திட்டத்துடன் கிராம மக்களின் நிதிப்பங் களிப் புடனும் இந்த கட்டடம் அமைக் கப்பட்டதுஎன்றும்தெரிவிக்கப்பட் டது. (ந-ஜ-ரி)

### வருடாந்த பெருந் திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 4
துன்னாலை மத்தி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தின் வரு டாந்தப் பெருந்திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி மகா சிவ ராத்திரியன்று வேட்டைத் திருவிழாவும், 8ஆம் திகதி தேர்த் திருவிழாவும். மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடை பெறவுள்ளன. (ந-ஜ-422)

# காணாமற் போனோர் குறித்த ஆணைக்குழு அமர்வில் பலர் நட்டஈட்டுக்கு விண்ணப்பம்

சாவகச்சேரி,மார்ச் 4
தென்மராட்சி பிரதேச செயல கத்தில் நடத்தப்பட்ட காணாமற் போனோர் தொடர்பான விசார ணைகளை மேற்கொண்ட குழு வினரின் பரிந்துரையின்படி இதுவரை 50க்கும் மேற்பட்டோர் நட்டஈட்டுக்கு விண்ணப்பித்துள் ளனர். தொடர்ந்து விண்ணப்பங் கள் பொதுமக்களால் சமர்ப்பிக் கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமற் போனோர் தொடர் பான விசாரணைகள் கடந்த பெப்ரவரி29, மார்ச் 1 ஆகிய திகதி களில் தென்மராட்சி பிரதேச செய லக மண்டபத்தில் நடத்தப்பட்டன. 29 ஆம் திகதி தென்மராட்சி மற் றும் வடமராட்சி கிழக்கு ஆகிய பிர தேசங்களைச் சேர்ந்த 203 பேரும், மார்ச் 1 ஆம் திகதி தென மராட்சி பிர தேசத்தைச் சேர்ந்த 142 பேரும் அழைக்கப் பட்டிருந்தனர். முதல்நாள் புதிதாகப் பதிவு செய்த 54 பேரில் 12 பேர் உட்பட 171 பேர் அமர்வில் பங்குபற்றி னர். மறுநாள் ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்ட விசாரணைகளில் பங்குபற்ற முடியாதவர்கள் உட்பட 102 பேர் அமர்வில் கலந்து கொண்டனர்.

குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பீ.பரணகம பொதுமக்கள் மத்தி யில் கருத்துத் தெரிவித்தபோது காணாமற் போனோர் தொடர் பான விசாரணைகளின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப் படும். ஜனாதிபதியின் நடவடிக்கை தொடரும். பத்து வருடங்களுக்கு மேலாக காணாமற் போனவர் களின் குடும்பத்தினர் [illegible] [illegible] விரும்பின் அதற்குரிய படிவத்தைப் பூர்த்தி செய்து வழங்கினால், குடும்ப நிலைக்கேற்ப நட்டஈடு மற்றும் சமுர்த்தி நிவாரணம் போன்ற வற்றுடன் சுயதொழில் உதவிகள் வழங்கப்படும்.-என்றுதெரிவித்தார்.

அதையடுத்து பலர் சான்றிதழ் பெற விருப்பம் தெரிவித்தனர். அதையடுத்துக் குறித்த குடும் பங்களுக்கான இழப்பீட்டைத் துரிதகதியில் வழங்குமாறும் அத்துடன் சமுர்த்தி நிவாரணம் மற்றும் சுயதொழில் முயற்சி உதவி வழங்க பரிந்துரை செய் யப்பட்டும் உத்தரவிடப்பட்டுள் ளது. இந்தக் குடும்பங்களுக் கான சமுர்த்தி நிவாரணம் வழங் குவதற்கான ஏற்பாடுகள் தென் மராட்சிபிரதேசசெயலகத்தால்மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரியில் நடைபெற்ற காணாமற் போனோர் தொடர் பான விசாரணைகளில் வட மராட்சி கிழக்குப் பிரதேச மக் களும் கலந்து கொண்டுள் ளதால், அவர்களின் விண் ணப்பங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுத் தேவையான வற்றை அந்தப் பிரதேச செய லகம் ஊடாக வழங்க ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காணாமற் போனோர் தொடர் பான நட்ட ஈடுபெற சம்மதம் தெரிவித்த பொதுமக்களுக்கு உடனடியாகவழங்கநடவடிக்கை எடுக்குமாறு ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பீ.பரண கம விடுத்த பரிந்துரையை உறு திப்படுத்தி ஆணைக்குழுவின் செயலாளர் குணதாச அனுமதி வழங்கியுள்ளார். (ந-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பாம்பு தீண்டி இளைஞன் சாவு

மன்னார், மார்ச் 4
மன்னாரில் பாம்புக்கடிக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சை பெற்று வந்த மாற்று வலுக் கொண்ட இளைஞன் ஒருவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மன்னார் தோட்டவெளி கிராமத்தைச் சேர்ந்தவராவார்.
குறித்த இளைஞன் கடந்த 29 ஆம் திகதி இரவு தோட்டவெளி கிராமத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து காட்டுப்பாதையூடாக உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றபோதே பாம்புதீண்டலுக்கு உள்ளாகியுள்ளார். உடனடியாகக் குறித்த இளைஞன் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டார்.
எனினும் குறித்த இளைஞனின் நிலை கவலைக்கிடமான நிலையில் காணப்பட்டமையால் குறித்த இளைஞன் மீண்டும் மன்னார் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் குறித்த இளைஞன் நேற்று வியாழக்கிழமை அதிகாலை சிகிச்சை பயனின்றி மன்னார் பொது வைத்தியசாலையில் உயிரிழந்தார்.
(ற-ஜ-56)



இதுவரை காலமும் பொலிஸ் காவலரணாக இயங்கிய தருமபுரம் பொலிஸ் காவலரண் நேற்று முதல் பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. தருமபுரம் பொலிஸ் நிலைய அதிகாரி சதுரங்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண பொலிஸ்மா அதிபர் பெர்னாண்டோ, யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பெரேரா, கிளிநொச்சி பிரதம பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த சிறிவர்த்தன, உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ச மற்றும் மதத்தலைவர்கள், மருத்துவர்கள், கிராம சேவகர்கள் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.
(ற-ஜ-ரி3)

# அண்ணாவிமார் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 4
வன்னிக்குறோஸ் கலாசார பேரவையின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அண்ணாவிமார்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மாலை புதுக்குடியிருப்பு பொன் விழா மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் குதிரையாட்டம், காவடியாட்டம், இனியம், மற்றும்செம்புநடனம்அணிவகுத்து வர சிறப்பு விருந்தினர்களும், அண்ணாவிமார்களும் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.
வன்னிக்குறோஸ் கலாசார பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் சி.சிவமோகன், நடிகர் சண்முகராஜன், வன்னிக் குறோஸ் கலாசார பேரவையின் சர்வதேச இணைப்பாளர் தவசீலன்மற்றும்கலைஞர்கள், மக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண் டனர்.
தென்னிந்திய சினிமா நடிகரும், மதுரையில் நிழல் தியேட்டர் என்ற நாடகக்குழுவையும், நடிப்புபயிற்சிமையத்தையும் நடத்தி வருபவருமான நடிகர் சண்முகராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு அண்ணாவிமார்களைக் கௌரவித்தார்.
(ற-ஜ-ரி7)

# ஆசிரிய மத்திய நிலையத்தை அக்கராயனில் அமையுங்கள்

## ஆசிரியர்கள், பொது அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 4
கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய ஆசிரிய மத்திய நிலையத்தை அது முன்னர் இயங்கிய அக்கராயனில் தான் அமைக்க வேண்டும். கிளி நொச்சி வயலக் கல்வி அலுவலகத்தில் அதனை அமைக்கக்கூடாது. - இவ்வாறு ஆசிரியர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் சார்பில் வலியுறுத்தப்பட்டு வருகிறது.
கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய அக்கராயனில் உள்ள ஆசிரிய மத்திய நிலையமானது போரால் பாதிக்கப்பட்டு அழிவடையும் நிலையில் உள்ளது. அதனால் குறித்த கட்டடத்துக்குப் பதிலாகப் புதிய கட்டடம் அமைத்துத் தருமாறு நீண்டகாலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் அதனை அமைப்பதற்கு கல்வி அமைச்சு நிதி ஒதுக்கியுள்ளது.
ஆனால், வலயக் கல்வி அதிகாரிகள், புதிதாக அமையவுள்ள ஆசிரிய மத்திய நிலையத்தை வலயப் பணிமனை அமைந்துள்ள வளாகத்தில்

> “104 பாடசாலைகளுக்குமாக தற்போது வரை ஒரேயொரு ஆசிரிய வள நிலையம் மட்டுமே உள்ளது.”

அமைக்க முற்படுகின்றனர் என்றும், அதற்காக அங்குள்ள ஆசிரியர்கள் தங்கும் விடுதியை இடித்து அகற்றி விட்டு அந்த இடத்தில் ஆசிரிய மத்திய நிலையக் கட்டடம் அமைக்க முயற்சிக்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 104 பாடசாலைகளுக்குமாக தற்போது வரை ஒரேயொரு ஆசிரிய வள நிலையம் மட்டுமே உள்ளது. அதனால் அனைத்துத் தேவைகளுக்கும் நீண்ட தூரம் பயணம் செய்து நகரின் மத்திக்குச்செல்ல வேண்டியுள்ளதுடன் கிராமத்தின் அபிவிருத்திகளும்தடைப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.
இந்த நிலையில் குறித்த ஆசிரிய வள நிலையத்தை அக்கரரயனில் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது.
இவ்வாறு குறித்த பிரதேச ஆசிரியர்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது-
கிளிநொச்சி மாவட்டத்தின் ஆசிரிய மத்திய நிலைய அடுக்குமாடிக் கட்டடத்துக்காகவும், அதற்குத் தேவையான உபகரணங் களுக்குமாகவும் 50 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதற்கான இறுதிக் கூட்டம் எதிர்வரும் வாரமே இடம்பெறவுள்ள நிலையில் கட்டடம் அமையவுள்ள இடம் தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை- என்றார்.
(ற-ஜ-4-101)

# கிளி. கனகபுரம் ம.வி. நிர்வாகத்தை சீரமைக்குமாறு கோரிப் போராட்டம்

## பழைய மாணவர்கள், பெற்றோர் நேற்று முன்னெடுப்பு



கிளிநொச்சி, மார்ச் 4
பாடசாலை நிர்வாகத்தை மறு சீரமைக்குமாறு கோரி கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக பழைய மாணவர்களும், மாணவர்களின் பெற்றோரும் இணைந்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.
இதன் போது பாடசாலையின் அதிபர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர். ஆயினும் “பதவியேற்று 8 மாதங்களே முடிவடைந்துள்ளன. பெரியளவில் மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. கால அவகாசம் தேவை” என்று பாடசாலையின் அதிபர் இதற்குப் பதில் வழங்கினார்.
போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பாடசாலை அதிபருக்கு எதிராக பிரதானமாக ஆறு குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தனர்.
இடப் பெயர்வின் பின்னர் பாடசாலையில் ஆளுமைமிக்க தலைமைத்துவம் இல்லாமையால்,பாடசாலை நிர்வாகம் பின்னடைந்துள்ளது. பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை பழைய மாணவர்களாகிய நாம் முன்னெடுத்து வருகையில்,தற்போதுள்ள அதிபர் எம்மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கின்றார்.
அதிபர், ஆசிரியர்களைச் சுயமாகச் செயற்பட விடாது இடையூறு விளைவிப்பதுடன் மன உளைச்சலுக்கும் உள்ளாக்குகின்றார். சிறப்பாகச் செயற்பட்ட பிரதி அதிபரை இதுவரை செயற்படவிடாது அவரை மன உளைச்சலுக்கு உள்ளாக்கி அவரை இடமாற்றம் பெற வைத்துள்ளார்.
மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் கவனத்தைச் செலுத்தாது,தனது பதவியை மாத்திரம் தக்க வைப்பதற்கான செயற்பாடுகளில் மட்டும் கவனத்தைச் செலுத்துகின்றார் என்ற குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தனர்.
இந்தப் பிரச்சினைகளை எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக்கல்விப்பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர், கல்வி அமைச்சர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித பதிலும் இல்லை. உரியவர்களிடம் இருந்து பதில் கிடைக்காத பட்சத்தில் போராட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும் போராட்டத்தில் பங்கெடுத்த பழைய மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பாக பாடசாலை அதிபரிடம் கேட்ட போது, அதிபராகப் பொறுப்பேற்று 8 மாதங்களேமுடிவடைகின்றன. அதற்கிடையில் பெரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. பழைய மாணவர்களில் ஒரு பகுதியினர் பாடசாலை நிர்வாக விடயத்தில் தலையிட முனைகின்றனர். அதற்கு நான் அனுமதி வழங்கவில்லை.
இதன் காரணமாக இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஆசிரியர்களின் நேர அட்டவணை மற்றும் அவர்களின் செயற்பாடுகளில் தலையிட பழைய மாணவர்கள் முனைந்த போது அதற்கான அனுமதியை நான் வழங்க வில்லை - என்று பாடசாலை அதிபர் குறிப்பிட்டார்.
(ஜ-5-ரி3)

# உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 4
பனைசார் உணவு உற்பத்திகளின் தரக்கட்டுப்பாடு மற்றும் தர நிர்ணயத்தை மேற்கொள்ளத் தேவையான உபகரணத் தொகுதிகளைக் கையளிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெறும் என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.
இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும், அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.
(ற-ஜ-ரி)

# கலாசார பேரவையின் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தேசிய கருத்திட்டத்துக்கு அமைவாக கலாசார அதிகார சபையின் அங்குரார்ப்பண நிகழ்வும், கலாசார பேரவையின் பொதுக் கூட்டமும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று யாழ். பிரதேச செயலர் சு. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.
(ற-ஜ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகர சபை சுகாதார ஊழியர் நிரந்தர நியமனம் கோரிப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்கள் நிரந்தர நியமனம் வழங்கக் கோரி, மாநகர சபையின் முன்பாக நேற்றுக் காலை முதல் நண்பகல் வரையில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
180 பேர் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக யாழ். மாநகர சபையில் சுகாதார ஊழியர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். நாளாந்தச் சம்பளத்தின் அடிப்படையில் கடமையாற்றும் தம்மை, நிரந்தர நியமனத்துக்குள் உள்வாங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கடந்த காலங்களில், நிரந்தர நியமனம் வழங்கக் கோரி மேற்கொள்ளப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது, வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் 3 மாத காலத்துக்குள் நிரந்தர நியமனம் பெற்றுத்தரப்படும் என்று வாக்குறுதி வழங்கினார்.
அந்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றவில்லை. கடந்த காலங்களில் இருந்த யாழ். மாநகர சபை ஆணையாளர்கள் 3 பேரிடமும் நிரந்தர நியமனம் வழங்கவலியுறுத்தியிருந்தோம் என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.
தமது குடும்பச் சூழ்நிலைகள் மற்றும் வாழ்வாதார நிலமைகளைக் கருத்திற்கொண்டு தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறு வலியுறுத்தியுள்ளனர்.



யாழ்ப்பாணம், கொடிகாமம், வட்டுக்கோட்டை, புன்னாலைக் கட்டுவன் போன்ற பகுதிகளில் இருந்து யாழ். மாநகர சபைக்கு வருகை தந்து தாம் வேலை செய்கின்றோம் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.
யாழ். மாநகர சபை ஆணையாளரைச் சந்தித்து நிரந்தர நியமனம் குறித்துக் கலந்துரையாடியபோது, வயதெல்லை அடிப்படையில் 16 பேருக்கு மட்டும் நிரந்தர நியமனம் தரப்படும் என்று தெரிவித்தார்.
180 பேரில் 16 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதை ஏற்றுக் கொள்ள மறுத்த சுகாதார ஊழியர்கள், அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமென வலியுறுத்தினர். இன்று வெள்ளிக்கிழமை வட மாகாண முதலமைச்சர் அலுவலகத்தின் முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபடவுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ந-ஜ-5-106)

## தொழிற் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்


யாழ்ப்பாணம்,மார்ச் 4
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையால் முதன்முதலாக தேசிய தொழில் தகைமை (என். வி.கியூ) முறைக்கமைய நீர்க்குழாய் பொருத்துநர் கற்கைநெறி ஆணைக்கோட்டை தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
இந்தக் கற்கை நெறிகளுக்கான பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கற்கை நெறியில் இணைய கற்க விரும்புவர்கள் தங்களது பதிவுகளை அலு வலக நேரத்தில் மாவட்ட அலு வலகம், முதலாம் மாடி வீர சிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
(ந-ஜ-ரி)

## பாவனையாளர்கள் அதிகார சபையின் மாவட்ட அலுவலகம் புதிய கட்டடத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 4
இதுவரை காலமும் மாவட்ட செயலகத்தின் பழைய கட்டடத்தில் தமது பணிகளை முன்னெடுத்து வந்த பாவனை யாளர்கள் அதிகார சபையின் மாவட்ட அலுவலகம், தற்போது புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.
புதிய கட்டட அலுவலகத் திறப்பு விழா பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இணைப்பதிகாரி தனசேகரன் வசந்த சேகரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.
அங்கு கருத்துத் தெரிவித்த அதிகார சபையின் இணைப்பதிகாரி வசந்தசேகரன்-
கடந்த காலங்களில் இடப் பற்றாக்குறையுடனும், ஆளணிப் பற்றாக்குறையுடனுமே நாம் மக்களுக்கு சேவைகளை மேற்கொண்டு வந்திருந்தோம்.
தற்போது புதிய கட்டத்தில் தேவையான உள்ளக வசதிகளுடன் போதிய ஆளணியுடன் பணிகளை மேற்கொள்ள முடிகிறது வர்த்தக நிலையங்களுக்கு எதிராக பொதுமக்கள் முறைப்பாடுகளை பதிவு செய்த அரை மணிநேரத்தில் உரிய நடவடிக்கைமேற்கொள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் தயார் நிலையில் உள்ளனர்.
காலாவதியான பொருள்கள் விற்பனை, பொதுமக்களை ஏமாற்றும் நிறுவனங்களுக்கு எதிராகவும் உடனடியாக நீதிமன்றின் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.
(ந-ஜ-107)

## சாரதிகளுக்கு அபராதம்

சாவகச்சேரி, மார்ச் 4
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற லாண்ட் மாஸ்டர் சாரதிக்கும், வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதிக்கும் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப் பட்டது.
மிருசுவில் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற வேளையில், ரோந்து சென்ற கொடிகாமம் பொலிஸாரிடம் அகப்பட்ட லாண்ட மாஸ்டர் சாரதிக்கு 35 ஆயிரம் ரூபாவும், வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் சென்ற வாகனச் சார திக்கு 20 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ந-ஜ-9)



கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று ஓட்டோவுக்குள் புகுந்தது. அவற்றின் சாரதிகள் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ந-ஜ-4,109)

## கீரிமலையில் சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 4
தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தினரின் சிவராத்திரி விழா கீரிமலை சிவபூமி யாத்திரிகர் விடுதியில் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7 மணிக்குத் தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத் தலைவர் ச.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.
சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு.திருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில், கரகாட்டம், காவடி ஆட்டம், நடனம், ஒயிலாட்டம் என்பனவும், இன்றைய சூழலில் ஆன்மிகத்தை இளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்வது குடும்பத்தின் பங்களிப்பா? சமூகத்தின் பங்களிப்பா? என் னும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளன.
விசேட நிகழ்வாக தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் புகழ்பூத்த கலைஞர்கள் வழங்கும் அரிச்சந்திர மயான காண்டம், சத்தியவான் சாவித்திரி ஆகிய இசை நாடகங்கள் நடைபெறவுள்ளன என்றும் தெரிவிக் கப் பட்டுள்ளது. (ந-ஜ-ரி)

## பணம் கொடுத்தும் மணல் இல்லை; ஆலயப் புனரமைப்புகள் நிறுத்தம்

சாவகச்சேரி, மார்ச் 4
ஆலய உற்சவம் ஆரம்பிப்பதற்கு முன்னர் புனரமைப்பு வேலைகளைச் செய்து முடிப்பதற்காக பணம் செலுத்தி ஒரு மாதத்துக்கு மேலாகியும் மணல் கிடைக்காததால் புனரமைப்பு வேலைகளை இடை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயப் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.
இந்த நிலையில் ஆலயப் புனரமைப்பு வேலைக்கு மணல் தேவைப்பட்டதால் தென்மராட்சிப் பிரதேச செயலர் மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் ஆகியோரின் பரிந்துரையுடன் மணலுக்குரிய பணம் கடந்த ஜனவரி மாதத்தில் செலுத்தப்பட்டது. பணம் செலுத்தும்போது ஆலய திருப்பணி வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் கூடிய விரைவில் மணலை அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.
ஆனால் நேற்று வரை குறித்த நிறுவனத்தால் மணல் கொண்டு வந்து பறிக்கப்படாததால் புனரமைப்புப் பணிகளை தற்காலிகமாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ஜ-9)

## நீதிமன்றுக்கு போதையில் சென்றவர் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
நிறை மதுபோதையில் நீதிமன்ற வளாகத்துக்குள் செல்ல முற்பட்டார் என்று கூறப்படும் நபர் நையப்புடைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் மல்லாகம் நீதிமன்றம் முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்றது.
முற்பகல் 9 மணிக்கு மல்லாகம் நீதிமன்றுக்குச் சென்றதாகக் கூறப்படும் குறித்த நபர், நிறை மது போதையில் இருந்துள்ளார். அதனை அவதானித்த நீதிமன்ற உத்தியோகத்தர்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தி யிருந்தனர்.
ஏன் குடித்துவிட்டு நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தீர்கள் என்று பொலிஸார் கேட்ட போது, உங்களுக்கு என்ன பைத்தியமா? நான் குடிக்கவில்லை. தேவையில்லாமல் அலட்டுகிறீர்கள் என்றுகூறி அவர் அநாகரிகமாக நடந்து கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
அதனால் அவர் நையப்புடைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-ஜ-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாதார சக்தியான நாடு சீனா

## இந்தியாவில் தெரிவித்தார் சந்திரிகா



கொழும்பு, மார்ச் 4
இந்தியாவைப் போலவே சீனாவும் ஒரு பெரும் பொருளாதார சக்தி என்று குறிப்பிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, சீனாவை அச்சுறுத்தலாகப் பார்க்க வேண்டாம் என்றும் இந்தியாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.
புதுடில்லிக்குப் பயணம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, புவிசார் அரசியல் மற்றும் புவிசார் பொருளாதாரம் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சும், ஓஆர்எவ் என்ற சிந்தனையாளர் குழாமும், இணைந்து ஒழுங்கு செய்திருந்த ரைசினா கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தார்.
இதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவைப் போலவே சீனாவும் ஒரு பெரும் பொருளாதார சக்தி. பிராந்தியத்தில் உள்ள நாடுகள், சீனாவை அச்சுறுத்தலாகப் பார்க்காமல், அதனை ஒரு வாய்ப்பாக பார்க்க வேண்டும்.
இந்தப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு, இந்தியா - பாகிஸ்தான் இடையிலான மோதல்கள் தடையாக இருக்கின்றன. நாடுகளுக்கிடையில் நம்பிக்கை, கட்டியெழுப்பப்பட்டு ஒத்துழைப்பு அதிகரிக்க வேண்டும்.
பிராந்தியத்தில் உள்ள எல்லா நாடுகளுடனும் இலங்கை நட்புறவைக் கொண்டுள்ளது. இதன் மூலம் நாடுகளுக்கிடையில் பாலமாகத் திகழ முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# சர்வதேச மகளிர் தினம் இம்முறை அம்பாறையில்

கொழும்பு, மார்ச் 4
சர்வதேச மகளிர் தின தேசிய நிகழ்வுகள் "நிலையான எதிர்காலத்துக்கு வலுவான பெண்கள்" என்ற தொனிப் பொருளில் இந்த முறை அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் எதிர்வரும் 8 ஆம் திகதி நடை பெறவுள்ளது என்று சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்துள்ளார்.
அரச தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அம்பாறை வீரசிங்கம் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வின்போது தெரிவு செய்யப்பட்ட சுயதொழில் முயற்சியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.
இந்த முறை மகளிர் தினத்தில் பெண்களுக்கான வைத்திய முகாம்கள் நடத்தப்படவுள்ளன.
அத்துடன் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வும் நடைபெறவுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார மேலும் தெரிவித்தார். (ற-ஜ-5)

# கடத்தப்பட்ட மாணவர்களின் விசாரணையில் திடீர் திருப்பம்

கொழும்பு, மார்ச் 4
கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து கடத்தப்பட்ட 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரின் கடத்தல் தொடர்பிலான விசாரணைகளில் அலைபேசி இலக்கங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.
தெஹிவளையில் 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி பெர்ணாண்டோ மாவத்தையில் உள்ள அலி ஹாஜியார் அன்வரது வீட்டில் வைத்து அவரும் ரஜீவ் நாகநாதன், பிரதிப் விஸ்வநாதன், திலகேஸ்வரன் ராமலிங்கம், மொஹமட் திலான், மொஹம்மட் சாஜித் ஆகிய ஐந்து மாணவர்கள் கடத்தப்பட்டிருந்தனர்.
இவர்களுடன் தலைநகரில் வைத்து வேறு மாணவர்களும் கடத்தப்பட்டிருந்தனர். இது தொடர்பில் தீவிரமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
பத்து அலைபேசி இலக்கங்கள் இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. அதில் ஒரு அலைபேசி இலக்கம் கடற்படை வீரரான ஜோன் கொத்தலாவலகே பந்துகுமார என்பவரால், கடத்தப்பட்ட ஐந்து மாணவர்களில் ஒருவரான ரஜீவ் நாகநாதன் என்பவரது தந்தை கோவிந்தசாமி நாகநாதனின் அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ளமை தொலைபேசி வலையமைப்புச் சோதனை ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.
2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி வரை இவ்வாறு குறித்த தொடர்பு இருந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.
இதனிடையே மற்றொரு சந்தேகத்துக்கு இடமான அலைபேசி இலக்கத்தின் ஊடாக முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபரான கமல்தீன் மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் லொகுஹெட்டி ஆகியோருக்கு அழைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமையும், அதே இலக்கத்தில் இருந்து கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதாக நம்பப்படும் அலி அன்வர் என்பவரின் சகோதரரான சிராஜ் அலிக்கும் தனியார் தொலை பேசி நிறுவனத்தில் சேவையாற்றிய பஸ்மியா என்பவரின் தனிப்பட்ட இலக்கத்துக்கும் அழைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.
சந்தேகத்துக்கு இடமான இன்னொரு அலைபேசி இலக்கமானது டி.சி.எஸ். விஜேசிங்க என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போது, 2007 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி அந்த அலைபேசி இலக்கம் முதன் முதலாக பயன்படுத்தப்பட்டுள்ளமையும் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி அது நிறுத்தப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.
குறித்த அலைபேசி இலக்கத்துக்குச் சொந்தமான விஜேசிங்க என்பவரை கடந்த ஜனவரி மாதம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். இதன்போது அவர் இராணுவத்தின் மேஜர் ஒருவராகக் கடமையாற்றுபவர் எனவும் கடந்த 2009 ஆம் ஆண்டு அவர் இந்த சிம் அட்டையை திருகோணமலை கடற்படை முகாமில் புலனாய்வு அதிகாரியாகக் கடமையாற்றிய தனது மனைவியின் சகோதரனான ஜோன் கொத்தலாவலகே பந்துகுமார என்பவருக்கு வழங்கியுள்ளமையும் தெரியவந்துள்ளது.
இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்துள்ளனர். (ற-ஜ-5)

## தெமட்டகொட சமிந்தவுக்கு கொழும்பில் சத்திரசிகிச்சை

கொழும்பு, மார்ச் 4
தலைநகரில் வைத்துத் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கான தெமட்டகொட சமிந்தவுக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்து சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான தெமட்டகொட சமிந்த, நீதிமன்றத்துக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டு, மீளவும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சிறைச்சாலை வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட போது, தெமட்டகொட பகுதியில் வைத்து வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருந்தது.
இதில் தெமட்டகொட சமிந்த உள்ளிட்ட நான்கு பேர் காயங்களுக்கு உள்ளாகினர். சமிந்தவின் வயிறு, நெஞ்சு உள்ளிட்ட மூன்று இடங்களில் துப்பாக்கிப் பிரயோகக் காயங்கள் காணப்பட்டன. இதனையடுத்து உடனடியாகவே கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார்.
நேற்றுமுன்தினம் இரவு அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தத் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் காயமடைந்த ஏனைய மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இன்னமும் கைது செய்யப்படவில்லை. (ற-ஜ-5)

# சம்பூர் மின் நிலையம் தொடர்பில் உரிய தரப்பினருடன் பேசப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4
சம்பூர் நிலப் பரப்பை தம் வசமாக்க சீனா போன்ற நாடுகள் பகீரதப் பிரயத்தனங்களை இப்போதும் மேற்கொண்டு வருகின்றன. இந்தப் பகுதியில் அனல் மின் நிலையமொன்று நிறுவப்படுவதால் ஏற்படும் பாதிப்புக்களை நான் உணர்கின்றேன். உரிய தரப்பினருடன் கலந்து பேசி நல்லதொரு முடிவைப்பெற முயற்சிப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
சம்பூரில் நிறுவப்படவுள்ள அனல் மின்நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து 'பசுமை' திருகோணமலை அமைப்பினால் ஏற்பாடு செய்திருந்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது போராட்டக்காரர்களைச் சந்தித்து உரையாடிய போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
முன்னைய அரசு சம்பூர் பிரதேசத்தை முழுமையாக கபளீகரம் செய்திருந்தது. சம்பூரை விடுவிப்போம் என்று வாக்குறுதி வழங்கியும் அவர்கள் விடுவிக்கவில்லை. புதிய ஆட்சி மாற்றத்தின் காரணமாக சம்பூர் மக்களுக்குச் சொந்தமான 818 ஏக்கர் காணி எந்தவித நிபந்தனையுமின்றி விடுவிக்கப்பட்டது.
இந்த மாத முடிவுக்குள் சம்பூரில் உள்ள கடற்படை முகாம் அமைந்திருக்கும் 237 ஏக்கர் காணியையும் விடுவிப்பதாக வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. இது நல்லதொரு நடவடிக்கையென்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.
சீனா போன்ற நாடுகள் இந்தப் பகுதியில் பிரசன்னமாவதற்கு பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன. அரசு உடன்பட்டால் அவர்கள் மறுநாளே உள்நுழைந்து விடுவார்கள். அனல் நிலையமொன்று அமைக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் விளைவுகளையும் நான் அறிவேன்.
மக்களாகிய உங்கள் கோரிக்கையை தார்மீகரீதியாக நான் ஏற்றுக்கொள்கிறேன். இது விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்து பேசி நல்லதொரு முடிவை நோக்கி நகருவோம் - என்றார். (ற-ஜ-5)

# புலிகளை விடுதலை செய்வதற்கே பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கம்

## விமல் வீரவன்ஸ கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 4
பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுவது, தண்டனை அனுபவிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை விடுதலை செய்யவே. புலிகளை சிறைச்சாலையின் வெளியில் அனுப்பி இந்த நாட்டை தீவிரவாதிகளிடமிருந்து மீட்டெடுத்த தேசியத் தலைவர்களை சிறைச்சாலைக்கு அனுப்ப இந்த அரச தரப்பினர் திட்டமிடுகின்றனர். இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.
பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் படுகொலை வழக்கில் முதலில் யோசிதவை அரச தரப்பினர் குற்றஞ் சுமத்தினர். தற்போது நாமலைக் கூறுகின்றனர். இதுதான் இந்த அரசின் இரட்டை நிலைப்பாடு எனவும் அவர் குறிப்பிட்டார். (ற-ஜ-5,சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிக்கு பதிலடி கொடுக்க மகிந்த தரப்பு கூடி ஆலோசனை

கொழும்பு, மார்ச் 4
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர் பதவிகளிலிருந்து தனது விசுவாசிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிரடியாக நீக்கியுள்ளதால் கடும் சீற்றத்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அதற்குப் பதிலடி கொடுப்பது தொடர்பில் பொது எதிரணி உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள மகிந்தவின் மக்கள் தொடர்பாடல் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. இதில் அமைப்பாளர் பதவியிலிருந்து தூக்கப்பட்டவர்கள், மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மகிந்த ராஜபக்ச, மாவட்ட அமைப்பாளர் பதவிகளில் மாற்றம் மேற்கொண்டமை ஜனாதிபதி மைத்திரிபாலவின் தவறான முன்னுதாரண நடவடிக்கை என்று தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சிக்குத் துணை போவதால் புதியதொரு அரசியல் கூட்டணிக்கு மகிந்த ராஜபக்ச தலைமை தாங்கவேண்டும் என்று இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் மகிந்தவிடம் பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்தனர். சுதந்திரக் கட்சியிலிருந்து தாங்கள் வெளியேறத் தயார் என்றும் உறுதிமொழி வழங்கினர்.

சந்திப்பு முடிவடைந்த பின்னர் கருத்து வெளியிட்ட காமினி லொக்குகே, தொகுதி அமைப்பாளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எங்கு செல்வது? எனவே, புதியதொரு அரசியல் கட்சி தேவை என்பது இதன் மூலம் உணரப்பட்டுள்ளது. மகிந்த இல்லாமல் எமது அரசியல் பயணம் இல்லை – என்றார்.

புதிய கட்சியா? அல்லது புதிய கூட்டணியா? என்று இன்னமும் முடிவெடுக்கவில்லை. ஆனால், பலமானதொரு மாற்றுச் சக்தி உருவாகும் என்று ரோஹித்த அபேகுணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

(ற-ஜ-5-சி)

# ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் இலங்கை மீது நம்பிக்கையுண்டு

## நிசா பிஸ்வால் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ள அமெரிக்கா, இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய முழுமையான அழுத்தத்தைப் பிரயோகிப்போம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச்செயலர் நிசா பிஸ்வால், இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

எமது தொழில் நுட்ப உதவிகள் மூலம் ஆட்சியைப் பலப்படுத்தவும், பொறுப்புக்கூறல் பொறிமுறை மற்றும் வெளிப்படைத்தன்மை பொறிமுறைகள் போன்றவற்றைப் பலப்படுத்துவதற்குமான ஆதரவுகளை நாம் வழங்கி வருகிறோம்.

ஜெனிவாவில் கடந்த ஆண்டு முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை முதன்முதலாக இணை அனுசரணை வழங்கியிருந்தது. இதற்காக நாங்கள் இலங்கையுடன் இணைந்து பணியாற்றினோம். இந்தத் தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து வகையான அழுத்தங்களையும் மேற்கொள்வோம் என்பதில் உறுதியாக உள்ளோம்.

> “ஜெனிவாவில் கடந்த ஆண்டு முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை முதன்முதலாக இணை அனுசரணை வழங்கியிருந்தது. இதற்காக நாங்கள் இலங்கையுடன் இணைந்து பணியாற்றினோம்.”

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஜெனிவாத் தீர்மானத்தை நடை முறைப்படுத்துவார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இலங்கை அரசு தனது மீளிணக்கப்பாட்டுச்செயற்பாடுகளை வெளிப் படையாகவும், பாதிக்கப்பட்ட மற்றும்ஏனைய அனைத்துத் தரப்பினர்களையும் உள்வாங்கிகாத்திரமான, தொரு நகர்வை முன்னெடுக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள் ளோம். நம்பகமான மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையைத் தரக்கூடிய அதேவேளையில், சர்வதேச சமூகத்தின் நம்பகத்தன்மையையும், உறுதிப்படுத்துவதற்கான பொறுப்புக்கூறல் பொறிமுறையையும் இலங்கை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம் – என்றார்.

(ற-ஜ-5)

# ரவிராஜ் கொலை வழக்கு விசாரணை; 4ஆவது சாட்சியாளர் மன்றில் சாட்சியம்

கொழும்பு, மார்ச் 4
நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் உருவ அமைப்பு நினைவில் இருக்கின்றது. அவரை மீளவும் காண்பித்தால் தெளிவாக அடையாளம் காட்டுவேன். இவ்வாறு ரவிராஜ் கொலை வழக்கில் 4 ஆவது சாட்சியாளரான வினோத் ஜோஸப் அஞ்சலோ ரோய் நீதிமன்றில் தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளின் படி 9 சந்தேக நபர்களைப் பொலிஸார் அடையாளம் கண்டனர். இவர்களில் 6 பேரைக் கைது செய்தனர்.

### அரச சாட்சியாகிய பொலிஸார்

கைதுசெய்யப்பட்டவர்களில் ஹெட்டியாராச்சிகே சந்தன குமார, காமினி செனவிரத்ன, பிரதீப் சந்தன, சம்பத் முனசிங்க ஆகிய 4 கடற்படை உறுப்பினர்களுக்கு எதிராகவும், வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள பெமியன் ஹுசேன் என்ற பொலிஸ் அதிகாரிக்கும், கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் பழனித்தம்பி சுரேஷ் மற்றும் சிவநேசன் விவேகானந்தன் ஆகியோருக்கும் எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. கைதாகிய மேலும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் அரச சாட்சியாக மாற்றப்பட்டனர்.

இந்த நிலையில் இது குறித்த வழக்கு புதுக்கடை 9 ஆம் இலக்க நீதிவான் நீதிமன்றின் நீதிவான் திலிணகமகே முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. வழக்கின் சாட்சியாளர்கள் மீதான விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழக்கின் 4 ஆவது சாட்சியாளரான அஞ்சலோ ரோயின் சாட்சியம் விசாரிக்கப்பட்டது.

சாட்சிக் கூண்டில் ஏற்றப்பட்ட சாட்சியாளர், தான் வழங்கும் சாட்சியம் உண்மையானது என்று சத்தியம் செய்த பின்னர், நீதிமன்ற உதவியாளரால் அவரது சாட்சிய வாக்கு மூலம் பகிரங்க நீதிமன்றில் வாசித்துக் காட்டப்பட்டது.

### வானில் சென்றபோது இடம் பெற்றது

இந்தச் சம்பவம் கடந்த 2006 ஆம் ஆண்டு இடம்பெற்றது. எனது பணி தொடர்பில் 2006 நவம்பர் 9 ஆம் திகதி இங்கிருந்து சென்று மீண்டும் 2006 நவம்பர் 10 ஆம் திகதி அதிகாலை இங்கு வந்தேன். எமது நிறுவனத்தால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வீட்டுக்குச் செல்ல போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படுவது வழமை.

அன்றும் அப்படிச் செய்யப்பட்டிருந்தது. வெள்ளை நிற டொல்பின் ரக வான் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த வானின் சாரதியின் பெயர் நிஸங்க. நானும் என்னுடன் வேலை செய்யும் நண்பன் அன்சிலும், கட்டுநாயக்கவில் இருந்து வீட்டுக்கு அந்த வானிலேயே சென்றோம். அன்ஸில் ஜாஎலப் பகுதியில் வசித்ததால் முதலில் அவரது வீட்டுக்கே சென்றோம். செல்லும் போது அன்சிலே சாரதிக்கு அருகில் இருந்தார். நான் பின் பக்க ஆசனத்தில் இருந்தேன். அன்சிலின் வீட்டுக்குச் சென்றபோது அங்கு ஒரு சில நிமிடங்கள் நாம் தேநீர் விருந்துக்காக கழித்தோம். பின்னர் அன்ஸிலை விட்டுவிட்டு நான் தெஹிவளையில் உள்ள எனது வீடு நோக்கி அந்த வானில் சென்றேன்.

சரமாரியான துப்பாக்கிச் சூடு பொரளை ஊடாகவே இவ்வாறு சென்றோம். இதன்போது பொரளை கனத்தைச் சந்திக்கு அருகே குறுக்கு வீதியூடாக கபில நிற ஜீப் வண்டியொன்று பிரதான பாதையை நோக்கி நுழைந்தது. பிரதான பாதையை நோக்கி ஜீப் வந்ததால் எமது வான் வேகத்தைக் குறைத்து அதற்கான இடத்தை வழங்கியது. இதன்போது அங்கு நடைபாதைப் பகுதியில் கறுப்பு நிறப் பையொன்றுடன் நின்றிருந்த நபர் ஒருவர், அதனுள் இருந்து துப்பாக்கியை எடுத்து அந்த கபில நிற ஜீப் வண்டியின் பின் பக்க ஆசனத்தை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினார். அதன் பின்னர் நடைபாதை வழியே சுமார் 50 மீற்றர்கள் வரை ஓடிச்சென்று, இயங்கு நிலையில் கறுப்பு நிற தலைக் கவசத்துடன் காத்திருந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் அவர் தப்பிச் சென்றார். நாரஹேன்பிட்டி பகுதியை நோக்கியே அவர்கள் சென்றனர்.

### அதிரடிப் படைக்குத் தெரிவித்தோம்

மோட்டார் சைக்கிள் ஓட்டுநரின் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. எனினும் சந்தேக நபர்கள் தப்பிச் சென்ற மோட்டார் சைக்கிளின் இலக்கத்தைக் குறித்துக் கொண்டோம். எஸ்.பி. ஜே.இ. 6507 என்பதே அந்த இலக்கம். ‘அதோ போகிறது மோட்டார் சைக்கிள்... அதோ போகிறது... இலக்கத்தை குறித்துக்கொள்’ என்று நான் சாரதிக்குக் கூறவே அவர் பேனையை எடுத்து அவரது கொப்பியில் அந்த இலக்கத்தைப் பதிவு செய்தார். இந்த நிலையில் எனது தொலைபேசி இலக்கத்தில் இருந்து 119 பொலிஸ் அவசர தொலைபேசி அழைப்பு இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, நாரஹேன்பிட்டி பகுதியில் ஜீப் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதையும், கொலையாளிகள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்வதையும் மோட்டார் சைக்கிள் இலக்கத்தையும் கொடுத்தேன். அத்துடன் அங்கிருந்து நகரும் போது கண் எதிரே தென்பட்ட விமானப்படை மற்றும் அதிரடிப்படை வீரர்களை உள்ளடக்கிய ஜீப் வண்டி ஒன்றையும் நிறுத்தி அவர்களிடமும் விடயத்தைக் கூறினோம்.

### கேள்வி - பதில் சாட்சி

*கேள்வி:* அப்போது நேரம் என்ன?

*பதில்:* உறுதியாகத் தெரியாது. சுமார் 8.20 மணி இருக்கும்.

*கேள்வி:* துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் உருவ அமைப்பு எப்படி இருந்தது?

*பதில்:* 5 அடி 8 அங்குல உயரம் கொண்டவராக இருப்பார். நல்ல உடல் அமைப்பைக் கொண்டிருந்தார். வெள்ளை நிறத்தவர். கறுப்பு நிற தலை மயிர் கொண்டவர். வட்டவடிவான முகம். முகத்தை மறைத்திருக்கவில்லை. நீண்ட காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார். சப்பாத்தும் போட்டிருந்தார்.

*கேள்வி:* அந்த நபரை மீண்டும் கண்டால் அடையாளம் கண்டு கொள்ள முடியுமா?

*பதில்:* ஆம்

*கேள்வி:* துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்போதே தோளில் பிரயாணப் பை இருந்ததா?

*பதில்:* இடது பக்க தோளில் போட்டிருந்த கறுப்பு நிறப் பையிலிருந்து எடுத்தவாறே அவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். இதன் போது அந்தப் பை கீழே விழுந்தது. அவர் ஜீப்பின் அருகில் சென்று சுட்டார்.

*கேள்வி:* எத்தனை சூடுகள் நடத்தப்பட்டன. உமக்குச் சத்தம் கேட்டதா?

*பதில்:* ஆம். சத்தம் கேட்டது. எனினும் எத்தனை சூடுகள் என எண்ணவில்லை. எனினும் சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

*கேள்வி:* மோட்டார் சைக்கிளில் இருந்தவரை அடையாளம் தெரிந்ததா?

*பதில்:* இல்லை. அவரின் பின் பக்கமாகவே நான் பார்த்தேன். அவர் கறுப்பு நிற தலைக்கவசம் அணிந்திருந்தார்.

*கேள்வி:* அந்த மோட்டார் சைக்கிளின் நிறம், ரகம் ஞாபகத்தில் உள்ளதா?

*பதில்:* நிறம் ஞாபகத்தில் இல்லை. பின்னால் இருந்து பார்த்ததற்கமைய அது பல்சர் மோட்டார் சைக்கிள் என நினைக்கின்றேன்.

*கேள்வி:* ஜீப்பில் இருந்தவர் எவர் என்று அறிந்து இருந்தீரா?

*பதில்:* துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டபோது அதில் இருந்தவர் எவர் என்று தெரியாது. எனினும் வீட்டுக்குச் சென்றபோது தான் தொலைக்காட்சி ஊடாக ரவிராஜ் மீதே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளதை அறிந்தேன் – என்றார்.

வாசித்துக் காட்டப்பட்ட சாட்சியம் சரியானதா, அதில் ஏதும் சேர்க்கப்பட அல்லது நிராகரிக்கப்பட வேண்டி உள்ளதா என நீதிவான் திலிண கமகே சாட்சியாளரிடம் கேட்டார். அதற்குச் சாட்சியம் சரியானதே எனச் சாட்சியாளர் பதிலளித்தார். சந்தேகநபர்களின் சட்டத்தரணிகளும், சாட்சியாளரை விசாரிக்கத் தேவையில்லை என்று தெரிவித்து சாட்சியத்தை ஏற்றுக்கொண்ட நிலையில், வழக்கு நீதிவானினால் மார்ச் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்கு அரசே! நீ என்ன செய்யப்போகிறாய்?

**பொ**து மன்னிப்பின் ஊடாகவோ அல்லது சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைகள் மூலமோ, தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க இயலும். அதற்கான வாய்ப்பு உள்ள போதிலும், அதனைச் செயற்படுத்த அரசு எந்தவகையிலும் முன்வரும் போக்கைக் காண முடியவில்லையே. இது தொடர்பில் அரசின் குள்ளத் தன்மையே மேலெழுந்து நிற்கிறது.
மேற்கண்டவாறாக, காத்திரமான கண்டனத்தை, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் செயலாளர் சி.கா.செந்தில்வேல் வெளிப்படுத்தி உள்ளார்.

நீண்ட காலமாக, விசாரணை எதுவும் இன்றி, சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு அரசு தொடர்ந்தும் மறுத்து வருகிறது. அதன் மூலம் அவர்களைச் சிறைகளில் அடைத்து வைத்துச் சாகடிக்கப் போகிறதா? அதனையே உள்ளார்ந்து விரும்புகிறதா? என்றும் அவர் கண்டனக் குரல் கொடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர், அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்க முடியாது, சட்டப்படியே கையாள வேண்டும் என்று கூறிப்போனதை--
நல்லாட்சி அரசின் பிரதானிகள், தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, வெற்றிக்கூத்து ஆடுகிறார்கள்!
இதேவேளை-

தமிழ் அரசியல் கைதியாக இருந்து, சில நாள்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்ட மு.கோமகன், நீண்ட இழுத்தடிப்பின் பின்னரே தாம் சிறையிலிருந்து மீண்டதாகத் தெரிவித்தமையும் இங்கே பதியப்பட வேண்டிய ஒன்றாகும்.

வெறும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டே கொழும்பு அரசுகளால் வழக்குகள் தொடரப்பட்டன என்பதையும்--

அவற்றின் விசாரணைகூட வேண்டும் என்றே இழுத்தடிக்கப்பட்டதாகவும், எவரும் அப்போது சுயமாக விரும்பி வாக்குமூலம் வழங்கவில்லை என்றும்--அவர் தெரிவித்திருந்தார்.

ஆகையால், தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரத்தில், வேதனையும் சோதனையும் நிறைந்த அவர்களின் நிலையை உள்ளார்ந்து கவனத்தில் கொண்டு நல்லிணக்க அரசு செயற்பட வேண்டிய வேளை இது.

தமிழர்களின் தலை நிமிர்வுக்காகச் சிலுவை சுமந்தவர்கள், தமது விடுதலைக்காக மேற்கொள்ளும் பட்டினிப் போர் குறித்தும் இங்கு பதிவு செய்ய விழைகின்றோம். அவர்களுடன் ஒன்று சேர்வோம். உயிருக்காகப் போராடும் எமது உறவுகளை விடுதலை செய்-- என்று எழுப்பப்பட்ட கோஷம் இங்கே பதிக்கப்பட வேண்டிய ஒன்றே.

தமிழ் அரசியல் கைதிகளின் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை, நல்லிணக்க அரசு நேர்கொண்ட பார்வையில் நோக்காது என்ற படலமே, விரிந்து உயர்கிறது!
மொத்தத்தில்-

தமிழ் அரசியல் கைதிகள், சிறைச்சாலைகளில், திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டதும்--

வேறு சிலர் மர்மமான முறையில் மரணத்தைத் தழுவினர் என்பதும்--முந்தைய தகவல்கள்.

எதுவோ, எப்படியோ, தற்போது உணவுத் தவிர்ப்பை கைக்கொள்கின்றனர் மிகப்பலர்.
நல்லாட்சி அரசு என்று பூச்சடித்திருக்கும் மைத்திரி-ரணில் அரசே, அவர்களுக்கான பதிலாக என்ன சொல்லப் போகிறாய்..?

வெளிப்படையாக அறிவித்து அதனை உள்ளார்ந்து செயற்படுத்துவாயா?

# அரசியல் கைதிகளை அரசு உடன் விடுவிக்க வேண்டும்

எம்.ஐ.முபாறக்




நீண்டகாலமாகச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை இத்தோடு முடிந்துவிட்டது என கடந்த வருடம் அவர்கள் நடத்திய பட்டினிப் போராட்டத்துக்கு அரசு வழங்கிய தீர்ப்பை வைத்து எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால், அந்தப் பிரச்சினை தொடர் கதையாகவே இருக்கின்றது. மீண்டும் பட்டினிப் போராட்டம் தொடங்கப்பட்டுத் தொடர்கிறது.
எந்தவித விசாரணைகளும் இன்றி வருடக் கணக்கில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகள், அவர்களின் விடுதலை வேண்டி கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் பட்டினிப் போராட்டத்தில் குதித்தனர்.
இதற்கு ஆதரவாகச் சிறைச்சாலைகளுக்கு வெளியிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன; யாழ்ப்பாணத்தில் ஒரு மாணவன் கைதிகள் விடுதலை வலியுறுத்தி தனது உயிரையும் அதற்காக ஈகம் செய்தான். ஆனால் என்ன?
விடுதலை செய்வது தொடர்பில் நவம்பர் 7ஆம் திகதிக்குள் தீர்மானம் ஒன்று அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்ததால் அதை நம்பி கைதிகள் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.
இதனைத் தொடர்ந்து முதற்கட்டமாக 62 கைதிகளை விடுதலை செய்வதற்கு அரசு தீர்மானித்து அவர்களுள் 32 பேர் நவம்பர் மாதம் 9ஆம் திகதி விடுவிக்கப்படுவர் என்றும், மிகுதியானோர் இரண்டாம் கட்டமாக விடுதலை செய்யப்படுவர் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.
ஆனால், அரசியல் கைதிகள் அரசின் இந்த முடிவை ஏற்காது மீண்டும் பட்டினிப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தாம் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கோரி கைதிகள் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்தனர்.
இது தொடர்பில் சட்டமா அதிபருடன் பேச்சு நடத்திய ஜனாதிபதி, நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொண்டுவரும் 85 கைதிகளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை விடுதலை செய்வது என்ற தீர்மானத்துக்கு வந்தார்.
நவம்பர் மாதம் 16ஆம் திகதி அந்தத்தீர்மானம் அறிவிக்கப்பட்டதும், அரசியல் கைதிகள் அந்தத் தீர்மானத்தை ஏற்று அவர்களது 10ஆம் நாள் பட்டினிப் போராட்டத்தைக் கைவிட்டனர். இன்னமும் 10 நாள்களுக்குள் அவர்களுக்கான புனர்வாழ்வளிப்பு நடவடிக்கை தொடங்கப்படும் என அரசு அப்போது அறிவித்தது. ஆனால் அதுவும் நடைமுறைக்கு வரவில்லை அல்லது மிக மிக மெதுவாகவே நடைமுறைப்படுத்தப்படுகிறது.
இந்த நிலையில், அரசியல் கைதிகள் மீண்டும் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். தம் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தி விடுதலை செய்யுமாறு கோரி பெப்ரவரி 22ஆம் திகதி அனுராதபுரச் சிறையில் இரண்டு கைதிகள் பட்டினிப் போராட்டத்தைத் தொடக்கி வைத்தனர். அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் எனச் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்ததால் அந்தப் போராட்டம் 6 ஆவது நாள் கைவிடப்பட்டது.
இதற்கிடையில் பெப்ரவரி 23ஆம் திகதி வெலிக்கடை, மகசின் சிறைச்சாலைகளில் ஒரு பெண் கைதி உட்பட 15 பேர் பட்டினிப் போராட்டத்தைத் தொடக்கினர். வழக்குப் பதிவு செய்யப்படாமல் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்தக் கைதிகள் உடனடியாகத் தங்களை விடுதலை செய்யுமாறு கோரியே இந்தப் போராட்டத்தைத் தொடக்கியுள்ளனர்.
இதன் விளைவாகக் குற்றமற்றவர் எனத் தெரிவித்து அவர்களில் ஒருவர் மாத்திரம் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஏனைய 14 பேரும் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். இவர்கள் தொடர்பில் ஒரு முடிவை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு இப்போது அரசு தள்ளப்பட்டுள்ளது.
ஒரு சந்தேகநபர் குற்றச்சாட்டுக்கள் எவையுமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன? இதுதான் இங்குள்ள பெரும் பிரச்சினை. இவர்கள் புலிகளா அல்லது புலிகளுக்கு உதவிகள் செய்தவர்களா அல்லது அப்பாவிகளா என்று ஒரு தீர்ப்பு அறிவிக்கப்படாமல் வெறுமனே தடுத்துவைக்கப்பட்டிருப்பது ஏற்புடையதல்ல. இவர்கள் கைது செய்யப்பட்ட உடனேயே இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அவர்களுள் பல பேர் குற்றமற்றவர்கள் என நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருப்பார்கள். சிலர் குற்றவாளிகளாகக் காணப்பட்டுத் தண்டனை அனுபவித்து வெளியேறி இருப்பார்கள். ஆனால், அவர்கள் குற்றவாளிகளா, நிரபராதிகளா எனத் தெரிவிக்கப்படாமலேயே சிறைக்குள் அடைத்து வைக்கப்பட்டுத் தண்டிக்கப்படுகின்றார்கள். இதன் பின் அவர்கள் மீது விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டால் அது பெரும் அநீதியாகும்.
மொத்தத்தில் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவதே நியாயமானதாகும். அவர்களுள் குற்றம் செய்தவர்கள் இருந்தாலும் இதுவரை அவர்கள் சிறையில் கழித்த காலத்தைத் தண்டனையாகக் கருதி விடுதலை செய்வதே பொருத்தமானது.
தடுத்துவைக்கப்பட்டுள்ள பலர் புலிகள் என்றே வைத்துக்கொள்வோம். அவர்கள் விடுதலை செய்யப்பட்டால் அவர்களால் என்ன செய்ய முடியும்? மீண்டும் புலிகள் இயக்கத்தை உருவாக்க முடியுமா? மீண்டும் போர் செய்ய முடியுமா? அப்படி முடியும் என்றால் மகிந்த காலத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான புலிகள் அதைச் செய்திருப்பார்கள். அவர்களால் செய்ய முடியாததை இப்போது போராட்டத்தில் குதித்துள்ள 14 பேரால் மாத்திரம் செய்ய முடியுமா?
கடந்த வருடம் நடத்தப்பட்ட கைதிகளின் பட்டினிப் போராட்டத்தை அடுத்து பிணையிலும் புனர்வாழ்வு அளித்தும் கைதிகளை விடுதலை செய்தல் என்ற முடிவை அரசு எடுத்தது. அதுபோல், இப்போது போராட்டத்தில் குதித்துள்ள கைதிகள் தொடர்பிலும் அரசு ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் இப்போது தள்ளப்பட்டுள்ளது.
தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கருத்து இப்போது சிங்கள மக்கள் மத்தியிலும் நிலவி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.
முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்சல் சரத்பொன்சேகாகூட அவர்களின் விடுதலையை வலியுறுத்தியுள்ளார். ஜே.வி.பி கூட கடந்த வாரம் இதே கருத்தை முன்வைத்ததை நாம் அறிவோம். இவ்வாறு சிங்கள தரப்பில் இருந்தும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கருத்துக்கள் முன்வைக்கப்படுவதால் அரசு கைதிகளின் பக்கம் இருந்து இந்த விவகாரத்தை சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறைகள் படிந்த காக்கி உடைகள்

அலெக்ஸ் பரந்தாமன்

ஒரு வாரத்துக்கு முன்பு உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியொன்றைப் படித்த பொதுமக்கள் பலரும் அதிர்ச்சிக்கும் ஆத்திரத்துக்கும் உட்பட்டதோடு, அந்தச் செய்தி குறித்துத் தமது கருத்துக்களை மற்றவர்களுடன் வெளிப்படையாகப் பகிரவும் செய்தனர்.

வடமராட்சி-அல்வாய் வடமேற்கில் உள்ள ஒருவர், பருத்தித்துறை குற்றத் தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராகத் தேசியப் பொலிஸ் ஆணைக் குழுவில் ஒரு முறைப்பாட்டைச் செய்துள் ளார் என அந்தச் செய்தி தெரிவித்தது. அந்த முறைப்பாட்டிலுள்ள விடயங்களும் விளக்கமாக வெளிப்படுத்தப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டு மிருந்தன.

பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தியானது பொலிஸ் துறையோடு சம்பந்தப்பட்டதாக இருப்பதால், செய்தியின் உண்மைத் தன்மை, நன்கு ஆராய்ந்தறியப்பட்ட பின்னரே, அனுப்பப்பட்டு, அது ஆசிரியபீடத்தால் அனுமதிக்கப்பட்டு, பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் என்பதை நம்பலாம்.

அத்துடன், பிரசுரிக்கப்பட்டிருக்கும் செய்தியானது, பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட பாரதூரமான நிகழ்வு என்ப தால், அந்த நபரால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் முறைப்பாட்டிலுள்ள விடயங்களும் உண்மைக்குப் புறம்பானவையாக இருக்க முடியாது என்கிற நியாயபூர்வமான வாதத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அந்த முறைப்பாட்டில் உள்ள சாராம்சம் பின்வருமாறு:

ஜனவரி மாதம் 19ஆம் திகதி வடமராட்சி-அல்வாய் வடமேற்கில் இருக்கும் இல்லத்தில் கொள்ளை நடைபெற்றது. கொள்ளையர்கள் வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்து அங்குள்ளவர்களை ஈவிரக்கமின்றித் தாக்கியதோடு, அங்கு அறைகளில் இருந்த எட்டு லட்சம் ரூபா பணத்தையும், 18 பவுண் நகை களையும் கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட அந்த நபர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலைய த்தில் முறைப் பாடு ஒன்றைச் செய்துள்ளார். இந்த முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட பொலிஸ் தரப்பு, அது குறித்து துரித விசாரணைகளை மேற் கொள்ளவும், கொள்ளையுடன் சம்பந் தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும் கூடுமானவரை முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. கொள்ளைச் சம்பவத்தால் பாதிக்கப் பட்டவரின் முறைப்பாடானது பருத்தித் துறைப் பொலிஸ் நிலையத்தில் இரு மாதங்களுக்கும் மேலாகக் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது.

இதன் நிமித்தம் பாதிக்கப்பட்ட நபர் தன் பொறுமையிழந்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார். இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, கொடுத்த முறைப்பாட்டுக்கு என்ன நடந்தது? ஏன் அது புறக்கணிக்கப்பட்டது? ஏன் அது கிடப்பில் போடப்பட்டது? என்பவையே இப்போதுள்ள மிகப்பெரிய கேள்விகளா கும்.

சமீபகாலமாக குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படுகின்ற கொள்ளைகள், கொலைகள், திருட்டுக்கள், வழிப்பறிகள் போன்றவற்றை உற்று அவதானிக்கும்போது, பொலிஸ் நிலையங்களில் கிடப்பில் போடப்படுகின்ற முறைப்பாடுகளுக்கும், மேற்கூறப்பட்ட சம்பவங்களுக்கும் ஏதோ ஒருவகையில் நிறையத் தொடர்பிருப்பதாகவே சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

காரணம், ஓர் இடத்தில் சமூக முறைகேடுகள் நடைபெறுகின்றன என்பதை அறியும் பொலிஸார், தமது கடமையில் அசண்டையீனமாக இருக்கிறார்கள்; அமைதி காக்கிறார்கள் என்றால், அந்தச் சமூக முறைகேடுகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றங்களும், 'கொடுக்கல்-வாங்கல்' நிகழ்வுகளும் மறைமுகமாக எங்கோ ஒரு மூலையில் நிகழ்கின்றன என்றுதானே அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது?

இதை மெய்ப்பிக்கும் வகையில், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் இணைத் தலைவர்களில் ஒருவருமான சி.சிறிதரன் கூறிய கருத்துக்கள் அமைகின்றன.

கிளிநொச்சி-திருவையாறு வின்சன் வீதியில் அமைந்துள்ள 3ஆம் குறுக்குத் தெரு மற்றும் 4 ஆம் குறுக்குத்தெரு வழியாகச் செல்கின்ற கோரமோட்டை மற்றும் பன்னங்கண்டிப் பகுதிகளில் தினமும் 50க்கு மேற்பட்ட டிப்பர் வாகனங்கள், உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி மணற் கொள்ளை இடம்பெற்று வருகின்றது. இதில் கொள்ளையர்களுக்குப் பொலிஸாரின் ஆதரவு இருக்கின் றது என்றும், தினமும் மணற்கொள்ளை நடைபெறும் பகுதிக்கு வருகின்ற பொலிஸார் உரத்த குரலில் "அத ஒக்கம உசாவ" (இன்றைக்கு எல்லோரையும் நீதிமன்றம் கொண்டு செல்வோம்) என்று மக்களுக்குக் கேட்கக் கூடியவாறு கூறுகின்றனர். அதன் பின்னர் பூவரசம் வேலிகளுக்குப் பின்னாலும் பனங்கூடல்களுக்கு நடுவிலும் மணற் கொள்ளையர்களைக் கூட்டிச் சென்று கதைத்துவிட்டு, "நாளைக்கு அள்ள வேண்டாம்.." எனக் கூறிவிட்டுச் செல்வதாக பொது மக்கள் தன்னிடம் முறைப்பாடு செய்துள்ளனர் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.

நெருப்பில்லாமல் எங்கும் புகையாது! சம்பவத்தை நேரிடையாய் பார்த்தவர் கள் இல்லாமல் கதை வராது. இங்கு வேலியே பயிரை மேய்வது கண்கூடு. மக்கள் அரசுக்குச் செலுத்தும் வரிப் பணத்தை மாத வேதனமாகப் பெறும் இந்தப் பொலிஸ்காரர்கள், அந்த மக்களுக்கே துரோக மிழைப்பது எந்த வகையில் நியாயம்? சும்மா ஒப்புக்கு பொது மக்களுக்காக மணற்கொள்ளையரைப் பார்த்து "அத ஒக்கம உசாவ..." எனக் கூறும் இந்தப் பொலிஸ்காரர்களைப் பார்த்து, அதே வார்த்தைகளைக் கூறி, அவர்களைக் கைது செய்து அழைத்துச் செல்ல இங்கே யார் முன் வருவார்கள்? யாரிடம் அந்தத் துணிச்சல் இருக்கிறது? கடமை தவறும் பொலிஸ்காரர்களின் செயற்பாடுகளாலேயே குற்றங்கள் குறைவற்று அவை மீண்டும் பல்கிப் பெருகுவதை இதிலிருந்து காணமுடிகிறது.

மணற் கொள்ளைகளுக்குப் பொலிஸார் உடந்தையாயிருப்பது போன்றுதான், வீடுகள் மற்றும் வழிப்பறிக் கொள்ளைகளுக்கும் உடந்தையாய் இருக்கிறார்களோ? என்ற அச்சமும் சந்தேகமும் இப்போது பொது மக்களிடத்தில் எழ ஆரம்பித்திருக்கிறது.

அல்வாய் கொள்ளைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கூட, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்குச் செய்து கொண்ட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## எவர் இதைக் கவனத்தில் எடுப்பார்?

போர் காரணமாகத் தமிழர் பகுதிகளில் அனேக அநாதைச் சிறுவர் இல்லங்கள் முளைத்துள்ளதை நாம் அறிகின்றோம், காணுகின்றோம். இவற்றில் பல உண்மையான சேவை நோக்கத்துடனும், சில சுயலாப நோக்கம், வெளிநாட்டுப் பணங்களை சுருட்டும் நோக்கத்துடனும் இயங்குகின்றன. அதைவிட இவற்றை நடத்துபவர்கள் அங்குள்ள அநாதை, திக்கற்ற, உதவுவாரற்ற பிள்ளைகளைத் தத்தமது வீடு கட்ட, வாகனம் கழுவ, ஆடை கழுவ போன்ற எடுபிடி வேலைகளுக் குப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் தங்களின் பெயருக்கும், சுகபோகத்துக்கும் இந்தப் பிஞ்சுகளைப் பாவிக்கின்றனர். இதை விட மோசம் நல்லூர்ப் பகுதியில் ஓர் இல்லம், நீ கணவனை விவாகரத்துச் செய்து விட்டு வா, நாங்கள் உதவுகின்றோம் எனக் கூறி இலவச சட்ட உதவிக்கு அனுப்பியவேளை, அங்கு கடமை புரிந்து ஒரு நல்ல உள்ளம் கொண்டவர் அந்தச் சிறு பெண்ணுக்குப் புத்திமதி கூறி விவாகரத்து முயற்சியைத் தடுத்து விட்டார். இப்படியான அநியாயங்களை உதயன் சமூகத்துக்கு வெளிப்படுத்தி, போலிகளை இனம்காட்டி தொடர்ந்து சமூகத்தின் காவலனாக செயற்பட வேண்டும் எனக் கேட்டு நிற்கின்றேன்.

நலன் விரும்பி, நல்லவன்.

## மாகாண சபை குத்து வெட்டின் பின்னணியில் சதியேதும் உண்டா?

வடமாகாண சபையில் ஆளும் கட்சி அங்கத்தவர்களிடையே நடக்கும் குத்து வெட்டுக்கள் பற்றிய செய்திகளை உதயன் பத்திரிகையில் பார்க்கும் போது இதன் பின்னணியில் ஒரு சதி இருக்கின்றது போல் தெரிகிறது. புலி இயக்கம் வலிமை பெற்றிருந்தபோதுதான் மிக முக்கிய பிரமுகர்களான கருணாவும் பிள்ளையானும் வெளியேறினார்கள். அந்த வெளியேற்றத்துக்கு தாங்களே காரணம் என்று தம்பட்டம் அடித்தோரும் இருக்கிறார்கள். இப்போது தமிழர்கள் ஒற்றுமையாக நின்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெல்ல வைத்துக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக வந்திருக்கிறார். இதைச் சகிக்கமாட்டாத சிலர் கூட்டமைப்புக்குள் பிளவை ஏற்படுத்தக் கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். பிரபாகரன் காலத்தில் கருணாவையும், பிள்ளையானையும் எப்படி யார் பிரித்தார்களோ அவர்களே இதன் பின்னணியில் இருக்கலாமெனச் சந்தேகிக்கிறோம். எனவே தமிழர் ஒற்றுமையாக இருக்கவேண்டும். பெரும்பான்மையினரும் அரசும் எங்களுக்குப் பொருத்தமான தீர்வுத்திட்டத்தை வைத்தாலும் ஒருபகுதித் தமிழர்கள் அதை வேண்டாம் என்று சொல்வார்களோ தெரியாது. தந்தை செல்வா கூறியது போல தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

நந்தன்

## தேவை கருதிய ஆசிரியர் இடமாற்றம்

ஆசிரியர் இடமாற்றம் பற்றிய செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் வந்தவண்ணமுள்ளன. அந்தவகையில் 26.02.2016 உதயன் பத்திரிகையிலும் ஒரு செய்தி வெளியானதை வாசிக்க முடிந்தது. எனினும் யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட வலயத்தில் இடம்பெற்ற ஆசிரியர் இடமாற்றங்களின்போது வெளி மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டவர்களைப் பார்த்தால் அழகியல், புவியியல், ஆரம்பக்கல்வி, வரலாறு போன்ற பாடத்தைக் கற்பிக்கின்ற மேலதிக ஆசிரியர்களுக்கே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் முக்கிய பாடங்களான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களை கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு அதாவது வெளி மாவட்ட சேவை செய்யாதவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை.

ஏற்கனவே முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற வெளிமாவட்டத்தில் தொடர்ந்தும் அதே நிலைதான்!

தனக்கு மிஞ்சினால்தானே, தான தர்மமும் என்பது போல வலயக்கல்விப் பணிமனை, மாகாண அமைச்சு ஆகியவை செயற்படுகின்றன.

இதில் யார் யாருக்குத் தேவை கருதிய இடமாற்றம் என்பது பட்டவர்த்தனமாக உணரமுடிந்ததாக, இரண்டு ஆசிரியர்களின் ரயில் பயணத்தின்போது நடந்த சம்பாசனையை இங்கு பகிர்கின்றேன்.

முன்பெல்லாம் வெளிமாவட்டங்களில் சென்று நீண்டகாலம் வேலை செய்த உத்தியோகத்தர்களும் உள்ளனர். ஆனால் இன்று வெளிமாவட்டமோ அல்லது உள்ளக இடமாற்றமோ நியாயமாக நடைபெறுகின்றதா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். ஏனென்றால் ஒரு பாடசாலையில் ஓர் ஆசிரியர் 15 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றி ஓய்வு பெறுவதை பத்திரிகையில் வரும் மணி விழாச் சிறப்பிதழ்களில் காணக் கூடியதாக உள்ளது.

இந்தவிடயத்தில் ஆசிரியர் கலாசாலையில் இருந்து வெளியேறுகின்ற ஆசிரியர்களில் எத்தனை பேர் வெளிமாவட்டத்துக்குச் செல்லப் போகிறார்கள் என்பதை நீங்கள் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

சி.கிருஸ்ணசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70 நாள்கள் ஆய்வுக்கு மனிதர்கள் வேண்டும்

## 18,000 டொலர் சம்பளம் என்கிறது நாசா



வொசிங்டன், மார்ச் 4
விண்வெளி வீரர்களை விண்ணுக்கு அனுப்புவது தொடர்பான ஆய்வொன்றை மேற்கொள்ள நாசா திட்டமிட்டுள்ளது. இதற்காக கட்டிலில் 70 நாள்கள் படுத்தபடுக்கையாக இருந்தபடி வேறுபட்ட புகை, போதைப் பொருள்கள் பயன்படுத்தவேண்டும் என்னும் நிபந்தனைகளுடன் நாசா ஆய்வு மையம் மனிதர்களை எதிர் பார்க்கின்றது. ஆய்வுக்கு உட்படுபவர்களுக்கு 18 ஆயிரம் அமெரிக்க டொலரை வழங்குவதாக அது அறிவித்துள்ளது.
இந்த ஆய்வுக்குட்படுபவர்கள் கேம்ஸ் விளையாடலாம். ஸ்கைப் பாவிக்க முடியும். புத்தகம் வாசிக்கலாம். ஆனால் கட்டிலில் படுத்திருந்து புகைத்துக் கொண்டிருக்கவேண்டும். இவற்றை நாசா நிபந்தனையாக விதித்துள்ளது.
இந்த ஆய்வின் மூலம் விண்வெளி வீரர்கள் விண்வெளிக்குப் பயணிக்கும்போது ஏற்படும் உடலியல் மாற்றங்கள்– அவற்றின் பக்க எதிர் விளைவுகளை அறியவும், மாற்றங்களுக்கு ஏற்ப உடல் எவ்வாறு தயாராகிறது, மாற்றத்துக்கான எதிர்த் திறனை முன் கூட்டியே எவ்வாறு உருவாக்குகிறது என்பது குறித்து ஆராயவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.
இந்த ஆய்வு ஆகக் கூடிய நாள்களாக 97 தொடக்கம் 105 நாள்கள் வரை இடம் பெறலாம் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. முதல் 13 தொடக்கம் 21 நாள்கள் கட்டிலில் இருந்தபடி பழக்கப்படுவதற்கான அவகாசம் எனவும், ஏனைய 70 நாள்கள் கட்டாயமாகக் கட்டிலில் படுத்தபடி இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
இவ்வாறான பரிசோதனை மூலம் விண்வெளி வீரர்களின் உடல் நிலை தொடர்பில் உரிய மாற்றங்களைச் சாத்தியமாக்க இந்தப் பரிசோதனை நிகழ்த்தப்படுகிறது. (த-ரி4)



சுவீடன் இளவரசி விக்டோரியா முடிக்குரிய இளவரசரைப் பெற்றெடுத்துள்ளார். இந்தத்
கணவரான இளவரசர் டானியல் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். தலைநகர் ஸ்டெ
அமைந்துள்ள மருத்துவமனையில் குழந்தை பிறந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்

# பிலிப்பைன்ஸ் கடற்கரையில் படகுடன் ஒதுங்கியது

மனிலா, மார்.4
பிலிப்பைன்சின் கடற்கரையில் கரையொதுங்கிய படகொன்றில் உருக்குலையாத நிலையில் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சடலம் ஜேர்மன் மாலுமியினுடையது என்றும், சில தினங்களுக்கு முன்னர் கடலுக்குச் சென்றவர் வீடு திரும்பாததால் தேடப்பட்டு வந்தார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. பிரேத பரிசோதனையின் போது, மாரடைப்பால் இறப்பு ஏற்பட்டுள்ளது என மருத்துவர்கள் தெரிவித் தனர். அவர் இறந்து ஒருவார காலத்தின் பின்னர் தெற்கு பிலிப்பைன்ஸ் பகுதியில் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை
மீனவர்களால், 40 அடி நீளமான படகொன்று
ஆனால் படகில், இறந்து கிடந்த நபர் தெ
விவரங்களும் தெரியவில்லை. இனந் தெரி
ஊடகங்கள் தெரிவித்தன. இதில் இறந்த நிலை
மூத்தமாலுமியான மாணடபிரெட் பிரிட்ஸ் ஆவ
தனது மேசையில் சாய்ந்த படி இறந்துகிடந்தார்.
னம் பொலிசார் சடலத்தை இனம் கண்டன
மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாகத் தலை
அதிகாரி வில்பன் மேயர் தெரிவித்தார்.

# பெரு நாட்டு ஆறுகளில் கலந்தது மசகு எண்ணெய்; 5 மாவட்டங்களில் அவசர காலநிலை பிரகடனம்





லிமா, மார்ச் 4
பெரு நாட்டில் உள்ள இரண்டு முக்கிய நதிகளில் மசகு எண்ணெய் கலந்ததையடுத்து அந்த நாட்டு அரசு அவசர நிலையைப் பிரகடனப் படுத்தியுள்ளது.
பெரு நாட்டில் பிரதான எண்ணெய்க் குழாய் சேதமாகியதால் 3 ஆயிரம் பரல் அளவு மசகு எண்ணெய் இவ்வாறு அமேசானியப் பிராந்தியத்தில் உள்ள ஆறுகளில் கலந்துள்ளது என எண்ணெய் நிறுவனம் தெரிவித்துள்ளது.
சிரியாக்கோ, மொறோனா ஆகிய ஆறுகளிலேயே நீருடன் எண்ணெய் கலந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதனால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் நதியிலிருந்து பிடிக்கப்படும் மீன்களைச் சாப்பிடவேண்டாம் என்று அந்த நாட்டு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.
மேலும் சுகாதார அமைச்சினால், 5 மாவட் டங்களில் குடிதண்ணீர் தொடர்பாக அவசர நிலையும் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. அத்துடன் விரைவில் குழாயைச் சீரமைக்குமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது. (த-ரி4)

# ஒஸ்கார்

வொசிங்டன், மார்ச்.4
சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருது பெற்ற லியோனார்டோ டிகாப்ரியோ தனது விருதைத் தற்செயலாக ஹோட்டலில் தவற விட்டுச் சென்றதாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. கண்காணிப்புக் கமரா மூலம் இது அவதானிக் கப்பட்டுள்ளது. அவர் தனது காரில் வீட்டுக்குச் செல்லும்போது கையில் விருது இருக்கவில்லை என

# அலெப்
# தீவிரவ

தமஸ்கு, மார்ச் 4
சிரியாவின் வடமேற்கு மாகா
மூலோபாய பிராந்தியமொ
களிடமிருந்து குர்திஷ் மற்
இணைந்த கூட்டணி நேற்
மீளக் கைப்பற்றியுள்ளது.
போராளிகள் வசமுள்ள
விடுவிக்கும் முயற்சியில்
யினரும், சிரிய இராணு
றிணைந்து போராடி வருகி
இந்தக் கூட்டணியின் மு
யளித்துள்ளது.
சிரியா கடந்த 2011ஆம் ஆ
போராளிகளின் பிடியில்
காலப்பகுதி முதல் சிரியாவி
இதுவரை 4 இலட்சத்து
லப்பட்டுள்ளதாக கொள்
மையத்தின் பெப்ரவரி மாத
தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



த் தகவலை
ாக்கோமில்
தார். (த-ரி4)

# சடலம்

பிலப்பைன்ஸ்
மீட்கப்பட்டது.
தொடர்பில் எந்த
ரியாத படகு என
யில் இருந்தவர்
ர். இவ் படகில்
நேற்று முந்தி
ர். அவர் தீவிர
மைப் பொலிஸ்
(த-ரி4)

# ஐ.நாவின் தடைகளை எதிர்த்து வடகொரியா ஏவுகணைச் சோதனை

பியொங்யாங், மார்ச்.4

வடகொரியா தனது குறுந்தூர ஏவுகணையைக் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பரிசோதித்ததாகத் தென் கொரியப் பாது காப்பு அமைச்சு தெரிவித் துள்ளது.

வடகொரியா மீது ஐ.நா. தடைகளை விதித்துச் சில மணி நேரங்களின் பின்னர் இந்தச் சோதனை நிகழ்த்தப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

100-150கிலோமீற்றர்வரைபாயும் 6 குறுந்தூர ஏவுகணைகள் நேற்று முற்பகல் 10 மணியளவில் யப்பான் கடலினுள் பரிசோதிக்கப்பட்டுள்ளன என தென் கொரிய ஊடகப் பேச்சாளர் மூன் சாங் யுன் தெரிவித்தார். சோதிக்கப்பட்டவை ஏவுகணையா அல்லது ரொக்கட்டுகளா என்பது குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருவதாக மேலும் அவர் தெரிவித்தார்.

வடகொரியா, அயல் நாடுகளுடன் அல்லது சர்வதேசத்துடன் உறவில் விரிசல் ஏற் பட்டால் தமது கவலைய்யைத் தெரிவிக்க இவ்வாறானஏவுகணையை ஏவவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வடகொரியாவின் ஐதரசன் குண்டு வெடிப்பு, ஏவுகணைப் பரிசோதனை ஆகியவற்றுக்கு எதிராக நேற்று முன்தினம் ஐ.நா. வலுவான தடை பிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)





> வடகொரியா, அயல் நாடுகளுடன் அல்லது சர்வதேசத்துடன் உறவில் விரிசல் ஏற்பட்டால் தமது கவலையைத் தெரிவிக்க இவ்வாறான ஏவுகணையை ஏவவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



## சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

வொசிங்டன், மார்ச் 4

சர்ச்சைக்குரிய தென்சீனக்கடல் பகுதியில் சீனா தனது இராணுவ செயற்பாடுகளை தொடரக் கூடாது என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

தென் சீனக்கடல் பகுதியில் சீனாவின் இராணுவ நடவடிக்கைகள் பெருகி வருவதால், அந்த பிராந்தியத்தில் பெரும் பதற்றம் நிலவிவருகிறது. இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் சீனா குறிப்பிடத்தக்க எதிர் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஆஷ் கார்டர் தெரிவித்துள்ளார்.

சான் பிரான்சிஸ்கோ நகரில் கொமன்வெல்த் கழகத்தில் இடம்பெற்ற பரந்தளவிலான பேச்சு ஒன்றின் போதே பாதுகாப்புச் செயலாளர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய தென்சீனக்கடல் பகுதியில் செயற்கைத் தீவுகளை உருவாக்கியுள்ள சீனா, அங்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் குவித்துள்ளதுடன், ரேடார் அமைப்பதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகிறது. அங்குள்ள உட்டி தீவில் சீனா ஷென்யாங் ஜே-2, சியான் ஜே. எச்-7 ரக போர் விமானங்களை நிறுத்தி உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (கு)

# விருதை தவறவிட்ட நடிகர்



வீடியோ



ஆதாரத்தைக் கொண்டு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த வீடியோவில் நடிகர் போத்தல் மதுவைக் கையில் வைத்திருந்தபடி கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை, ஒரு நபர் அவரிடம் விருதுடன் வந்து இதை எடுத்துக்கொள்ள வில்லையா எனக் கேட்டுள்ளார். அதற்கு நடிகர் லியோ னார்டோ தாருங்கள் எனப் பணிவாகப் பதிலளித்துப்பெற்றுக் கொண்டமை வீடியோவில் பதிவாகியுள்ளது. (த-ரி4)

## கூகுளை ஊடுருவுவதாக நினைத்து வேறு இணையத்தை முடக்கிய ஐ.எஸ்.

வொசிங்டன், மார்.4

ஐ.எஸ். அமைப்பினர் கூகுள் இணையத்தை ஊடுருவியுள்ளதாகத் தகவல் வெளியிட்டனர். ஆனால் கூகுள் எனும் பெயருடன் இருந்த வேறு இணையத்தளத்தையே அவர்கள் ஊடுருவியுள்ளனர்.

'சைபர் பலிபேற் ஆமி' என அழைக்கப்படும், ஐ.எஸ். இணையப் போராளிகள் கடந்த திங்கட் கிழமை கடவுளின் பெயரில் உண்மையாகக் கூகுளை ஊடுருவியுள்ளோம் எனத் தெரிவித்தனர்.

ஆனால் சில மணி நேரத்தின் பின்னர், இந்தியாவைச் சேர்ந்த அட் கூகுள் ஒன்லைன் இணையத்தளத்தின் உரிமையாளர் தனது இணையத்தளம் முடக்கப்பட்டதாக முறைப்பாடு செய்தார்.

ஐ.எஸ். அமைப்பின் பாடல்கள் பிரெஞ்சு மொழியில் கேட்பதாகவும், ஐ.எஸ். அமைப்பின் முத்திரை, திரையில் தென்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.எஸ். சைபர் படை தமது அடுத்த இலக்காகப் பிரிட்டனின் 35 இணையத்தளங்களின் பெயர்களை வெளியிட்டுள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த குசைன் எனும் ஐ.எஸ். சைபர் போராளி கடந்த வருடம் அமெரிக்க வான் தாக்குதலில் உயி ரிழந்துள்ளான்.

அதற்கு பழிவாங்கும் நோக்கில் பிரிட்டனின் இணையங்களை முடக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)

# போ பிராந்தியமொன்று
# ாதிகளிடமிருந்து மீட்பு

ணமான அலெப்போவின்
ான்றை டக்பிரி தீவிரவாதி
ற்றும் சிரியப் படையினர்
று முன்தினம் புதன்கிழமை

ள அலெப்போ நகரை
சிரிய ஜனநாயகப் படை
வப் படையினரும் ஒன்
கின்றனர். அந்தவகையில்
யற்சி தற்போது வெற்றி

முதல் சர்வதேச ஆதரவுப்
காணப்படுகிறது. அந்தக்
வில் நிலவிவரும் மோதலில்
70 ஆயிரம் பேர் கொல்
கை ஆராய்ச்சிக்கான சிரிய
த்திற்கான அறிக்கையில்



அதேவேளை, இந்தத் தாக்குதல்களில் 1.9 மில்லின் மக்கள் காயமடைந்திருப்பதுடன், போருக்கு முந்தைய மக்கள் தொகையின் அரைவாசிக்கும் மேலானோர் சிரியாவிலிருந்து இடம்பெயர்ந்து சென்றிருப்பதாகவும் கூறப்படுகிறது. (கு)


# மரண அறிவித்தல்

மலர்வு
15
06
1946



உதிர்வு
02
03
2016

## திருமதி ரஞ்சிதபூஷணி பாலசுப்பிரமணியம்

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சிதபூஷணி பாலசுப்பிரமணியம் 02.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராஜரெட்ணம் - பராசக்தி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான காவத்தைக் கணபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், மதிவதனி (ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி), பாஸ்கரன் (பிரான்ஸ்), மதியழகன் (லண்டன்), ஜெயவதனி (UNFAO) ஆகியோரின் பாசமிகு தாயும், பரமேஸ்வரன், மகேஸ்வரன் (லண்டன்), நடேஸ்வரன் (லண்டன்), கனகலிங்கம் (ஜேர்மனி), சரோஜினிதேவி, ஸ்ரீகுமார் (பிரான்ஸ்), இராசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தர்மகுலசிங்கம், தவநிதி, Dr. ஜெனிநிரோஷனி ( Research Scientist - லண்டன்), அன்ரன்றோய் (வேல்ட் விசன்) ஆகியோரின் மாமியும், சின்றெல்லா, ஜனார்த்தனன், சஞ்ஜய், பானுஜன், டினுஷா, ஜெய்கிஷோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.448, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

தொ.பே. 077 467 5096 021 320 0520


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது
## பெயர்ச்சி பலன்கள்



### இடபம்

*ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் குறித்து (08.01.2016-25.07.2017) இடப ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனில் வெளியான விவரங்களது தொடர்ச்சி*

**அரசியல்வாதிகளே!**
எதிர்க்கட்சிக்காரர்களிடம் உங்கள் கட்சி விடயங்களைப் பகிர்ந்துக் கொள்ளாதீர்கள். கோஷ்டி அரசியலில் ஈடுபடாதீர்கள். தலைமைக்குக் கட்டுப்படுவது நல்லது. வழக்கில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**கலைத்துறையினரே!**
உங்களை விட வயதில் குறைந்த கலைஞர்களால் நல்லது நடக்கும். உங்களுடைய படைப்புகளுக்கு வேறு சிலர் உரிமை கொண்டாடுவார்கள்.

**விவசாயிகளே!**
சொத்துப் பிரச்சினைகளைக் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு விளைச்சலை அதிகப்படுத்த முயற்சி எடுங்கள். எலித்தொல்லை, பூச்சித் தொல்லைகள் வரக்கூடும். வற்றிய கிணறு சுரக்கும். தென்னை, வாழை, சவுக்கு வகைகளால் இலாபமடைவீர்கள்.

**வியாபாரிகளே!**
ராஜ தந்திரத்தால் இலாபத்தை அதிகரிப்பீர்கள். போட்டிகளைச் சமாளிக்க முடியாமல் திணறுவீர்கள். தொடர்ந்து இலாபம் பெற முடியவில்லையே என்ற கவலைகளும் இருக்கும். முக்கிய வேலைகள் இருக்கும் நாளில் வேலையாள் விடுப்பிலே செல்வார். அதனால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். வருமதிகளை நயமாகப் பேசிப் பெறப் பாருங்கள். சந்தை நிலவரங்களை தெரிந்துக் கொண்டு புது முயற்சிகளோ, முடிவுகளோ செய்யப் பாருங்கள். இரும்பு, கடல் உணவு வகைகள், இரசாயன வகைகள், கட்டட உதிரிப் பாகங்கள் மூலம் இலாபம் வரும். திடீரென்று அறிமுகமாகி கொஞ்சக் காலம் பழகியவர்களை பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டாம்.

**உத்தியோகத்தர்களே!**
உங்களைப் பாரபட்சமாக நடத்திய அதிகாரி வேறு இடத்துக்கு மாறுவார். புது அதிகாரியால் மதிக்கப்படுவீர்கள். உங்களை நம்பி ரகசியப் பொறுப்புகளை ஒப்படைக்குமளவுக்கு மூத்த அதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். சம்பளம் உயரும். சக ஊழியர்களால் சின்னச் சின்னப் பிரச்சினைகள் தலைத்தூக்கினாலும் சாதுர்யமாகப் பேசி சரி செய்வீர்கள். வேறு சில வாய்ப்புகளும் தேடி வரும்.

**கேதுவின் பலன்கள்:**
இதுவரை உங்களுடைய ராசிக்கு பதினோராவது வீட்டில் அமர்ந்துக் கொண்டு காரிய வெற்றியையும், பிரபலங்களின் பாராட்டுகளையும் பெற்றுத் தந்த கேது பகவான் இப்போது பத்தாவது வீட்டில் வந்தமர்வதால் வேலைச்சுமை அதிகமாகும். ஓய்வெடுக்க முடியாத நிலை உருவாகும். ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். ஒற்றையாக இருந்து எவ்வளவு தான் போராடுவது? எத்தனைக் காலத்திற்கு தான் இப்படி கஷ்டப்படுவது என்ற ஓர் ஆதங்கமும் அவ்வப்போது வெளிப்படும்.
உங்களுடைய திறமைகளைப் பயன்படுத்தி வேறு சிலர் முன்னேறுவார்கள். முன்பின் தெரியாதவர்களிடம் குடும்ப அந்தரங்க விடயங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டாம். உங்களுக்கு எதிரானவர்களில் சிலர் தங்களின் ஆதாயத்துக்காக உங்களைப் பற்றி தவறான வதந்திகளை பரப்புவார்கள். எவருக்காகவும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். மறைமுகமாக செயற்பட்டவர்களை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள். பணப்பற்றாக்குறை நீடித்தாலும் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**கேதுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்கள் அஷ்டம-லாபாதிபதியான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் 08.01.2016 முதல் 12.07.2016 வரை கேதுபகவான் செல்வதால், சில நேரங்களில் வெறுமையை உணருவீர்கள். ஒருவித பதற்றம், பயம் அடிமனதிலே தோன்றி மறையும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். முக்கிய பிரமுகர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம். கோபத்தைக் கட்டுப்படுத்தப் பாருங்கள். எடுத்தோம், கவிழ்த்தோம் என்றெல்லாம் அவசரப்பட்டு பேசி விட்டு பிறகு அவஸ்தைப்படாதீர்கள். தங்க, ஆபரணங்களைக் கவனமாகக் கையாளுங்கள்.
ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் 13.07.2016 முதல் 20.03.2017 வரை கேதுபகவான் செல்வதால் மற்றவர்களுடன் உங்களை ஒப்பீட்டுக் கொண்டிருக்காதீர்கள். உங்களுடைய தனித்தன்மையைப் பின்பற்றுவது நல்லது. குடும்பத்தில் சின்னச் சின்னச் சலசலப்புகள் வரும். வேலைச்சுமையால் மனஅழுத்தம் அதிகமாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்கள் ஏமாற்றுவதாக நினைத்துப் புலம்புவீர்கள்.
உங்கள் சப்தம-விரையாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 21.03.2017 முதல் 25.07.2017 வரை கேதுபகவான் செல்வதால் சகோதரங் களால் பண உதவிகள், பொருளுதவிகள் உண்டு. கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மோதல்கள் விலகும். மனைவியின் ஆரோக்கியம் சீராகும். என்றாலும் திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகமாகும். கனவுத் தொல்லையால் அவ்வப்போது தூக்கம் குறையும். புகழ் பெற்ற அண்டை மாநிலப் புண்ணியஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். வியாபாரம் சுமாராக இருக்கும். கொடுக்கல்-வாங்கல் விடயத்தில் கறாராக இருங்கள். சரக்குகள் கொள்முதல் செய்யும் போது கவனம் தேவை. சந்தை வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற போராட வேண்டி வரும். உத்தியோக ஸ்தானமான 10 ஆம் வீட்டில் கேது அமர்வதால் உத்தியோகத்தில் கூடுதல் நேரம் ஒதுக்கி வேலை பார்த்தாலும் நிர்வாகத்திடமிருந்து பாராட்டோ, அங்கீகாரமோ கிடைக்கவில்லையேயென ஆதங்கப்படுவீர்கள். அலுவலகத்தில் ஒதுக்கப்படுகிறோமோ என்ற ஒரு சந்தேகம் உள்ளுக்குள் இருந்துக் கொண்டேயிருக்கும். இந்த ராகு-கேது மாற் றம் கட்டுக்கடங்காத செலவுகளையும், கடினமாக உழைக்க வேண்டிய கட்டாயத்துக்கும் தள்ளினாலும், மற்றொரு பக்கம் ஓரளவு நிம்மதியையும், மகிழச்சியையும் தருவதாக அமையும்.

(தொடரும்)

## இன்று என்பது மட்டுமே உண்மை!

அன்றாட வாழ்வில் பெரும்பாலான பணிகளை நாளைக்கு ஒத்தி வைக்கும் பழக்கம் எம்மில் பலருக்கு உண்டு. நாளைக்காக இன்றைய சந்தோசத்தைத் தொலைத்துக் கொண்டிருப்பவர்களும் நாம்தான். எதிர்காலத்தைப் பற்றிய கவலையில் நிகழ்காலத்தின் இன்பங்களைப் பருக மறுப்பதும், மறப்பதும் நாம்தான். வாழ்வில் எமக்கு கிடைக்கிற ஒவ்வொரு தருணங்களாக இருந்தாலும் சரி, வாய்ப்புகளாக இருந்தாலும் சரி. அதையே நமக்குக் கிடைத்த இறுதித் தருணமாகவும் வாய்ப்பாகவும் நாம் பார்க்கத் தொடங்கினால் நிச்சயம் பயன் கிட்டும்.
எவன் ஒருவன் தனக்கு வழங்கப்பட்ட வாய்ப்பை இறுதி வாய்ப்பாக எண்ணிச் செயல்படுகிறானோ அவனே வெற்றி பெறுகிறான். எவன் ஒருவன் ஒரு நாளின் ஒவ்வொரு நிமிடத்தையும் பொன்போல் மதித்துப் பயன்படுத்துகிறானோ அவனே அந்த நாளின் கதாநாயகன் ஆகிறான் என்பது உண்மை. போட்டித் தேர்வுக்கு விண்ணப்பிக்க இறுதி நாள் அன்றுதான் விண்ணப்பிப்பதற்குக் கூட்டம் அதிகமாக இருக்கும். இப்படி நாளை நாளை என்று நாள்களைக் கடத்தி விட்டு, இறுதி நாளில் முட்டி மோதுவதை வழக்கமாக கொண்டிருப்பதைத் தவிர்க்கவேண்டும். நாளை என்ற ஒன்று இருப்பதால்தான் இன்று என்பது அலட்சியமாகப் பார்க்கப்படுகிறது.
நாளை என்ற ஒன்று இல்லை. இன்று என்பதே உண்மை என்பதை நாம் மனதளவில் ஏற்றுக் கொண்டு செயற்பட்டால் காரியங்கள் கைகூடுவது நிச்சயம். இன்று மட்டுமே உண்மை என்று எண்ணுகிறவனுக்கு நாளை என்பது கனவு. நாளை என்பதுகூட இன்று என்று ஆகிற போது தான் அது உண்மையாகிறது. ஆகவே ஒவ்வொருநாளும் இன்று என்றெண்ணி அன்றன்றைய வேலையை அன்றே முடித்துக் கொள்பவனுக்கு அடுத்த நாள் பற்றிய சிந்தனைகளும் இல்லை, பயமும் இல்லை.
நன்கு உழைப்பவனுக்கு நாளை என்பது இன்றைய நீட்சியே என்பதை நாமும் உணர்ந்து நாளைக்குப் பார்ப்போம் எனும் வாசகத்தை வாழ்க்கையிலிருந்து அகற்றிவிட்டால், வாழ்வெனும் சோலையிலே ஒவ்வொரு நாளும் வசந்தப்பூக்கள் மலர்ந்து மணம் பரப்புவது நிச்சயம். உங்களது வாழ்க்கையிலும் வசந்தப் பூக்கள் வாசம் வீச வாழ்த்துக்கள்.


அபாண்டி

## கறைகள் படிந்த....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாட்டில், நடைபெற்ற கொள்ளையுடன் தொடர்புடைய இருவர் எனச் சந்தேகிக்கப்படுவோரின் தகவல் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், அவர்களைக் கைது செய்யாமல், ஒழுங்கான விசாரணையை மேற்கொள்ளாமல் இருப்பது தனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.
அத்தோடு, ஒரு கட்டத்தில் கொள்ளையுடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபரில் ஒருவர் சாவகச்சேரி நீதிமன்றுக்கு ஒரு வழக்கு விசாரணைக்காக சென்றுள்ளாரெனத் தகவல் கிடைத்ததும், அது தொடர்பில் குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரிக்குத் தகவல் வழங்கியும், அவர் உடன் நடவடிக்கைகளோ எதுவித விசாரணைகளோ மேற்கொள்ளவில்லை எனவும் பாதிக்கப்பட்டவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருக்கிறார்.
அரச படைகள் யாழ். குடா நாட்டை விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றி, சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்ட பின்பு, சிறிது சிறிதாக முளைவிட்ட குற்றச் செயல்கள், இப்பொழுது பெரிய பூதாகரமாக வளர்ந்து நிற்கிறது. இப்படி நிற்பதற்குக் காரணம் சட்டத்தின் காவலர்களே என்பது மறுத்துரைக்க முடியாத ஓர் உண்மையாகும்.
வழிப்பறிக் கொள்ளையர்களின் வளர்ச்சி அபரிமிதமானது. அண்மையில் கொடிகாமம்-மீசாலை வடக்கு தட்டான்குளம் பிள்ளையார் கோயில் வீதியில் இளம் பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்ட இளைஞனிடமிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டதிலிருந்து இதனைக் கண்டுகொள்ளலாம்.
இது கொள்ளையர்களின் வளர்ச்சியையும் பொலிஸாரின் நெறி தவறிய போக்கையும் வெளிப்படுத்திக் காட்டுவதை அவதானிக்க முடியும்.
பொலிஸாரின் கடமை என்பது வெறுமனே, காக்கிச்சட்டையை அணிந்து கொண்டு, மதுபோதையில் தெருவிலே வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைப் பிடித்து நீதிமன்றில் முற்படுத்துவதோ, அன்றி கைப்பற்றப்படும் கஞ்சாப் பொதிகளுடன் ஒளிப்படக் கருவிகளுக்கு முன்பாக நின்று 'போஸ்' கொடுப்பதோ அல்ல.
பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவானது எந்தளவுக்கு குற்றமற்ற ஐக்கியத்துடன் வளர்ச்சி காணுகின்றதோ அந்தளவுக்கு குற்றச்செயல்களும் குறைவாகவே காணப்படும். இதற்குப் பொலிஸாரின் கைகள் மட்டுமல்ல மனமும், கடமை உணர்வும் நன்கு 'சுத்தமுள்ளதாக'வும் இருக்க வேண்டும்.
இனிவரும் காலங்களில் அப்படி இருக்குமா?
இருக்க வேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலியல் கல்வி மிக அவசியம்

கே.எஸ்.சிவஞானராஜா

உலகையே கதிகலங்க வைத்து அழிக்கவல்லது புயல். அது மனிதனை மட்டுமல்ல, இயற்கையின் அத்தனை படைப்புக்களையும் துவம்சம் செய்யக் கூடியதாகும். இதுபோலவே, பாலியல் துன்புறுத்தலும் தென்கிழக்காசியப் பிராந்தியத்தில், குறிப்பாக இலங்கையில் புயலாக மாறியுள்ளது. புயலை எவராலுமே தடுக்க முடிவதில்லை. மனிதனால் தொடுக்கப்படும் புயலைச் சாமிகூடப் பார்த்த வண்ணமே உள் ளது. தடுக்கவும் முடியவில்லை - என்று நாம் தப்புக் கணக்கும் போட முடியாது.

"சாமி" வன்னிப்போர் நடந்தபோதும், உலகப் போர் நடந்தபோதும் பார்த்துக் கொண்டேயிருந்தது. இன்று வரை நடைபெறும் அத்தனை உயிர்ப் பறிப்புக்களுக்கும் தலைவிதி என்று சமாதானமாகி விடக்கூடாது. விதியை மதியால் வெல்லலாம். கூர்மையான ஆன்மிகவாதிக்குமுன்னால் "விதி" தலை வணங்கி நிற்கும். எனவே புயலையும், சுனாமியையும், நிலநடுக்கத்தையும் நாம் தடுக்காமல் விட்டுப்போனாலும், பாலியல் துன்புறுத்தல்களை எங்களால் தடுக்க முடியும்; முடிய வேண்டும்.

வேண்டிய அத்தனை படிப்புக்களையும், ஆலயங்களையும், பள்ளிகளையும், புத்திஜீவிகளையும், ஆன்மிகவாதிகளையும், பொலிஸாரையும், நீதிமன்றங்களையும், தனியார் நிறுவனங்களையும், அரச அலுவலர்களையும் கைவசம் வைத்திருக்கும்போது, எல்லாவற்றையும் மீறி இது நடைபெறுகிறது என்றால் அது ஒரு மூன்றாவது காரணியாகவே இருக்கவேண்டும். போதை கலந்த பானங்களும், உணவுகளும், கஞ்சா, அபின், ஹெரோயின் மற்றும் ஊக்கிகள் இதன் பின்னால் உள்ளன என்பது கண்கூடு. கண்ட கண்ட இனிப்புவகைகள், வெறியை உண்டு பண்ணும் பானங்கள், அங்கீகரிக்கப்படாத சிற்றுண்டிகள், அளவுக்கதிகமான வேதிப் பொருள்கள் சேர்க்கப்பட்ட கலவை நொருக்குத்தீனிகள், வெளிநாட்டுப் பாணியில் பதம் செய்யப்பட்ட பீடாக்கள், விலையுயர்ந்த மதுபானங்கள் மிகவும் தாராளமாகக் கள்ளச் சந்தையில் பகிரப்படுதல் என்று ஊக்கிகள் இங்கு தாராளம். இவற்றைப் பாவிப்பவர்கள் எவராக இருந்தாலும் மனித சுபாவத்திலிருந்து விலகி மாக்களாக மாறி விடுவார்கள். மனிதப் பண்புகளில் விளைந்த மனிதன், வெற்றி கொள்ள வேண்டிய பாடங்களை மறந்து படங்களில் வெறி கொள்கிறான். வெறித்தனமே இந்த மண்ணைத் துவம்சம் செய்கிறது.

### காட்சி

சிற்பங்கள், ஓவியங்கள், குகை ஓவியங்கள், தேர்ச்சிற்பங்கள் யாவற்றையும் ஆன்மிகக் கண்ணோடு எவர் பார்த்தாலும் அவர்களிடம் சலனங்கள் ஏற்படுவதில்லை. அதே சிற்ப, ஓவிய நளினங்களை உயிரோட்டமாகவும், வெளிப்படையாகவும், கூர்மையாகவும் காட்டும் போது மனம் சஞ்சலப்படாமல் இருக்க முடியாதல்லவா? அல்லாமலும் சினிமாவில் தொட்டும், உரசியும், அணைத்தும், முத்தமிட்டும், இதழால் கொஞ்சியும், தூக்கியும், விழுத்தியும், படுத்தும், புரண்டும், களைந்தும், படுத்தும் பாடுகள் ஆபாசமாகக் பீறிடும்போது, அதில் வயப்பட்டவனாய், கிளர்ந்தெழும் காமப்பசி கொண்டவனாய், காமப்பசிக்கு வசீகரிக்கப்பட்டவனாய் ஒரு மனிதன் மாறுவதைத் தடுக்க முடியாது. சரி பிழை, வெட்க துக்கம், மான நட்டம், குடும்பம் கௌரவம், உற்றார் உறவினர், பயபக்தி, வரவு செலவு எல்லாவற்றையும் மறந்து காமத்தின் எல்லையைத் தொட்டுப் பார்க்க, தொடர்ந்து பார்க்க, வெறி கொள்ள இவையே ஒரு மனிதனைத் தூண்டுகின்றன. இதற்கு வயது வரம்பு வரையறை இல்லை. வரம்புகள் உடைக்கப்பட்டு வெட்கமோ விரட்டப்பட்டு, பக்கமோ பார்க்காது, காமம் மிதமிஞ்சி, உச்சம் பெற்று விடுகின்றது. இதுவே பலாத்காரமாக மாறி ஏதோ நடந்து விடுகின்றது.

### துன்புறுத்தல்

பாலியல் துன்புறுத்தல் எங்கும் எவருக்கும் எந்த நேரத்திலும் நிகழலாம். இது எல்லை மீறும்போது சாவும் சம்பவிக்கலாம். பொது இடங்களில், பயணிக்கும் போது, பயிலும் போது, திருவிழாக்களின் போது, வேலைத்தளங்களில், திருமண வீடுகளில், பிறந்த நாள் கொண்டாட்டங்களின்போது, வீட்டில் இருக்கும்போது, தனிமையில் இருக்கும்போது, குளிக்கும் பொழுது, தெரியாத புது இடங்களில், வெளியிட வேலைத் தளங்களில், வாகனங்களில் இந்தப் பாலியல் துன்புறுத்தல்கள் மேலெழுந்த வாரியாகவும், காயப்படுத்தும் அளவுக்கும் இடம்பெறலாம்.

### எப்படிப்பட்டவை இவை?

தொடுவதாகவும், தொட்டு அளைவதாகவும் இருக்கலாம். அதிக நேரம் பார்த்து, கண்களால் ஊடுருவி அளைவதாகவும் இருக்கலாம். பட்டும்படாமலும், தொட்டும் தொடாமலும், விட்டும்விடாமலும், கைகளைக்குலுக்கியும், முதுகில் தட்டியும், தோள்களில் பற்றியும் உற்சாகமூட்டி வாழ்த்துதல் நீடிக்கலாம், தொடரலாம், படரலாம். எவருமற்ற மறைவிடங்களில் அணைக்கவோ, காயப்படுத்தவோ, அழுத்தி விடவோ, ஆக்கிரமித்துவிடவோ முடியும். பயணங்களின்போது, தேய்மானமோ, சேதாரமோ செய்து விடமுடியும்.

ஆபாசப்படங்களைக் காட்டி வயப்பட வைத்து விடலாம். கடிதங்களைப் பயமுறுத்தி வாங்கச் செய்தலில் மாட்டிக் கொள்ள வைக்க முடியும். மயக்கம் தரும் பானங்கள் மூலம் மயங்கச் செய்து, அந்தரங்க உறுப்புக்களைப் படம் எடுத்துப் பயமுறுத்தல், அதன் மூலம் உடலுறவு கொள்ளுதல் செய்துவிடமுடியும். பயங்கர ஆயுதங்கள் மூலம் பயமுறுத்தி பலாத்காரம் செய்தலில் ஈடுபடமுடியும். வேலைவாய்ப்பின் நிமித்தம் பாலியல் இலஞ்சத்தைக் கோரவும் முடியும். பணத்துக்கும், நாகரிகத்துக்கும், பசப்புரைகளுக்கும் மசிய வைத்தலைச் செய்திட முடியும். போலி வேடதாரிகளாக, தோசம் நீக்குபவர்களாக நடித்து கன்னி, யௌவனப் பருவங்களைச் சூறையாடுதல் மற்றும் அகால நேரச் சிட்சைகளாக இருக்கவும் முடியும்.

> பாலியல் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கு அதீத முன்னெச்சரிக்கையை ஏற்பாடு செய்து இவ்வாறான பலாத்காரங்களை அடியோடு விரட்டலாம்; திருத்தலாம். தண்டனைகளைத் தாமதமின்றி நிறைவேற்றலாம். இத்தகைய முறைமை பாலியல் குற்றங்களை மட்டுமன்றி எல்லாக் குற்றங்களையும் குறைக்க உதவும்.

### தடுப்பது எப்படி?

இங்கே தரப்பட்ட ஏதாவது ஒரு வகையினுள் ஒரு பெண்ணோ, ஆணோ, சிறுவர்களோ (எல்லோருமல்ல) பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படலாம். இவற்றில் ஒன்று ஐந்நூறுக்கு ஒன்று (1/500) என்ற விகிதத்தில் நாளாந்தம் நடைபெற்ற வண்ணமேயுள்ளன. இத்தகு துன்பநிலையை எவ்வாறு தடுப்பது என்பது பற்றி மனிதநேயமுள்ளவர்கள், சமயப்பிரமுகர்கள், அறிவாளிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கிராம அலுவலர்கள், சமாதான நீதிவான்கள், ஊருக்குப் பெரியவர்கள், ஊடகவியலாளர்கள், ஆன்மிகக் குருமார், சிறுவர் நன்நடத்தை அதிகாரிகள், பொலிஸார், இளைஞர்கள், உளவளத்துறையினர், வாகன ஓட்டுநர்கள், வர்த்தகப் பெருமக்கள், என இருபத்தொரு அங்கத்தவர்கள் கொண்ட குழுமம் ஒன்றை உருவாக்கம் செய்து ஒவ்வொரு பிரதேசசெயலக வாரியாக இயங்க வைப்பதற்கு நீதிமன்று அனுமதிக்க வேண்டும். அப்படி நடந்தால் இதற்கென இயற்றப்பட்ட யாப்பின் அனுசரணையோடு, பாலியல் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கு அதீத முன்னெச்சரிக்கையை ஏற்பாடு செய்து இவ்வாறான பலாத்காரங்களை அடியோடு விரட்டலாம்; திருத்தலாம். தண்டனைகளைத் தாமதமின்றி நிறைவேற்றலாம். இத்தகைய முறைமை பாலியல் குற்றங்களை மட்டுமன்றி எல்லாக் குற்றங்களையும் குறைக்க உதவும்.

### பாலியல் கல்வி

பாடசாலைகளில் அனைவருக்குமே பாலியல் கல்வி போதிக்கப்பட்டேயாக வேண்டும். பால் சார்ந்த பாதுகாப்பையும், அதனதன் பெறுமதியையும், அவற்றின் கவர்ச்சியினால் ஏற்படப் போகின்ற வன்முறைகள் துன்புறுத்தல்களையும், அந்த வேளையில் எவ்வாறு தப்பிக்க வேண்டுமென்பதையும், அதையும் தாண்டி நடந்தால் எவரிடம் அதனை முறையிட வேண்டுமென்பதையும், 1929 என்ற தொலைபேசி இலக்கத்தோடு எப்படித் தொடர்பை ஏற்படுத்தித் தகவல் தெரிவிக்கலாம் என்பதையும் மிகப் பக்குவமாகவும் பண்பாகவும் பொறுப்புணர்ச்சியோடும் பிள்ளைகளுக்கு வழங்குவதே பாலியல் - கல்வியாக இருக்க முடியும். மதகுருமாரின் ஆசீர்வாதத்தோடு இதை நடைமுறைப் படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் பொறியாளன்



மருதநிலத்தின் சேற்று வயலை உழவியந்திரம் ஒன்று உழுது கொண்டிருக்கிறது. அங்கிருக்கும் பூச்சிகளைப் பிடித்துத் தின்ன நிறைய வெள்ளை நிறக் கொக்குகள் திரிகின்றன. அருகே நீரோடும் வாய்க்கால். அதன் கரையில் நின்று அக்கொக்குகளை வேடிக்கைப் பார்க்கின்றனர் குழந்தைகள்.
ஓரிடத்தில் சிறியதாய், கரை சரிந்து மண் கட்டியொன்று தனியே ஓரமாக விழுகிறது. அக் கட்டியின் உள்ளே செந்நிறத்தில் நெளிகிறது ஒரு மண் புழு.
மண்புழு, மண்புழு என்று கத்தினாள் ஏழிசை.
மண்புழு குழந்தைகளைப் பார்த்து வியப்போடு கேட்டது. "இப்போது எந்தக் குழந்தையும் வயலுக்கு வருவதில்லை. அதிசயமாக நீங்கள் வந்திருக்கிறீர்களே?"
"நாங்கள் பசுமைப் பாடசாலையின் குழந்தைகள், அதனால்தான் வந்திருக்கிறோம்"என்ற ஏழிசை "இப்போதெல்லாம் மண்புழுவைதான் வயலில் பார்க்க முடியவில்லை, ஏன்?" எனக் கேட்டாள்.
"தற்காலத்தில் உழவர்களுக்கு நாங்கள் தேவைப்படுவது இல்லையே?" எனச் சலித்துக் கொண்டது மண்புழு."இருந்தாலும் நிலத்தை நாங்களும் மண்ணுக்குள் உழுது கொண்டுதான் இருக்கிறோம். நாங்கள் வெறும் உழவர்கள் மட்டும் அல்ல. பொறியியலாளர்களும் கூட."
"பொறியியலாளர்களா, எப்படி?" என்று ஆர்வமானாள் ஏழிசை.
"நிலத்தில் நாங்கள் செங்குத்தாகவும், கிடைமட்டமாகவும் நிறையத் துளைகளைப் போடுவோம். இந்தத் துளைகள் வழியாகத்தான் காற்றும் நீரும் தாராளமாக உள்ளே போகும். இது தாவரங்களுக்கு நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும். அந்தவகையில் நாங்கள் பொறியியலாளர்கள்தானே? அதாவது சுரங்கப் பொறியாளர்கள்." "சூழல் பொறியாளர்கள்" என்றும் சொல்லலாமே என்றது மண்புழு.
"துளையிடும்போது நாள் ஒன்றுக்கு எம் எடையளவுக்கு மக்கையும் மண்ணையும் தின்று கழிவுகளை வெளியாக்குகிறோம். இதற்கு 'நாங்கூழ்' எனப் பெயர். எங்களில் ஒரேயொரு மண்புழு மட்டுமே ஆண்டுக்கு நாலரைக் கிலோ 'நாங்கூழ்' உரத்தை நிலத்துக்கு அளிக்கிறது. சதுர அடிக்கு 25 மண்புழுக்கள் இருந்தோம் என்றால் ஏக்கர் நிலத்தில் பத்து லட்சம் மண் புழுக்கள் இருப்போம்."
"அம்மாடி! அந்த அளவுக்கா நிலத்துக்கு சத்துக்களைக் கொடுக்கிறீர்கள்?"
"ஆனாலும் என்னப் பயன்?" என்று சொல்லிவிட்டு சோகமானது மண்புழு. சற்றுநேர அமைதிக்குப் பிறகு பேச்சைத் தொடர்ந்தது.
"தற்போதெல்லாம் வேதி உரம் போட்டு எங்களைக் கொன்று விடுகிறார்களே! உண்மையில் நாங்கள் இல்லாத நிலங்களைவிட நாங்கள் இருக்கும் நிலங்களில் 5 மடங்கு நைதரசன் சத்தும், 7 மடங்கு பாஸ்பரஸ் சத்தும், 11 மடங்கு பொட்டாசியம் சத்தும் இருக்கும். ஆனால், இன்று இச்சத்துக்காக செயற்கை உரங்களைப் போட்டு எங்கள் இனத்தையே ஒட்டுமொத்தமாக அழித்து வருகிறார்கள்."
மண்புழுவின் சோகம் குழந்தைகளுக்கும் மிகவும் வருத்தமாக இருந்தது.
"சரி, வெளிச்சத்தில் வெகுநேரம் என்னால் இருக்க முடியாது. நான் வருகிறேன்" என்ற மண்புழு மீண்டும் மண்ணுக்குள் புகுந்துக் கொண்டது.
குழந்தைகள் யோசித்தபடியே நின்றிருந்தனர்.
மனிதர்களாகிய நாம், சம்பளம் வாங்காமல் ஒருநாள்கூட உழைப்பதில்லை. ஆனால், எமது காலுக்கு கீழே எத்தனை கோடி மண் புழுக்கள் ஒரு சதம்கூட வாங்காமல் மனிதர்களுக்காகவும், மற்ற உயிர்களுக்காகவும் உழைத்துக் கொண்டிருக்கின்றன. மண் புழுவுக்கு ஈரறிவுதான் என்கிறார்கள். ஈரறிவு மனிதருக்கா? இல்லை மண்புழுவுக்கா?

# வரலாற்றில் இன்றைய தினம்

1791 - 1791 இன் அரசமைப்புச் சட்டம் அறிமுகம். பிரித்தானிய பொதுச் சபை, கனடாவை கீழ்க் கனடா (கியூபெக்) மேல் கனடா (ஒன்டாரியோ) என எதிர்வு கூறிப் பிரித்தது.
1861 - அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதலாவது தேசியக் கொடி (நட்சத்திரங்களும் சட்டங்களும் கொண்டதாக) ஏற்றுக்கொள்ளப்பட்டது.
1882 - பிரித்தானியாவின் முதலாவது மின்சார றாம் வண்டி கிழக்கு லண்டனில் ஓட விடப்பட்டது.
1899 - மஹினா சூறாவளி. கியூன்லான்ட் வடகுக் ரவுணில் 12 மீற்றர் (39அடி) உயர அலை 5 கிலோ மீற்றர் ஊடுருவி 300 பேரைக் காவு கொண்டது.
1933 - பிரான்ஸெஸ்பேர்கின்ஸ், அமெரிக்க தொழில் விவகாரச் செயலாளர் ஆனதன் மூலம் அமெரிக்க கபினெட் அந்தஸ்துள்ள முதல் பெண்மணியானார்.
1945 - பின்லாந்து நாஷி ஜேர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்தது.
1977 - புசாறெஸ்ற் றோமேனியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 1500 பேர் சாவு. பெரும் சேதம்.
1980 - தேசியத் தலைவர் றொபேர்ட் முகாபே தேர்தலில் ஒட்டுமொத்த வெற்றி பெற்று சிம்பாப்வேயின் முதல் கறுப்பு இன பிரதம மந்திரி ஆனார்.
1985 - அமெரிக்காவில் இரத்த தானம் பெறப்படும் இரத்த மாதிரிகள் 'எயிட்ஸ்' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என உணவு மற்றும் அவுடத நிர்வாகம் அறிவித்தது.
1988 - தென்னிலங்கைப் பல்கலைக் கழக மாணவர்கள் - இந்திய அமைதிப் படையை வெளியேறக் கோரி, கல்வி நடவடிக்கைகளைப் பகிஷ்கரிப்பு.
2009 - சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சூடான் ஜனாதிபதி ஓமர் ஹஸன் அல் பஷீர்க்கு எதிராக டார்பரில் மேற் கொள்ளப்பட்ட போர்க் குற்றம்மற்றும் மானிட குலத்துக்கு எதிரான குற்றச் சாட்டில் பிடி ஆணை பிறப்பித்தது.

# வர்ணம் தீட்டுவோம்... வாங்க....



## விடுகதைகள்

1. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?
2. கா[illegible]த்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது என்ன?
3. காக்கைப் போலக் கறுப்பானது, கையால் தொட்டால் ஊதா நிறம், வாயால் மென்றால் நீல நிறம். அது என்ன?
4. தா[illegible]க்காரன், மீசைக்காரன், கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன?
5. சி[illegible]ப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கி[illegible]து அது என்ன?
6. [illegible]றிலே பறக்கும் கண்ணாடி குண்டு, [illegible]டுவிட்டால் பார்க்க முடியாது அது என்ன?
7. [illegible]அடுக்கு நான்கு இடுக்கு அது என்ன?
8. [illegible]க் காலில் ஒய்யாரமாய் ஆடுவான். [illegible] விட்டால் படுத்துவிடுவான் அவன் [illegible]
9. ப[illegible]வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?
10. [illegible]க்கு உதாரணம் சொல்வார்கள். [illegible]ல் குறுக்கே நடந்தால் சிலருக்கு [illegible]து. அது என்ன?

## விடைகள்

1. வாழைப்பூ
2. பேனா
3. நாவல் பழம்
4. தேங்காய்
5. காய்ந்த மிளகாய்
6. நீர்க்குமிழி
7. விரல்கள்
8. பம்பரம்
9. கிளி
10. பூனை

உதயன் சிறுவர்பகுதியில் 'வர்ணம் தீட்டவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.



அமிர்தலிங்கம் விதூஷன், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்ச பூத சிவத்தலங்கள்

காரை எம்.பி.அருளானந்தன்

இந்த உலகம் மண், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களால் ஆனது. பரமேஸ்வரன் பஞ்ச பூதங்களிலும் இருந்து அருள் பொழிகின்றார்.

**மண் (காஞ்சிபுரம்)**

சக்தி பீடங்களில் மிகவும் சிறந்தவை, முக்கியமானவை காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி என்பது உலகம் அறிந்ததே.

இந்தக் காஞ்சியில்தான் 108 சிவாலயங்கள் இருக்கின்றன. அதில் முக்கிய ஆலயமாக இருப்பது ஏகாம்பரமேஸ்வரர் ஆலயம். இங்குள்ள மூலவர் சுயம்புலிங்கம். மண் வடிவில் அமைந்துள்ள இறைவன் பக்தர்களுக்குக் கருணை பொழிகின்றார்.

**நீர்(திருவானைக்கா)**

ஸ்ரீரங்கத்துக்கு அருகே, திருவானைக்காவில் அமைந்துள்ள சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள லிங்கமூர்த்தியைச் சுற்றி சதாசர்வ காலமும் நீர் சுரந்து கொண்டிருக்கும். இங்கு பர மேஸ்வரன் நீர் வடிவில் மக்களுக்கு அருள் புரிகின்றார்.

**காற்று(காளாஸ்திரி)**

ஆந்திர மாநிலத்தில் மலைகள் சூழ்ந்த பகுதியில், சுவர்ணமுகி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது தென்காசி என்று போற்றப்படும் சிறி காளாத்தீஸ்வரர் ஆலயம். இங்கு கோயில் கொண்டுள்ள காளத்தீஸ்வரன் மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இந்த அமைப்பு இந்தக் கோயிலின் சிறப்புக்களில் ஒன்று. இந்த ஆலயம் நவக்கிரக சாந்திக்கு சிறந்ததாகவும் விளங்குகிறது.

காளத்தீஸ்வரன் சந்நிதியில் ஒளிவீசும் தீபங்கள் அமைதியாக இருக்கும். ஒரு தீபத்தின் சுடர் மட்டும் சதா சர்வகாலமும் அசைந்து கொண்டே இருக்கும். தீபச்சுடரின் அசைவால் இங்கு காற்றாக பரமேஸ்வரன் பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

**நெருப்பு (திருவண்ணாமலை)**

இங்கு மலையே லிங்கமாகவும், மலையைச் சுற்றிய பகுதி திருக் கோயிலாகவும், அமைந்துள்ளமை மிக விசேடமான அம்சமாகும்.

பிரமாவுக்கும் திருமாலுக்கும் ஏற்பட்ட போட்டியின் காரணமாக லிங்கேஸ்வரன் பெரும் நெருப்பாக ஒளி வடிவில் தோன்றினார். கார்த்திகை மாதம் தீபத்திருநாளன்று திருவண்ணாமலையில்கூடும் அன்பர்களுக்கு ஒளி வடிவில் அருள் ஒளி பொழிகின்றார்.

**ஆகாயம் (சிதம்பரம்)**

சிதம்பரம் கோயிலின் சிறப்பு, நடராஜப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் பக்கத்தில் உள்ள சிறு வாயிலைத் திறந்தால் திரைபோட்டு இருக்கும். இந்தத் திரையை விலக்கி தீப ஆராதனை காட்டுவார்கள். அப்போது நாம் கவனித்தால் தங்க வில்வ மாலையைக் காணலாம். பரமேஸ்வரன் அண்டப் பெருவெளி எங்கும் இருக்கின்றான் என்பது இதன் தத்துவம். இதுதான் சிதம்பர ரகசியம்.

பரமன் நீரிலும், நிலத்திலும், நெருப்பிலும், காற்றிலும், பரவெளியிலும் பரவிப் படர்ந்து இந்த உலகத்தை இயக்குகின்றான். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. அத்தகு பரம்பொருளின் பெரும் புகழைப் பாடிப் பரவி வாழ்வதே சைவ மக்களின் தலையாய கடமையாகும்.

# பிறர் உறவே இறை விருப்பு

இன்றைய சூழலில் குடும்பத்திலும் அயலவர் மட்டிலும் பகைமை, குரோதம், ஒப்புரவின்மை என்பவை அதிகரித்துச் செல்கின்றன. இவற்றை மனதில் சுமந்து கொண்டு வழிபாடுகள், காணிக்கைகள், திருப்பலிகள் போன்றவற்றில் பங்கேற்கிறோம். இவ்வாறான வெளிவேடத்தனமான இறை வேண்டுதலால் எவருக்கு என்ன பயன்? இது இறை சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படுமா? இறைவனை மட்டும் அன்பு செய்ய வேண்டும்மென்பதா இறைவனின் கட்டளை? எமது சகோதரர், அடுத்திருப்போர், அன்புக்குரியவர்கள் இல்லையா? தூய உள்ளத்தோடு மேற்கொள்ளும் வேண்டுதல்களை இறைவன் புறந்தள்ள மாட்டார். இதுவரை அவ்வாறு இல்லையென்றால் இன்றிலிருந்து உறவுகளைச் சீர்ப்படுத்த முனைவோம்.

மன்னித்தல் என்பது சிரமமானதுதான். ஆனால் மன்னிப்பு இன்றி அன்பு வெளிப்படாது. அன்பு உயிரோட்டமுள்ளதாக வேண்டுமெனில், தாமதியாது மனங்களை மாற்றுவோம். தீமை செய்வதை விடுத்து, உறவை வலுப்படுத்துவோம். "தீயவரே தாம் செய்த பாவங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு மனம்மாறி நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால் அவர்கள் வாழ்வது உறுதி" (எசே:8:21-22)




தீமைபுரிவோரை, மன்னிப்பு அற்றோரை சாகடிக்க என்றில்லாது அவர்கள் மனம் மாறவே இறைமகன் இயேசு மனுவுரு வெடுத்துத் தமது உயிரையே கொடுத்தார். அன்புக்கு அடையாளமாக நாமும் பிறரை மன்னித்து அன்பை வளர்ப்போம். உறவைப் புதுப்பித்துக் கொள்ளும்போது பகைமை பனிபோல மறைந்துவிடும். அந்த அன்புதான் இறைவனுக்கும் மனிதனுக்கும் ஏற்புடையதாக அமையும்.

எஸ்.யேசுதாஸ்,கொழும்புத்துறை.

# சமஷ்டி குறித்த அச்சம்

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் தோல்வியடைந்ததற்கு பிரதான காரணமாக இருந்தவிடயம் ஆளும் கட்சியின் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் இடையூறாக இருந்தமைதான். பண்டா-செல்வா ஒப்பந்தம் மட்டுமல்ல 2000ஆம் ஆண்டில் சந்திரிகா குமாரதுங்கவின் தீர்வுப்பொதியும் இதற்கு சிறந்த உதாரணமாகும். தற்பொழுது முதல் தடவையாக ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசு அமைத்துள்ளதால், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனையும் தவறவிட்டால் எதிர்காலத்தில் தீர்வே இல்லாமற் போகலாம். புதிய அரசமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பது தொடர்பான ஆலோசனைகள் வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதும் திரட்டப்பட்டு வருகின்றன. வடக்கு - கிழக்கு மக்களும் இந்த விடயத்தில் ஆர்வம்கொண்டு தமது ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர். நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாறி புதிய அரசமைப்பைத் தயாரிக்கப்போகிறது.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் 1972 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கவால் இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தும் முதலாவது அரசமைப்பு கொண்டுவரப்பட்டது. 1978 அரசமைப்பு ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்பட்டது. தற்பொழுது இனப்பிரச்சினைத் தீர்வையும் மற்றும் தேர்தல் நடைமுறை மாற்றங்களையும் பிரதானமாகக் கருத்தில்கொண்டு மூன்றாவது அரசமைப்புக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரசியல் தலைவர்கள், பொதுமக்களின் ஆலோசனைகளைக் கவனத்தில்கொண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அடிப்படையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுதல் வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளேயே அரசியல் தீர்வு என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. அது மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதாகவும் இருக்கலாம். சமஷ்டி முறையாகவும் இருக்கலாம். இப்படியான சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் தமது கட்சியின் நிலைப்பாட்டை மற்றொரு தடவை தெளிவுபடுத்தியுள்ளார். வடக்கு-கிழக்கு இணைந்த அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட்ட சமஷ்டி அடிப்படையிலான தமிழர் தேசம் ஒன்றை அடையும்வரை தமது பயணம்




தொடரும் என்று திருகோணமலையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கட்சிப் பிரதிநிதிகள், பொது மக்களுடனான சந்திப்பில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். எமது மக்கள் ஆண்டாண்டு காலத்துக்கும் இந்த மண்ணில் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய ஒரு நிரந்தரத் தீர்வை நோக்கியே நாம் பயணிக்கிறோம். இந்தப் பயணத்தின் இறுதிக் கட்டத்தில் தற்போது இருக்கிறோம். இதில் வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு எமக்கு அதிகமாக உண்டு- என்று சமகால அரசியல் நிலைமையை தெளிவுபடுத்தியுள்ளார் சம்பந்தன்.

இந்த நாட்டில் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சமஷ்டி முறையிலான தீர்வே பொருத்தமானது என்பதில் சந்தேகம் இல்லை. பலநாடுகளில் முன்னுதாரணமாக, இந்த சிறந்த ஜனநாயக முறைமை பின்பற்றப்பட்டு வருகிறது. சமஷ்டி என்றால் பிரிவினை அல்ல. இதனைப் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது அரசின் கடமை. கனடாவின் கியுபெக் மாகாணத்தில் இந்த முறைமை வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பிரிவினையைக் கோருவதற்கான அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளபோதிலும், அந்த மக்கள் கனடாவின் ஒரு பகுதியாகவே இருக்க விரும்புகின்றனர். 2014 இல் ஸ்கொட்லாந்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பிலும், ஸ்கொட்டிஷ் மக்கள் பிரிவினையை ஆதரிக்கவில்லை. 55.3 சதவீதமான மக்கள் ஸ்கொட்லாந்து, பிரிட்டனின் ஒரு பகுதியாக இருப்பதற்கே ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

ஆகவே அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் வேளையில், சமஷ்டி குறித்த அச்சத்தை தென்னிலங்கையில் நீக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | 9 | | | | | |
| | 6 | 2 | | | | | | 3 |
| | 9 | | | | 2 | 8 | | |
| | | 1 | | 9 | 3 | 5 | 4 | |
| | | | 1 | 4 | 7 | | | |
| | 2 | 4 | 8 | 5 | | 7 | | |
| | | 8 | 7 | | | | 5 | |
| 2 | | | | | | 9 | 8 | |
| | | | | | 8 | | 2 | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 7 | 3 | 6 | 8 | 1 | 9 | 5 |
| 1 | 3 | 5 | 2 | 4 | 9 | 7 | 8 | 6 |
| 9 | 6 | 8 | 1 | 5 | 7 | 2 | 4 | 3 |
| 6 | 8 | 2 | 4 | 9 | 3 | 5 | 1 | 7 |
| 3 | 5 | 1 | 8 | 7 | 2 | 4 | 6 | 9 |
| 4 | 7 | 9 | 6 | 1 | 5 | 8 | 3 | 2 |
| 7 | 1 | 4 | 5 | 3 | 6 | 9 | 2 | 8 |
| 8 | 9 | 3 | 7 | 2 | 1 | 6 | 5 | 4 |
| 5 | 2 | 6 | 9 | 8 | 4 | 3 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




# அவசரப்பட்ட ஆசிரியர்

படித்ததில் பிடித்தது

பஸ் தரிப்பிடத்திலிருந்து ஆசிரியர் ஒருவர் பஸ்ஸில் ஏறினார். அவரைக் கண்டு, அவரிடம் கல்வி கற்ற மாணவனொருவன் உடனே எழும்புவதற்கு முயற்சித்தான்.

இதனைக் கவனித்த ஆசிரியர் அவன் தோள்பட்டையை அழுத்தி அவனை உட்கார வைத்தார்.

நின்று கொண்டே வாறேன் என்றார்.

அடுத்த பஸ் தரிப்பிடம் வந்தது.

அப்போதும் அந்த மாணவன் எழுந்தான்.

தம்பி, மரியாதை மனசில் இருந்தால் போதும்; நீ அமர்ந்து கொள் என்றார்.

மூன்றாவது பஸ் தரிப்பிடமும் வந்தது. அப்போதும் அந்த மாணவன் எழுந்தான். ஆசிரியர் மீண்டும் அவன் தோள்பட்டையை அழுத்தி உட்கார வைத்தார்.

இந்த முறை அவன் அழுதே விட்டான். உடனே ஆசிரியர் ஏன் அழுகின்றாய் என்றார்?

சேர், நீங்கள் ஏறின நிறுத்தம் தான், நான் இறங்க வேண்டிய இடம் என்றான். ஆசிரியர் மௌனித்துப் போனார்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பெருந்தன்மையுடன் செயற்படுவீர்கள். தொழில் வளர்ச்சியால், பணவரவு அதிகரிக்கும். பெண்கள் அக்கம்பக்கத்தினரின் அன்பைப் பெறுவர். வாகனப் பயணத்தில், மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**இடபம்:** பணிகளில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். மாணவர்கள் தேர்வு நோக்கில் படிப்பர்.

**மிதுனம்:** உற்சாக மனப்பான்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில், உற்பத்தியும், விற்பனையும் அதிகரிக்கும். பணக்கடனைச் செலுத்துவீர்கள். உறவினர் வருகையால், மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** நல்லோரின் நட்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சி மூலம் வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். குடும்பத் தேவை பெருமளவில் பூர்த்தியாகும்.

**சிங்கம்:** உங்களின் நற்செயலை, சிலர் பரிகாசம் செய்யலாம். தொழிலில், பொறுப்பு அதிகரிக்கும். மிதமான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு, சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**கன்னி:** குடும்பப் பிரச்சினையைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், நிர்வாகச் செலவு அதிகரிக்கும். இலாபம் சுமார். விஷ ஜந்துக்களிடம் இருந்து விலகியிருப்பது நல்லது.

**துலாம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், பணவரவு திருப்திகரமாகும். பெண்கள், கணவரின் அன்பைப் பெறுவர். மாணவர்கள், போட்டி பந்தயத்தில் வெற்றி பெறுவர்.

**விருச்சிகம்:** சோம்பலைத் தவிர்ப்பது அவசியம். தொழில், வியாபாரத்தில், குளறுபடி உருவாகி மறையும். பெண்கள் வீட்டுத் தேவைக்கு, கடன் வாங்க நேரிடும். ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், உபரி வருமானம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மகரம்:** துணிவுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். கடின உழைப்பால், தொழில், வியாபாரத்தில், புதிய சாதனை படைப்பீர்கள். நிலுவைப் பணம் கிடைக்கும். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** இலட்சியத்தை நோக்கி முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி திருப்திகரமாகும். தாராள பணவரவு கிடைக்கும். நண்பருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் பணியாற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் படிப்படியாக உயரும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். பெண்கள், உறவினர்களின் ஆதரவைப் பெற்று மகிழ்வர்.







வாட்ஸ் ஆப் இல்லையென்றால்
இது தான் நடக்கும்...!



ஒரு சில ஊடகங்களின் கடமை உணர்ச்சிக்கு.... அளவே இல்ல போ!!!!!




# ஆர்யாவின் நடிப்பில் ரஜினி படம்



தற்கால சினிமாக்களில், புதிய படங்களுக்கு பழைய படத் தலைப்புகளை வைப்பது அதிகரித்து வருகிறது. அதிக மாக ரஜினி படத் தலைப்புகள் புதிய தமிழ் படங்களுக்கு சூட்டப்படுகின்றன. இவற்றில் அதிகமாக தனுஷ் நடித்துள்ள படங்களுக்கு ரஜினி படத் தலைப்புக்கள் வைக்கப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க வகையில் வெற்றியீட்டிய "பில்லா" படத் தலைப்பில் அஜித் நடித்திருந்தார்.

தற்போது ரஜினியின் "போக்கிரி ராஜா" படத் தலைப்பு ஜீவா மற்றும் ஹன்சிகா நடிப்பில் வெளியாக இருக்கும் படத்துக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து ஆர்யா நடிக்கும் புதிய படத்துக்கு "தனிக்காட்டு ராஜா" என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

1982 ஆம் ஆண்டில் வி.சி.குகநாதன் இயக்கத்தில், ரஜினி நடிப்பில் வெளியான படம் "தனிக்காட்டு ராஜா". இதில் ஸ்ரீதேவி, ஸ்ரீபிரியா, ஜெய்சங்கர் உட்படப் பலர் நடித்து இருந்தனர். தற்போது 34 வருடங்களுக்குப் பின்னர் ஆர்யா மற்றும் கேத்தரின் தெரசா நடிக்கும் புதிய படத்துக்கு இந்தப் பெயரை வைத்திருக்கிறார்கள் படக்குழுவினர்.

பெயரைத் தவிர ரஜினியின் படத்துக்கும் இந்தப் படத்துக்கும் வேறு எந்தவொரு சம்பந்தமும் இல்லை. ஆர்யா நடிக்கும் "தனிக் காட்டு ராஜா" படத்தை "மஞ்சப்பை" படத்தை இயக்கிய இராகவன் இயக்குகிறார். இந்தப்படத்தில் ஆர்யா காட்டு வாசியாகவும், கேத்தரின் தெரசா காட்டுவாசிப் பெண்ணாகவும் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 40 | 40 | 40 | 20 | 60 | 30 | 30 |
| கத்தரி | 50 | 60 | 60–80 | 80 | 40 | 60 | 80 | 45 |
| கரட் | 120 | 120 | 100-150 | 120 | 80 | 160 | 110 | 160 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 100 | 50 | 70 | 100 | 80 | 60 | 40 | 100 |
| பாகல் | 70 | 70 | 100 | 100 | 80 | 140 | 70 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 60 | 60 | 140 | 50 | 60 |
| பெ.வெங்காயம் | 70 | 90 | 80 | 80 | 60 | 100 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 70 | 80 | 80 | 70 | 100 | 60 | 70 |
| பூசணி | 70 | 40 | 50 | 50 | 50 | 120 | 35 | 60 |
| தக்காளி | 30 | 30 | 30 | 50 | 20 | 30 | 25 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 40 | 80 | 40 | 70 | 35 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 20 | 30 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 170 | 100 | 100 | 100 | 200 | 110 | 100 |
| புடோல் | 60 | 40 | 50 | 40 | 50 | 40 | 20 | 50 |
| கோவா | 50 | 60 | 50 | 60 | 40 | 80 | 40 | 50 |
| வெண்டி | 60 | 80 | 70 | 60 | 100 | 80 | 60 | 80 |
| போஞ்சி | 100 | 80 | 80 | 100 | 80 | 160 | 60 | 120 |
| லீக்ஸ் | 100 | 120 | 80 | 120 | 100 | 160 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 25–35 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 80 | 90 | 60 | 80 | 65 | 100–120 |
| தேசிக்காய் | 60 | 50 | 60 | 60 | 50 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 140 | 120 | 120 | 120 | 200 | 100 | 150 |
| இராசவள்ளி | 150 | 140 | 150 | 140 | 140 | 150 | 100 | 70–90 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 200–240 | 200 | 300 | 200 | 300 | 300 |
| பனங்கிழங்கு | 05 | 02.50 | 05 | 02 | 05 | – | 02.50 | – |



## இது புதுசு

### புடவைகளில் புதிய வடிவமைப்பு

அன்றாட பாவனைப் புடைவைகள் பட்டு போடரால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. புதிய வடிவமைப்பில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. தினசரி பாவனைக்கு உகந்ததும், தனித்துவமானதாகவும் இவை உள்ளன. 1,650 ரூபாவில் இருந்து 1,750 ரூபா வரை இவை விற்பனை செய்யப்படுகின்றன.



### ஊற வைக்கும்போது

- பருப்பு வகைகளைச் சமைப்பதற்கு முதல் நாளே ஊற வைக்க மறந்துவிட்டீர்களா? கவலை வேண்டாம்.
- நன்றாகக் கொதிக்க வைத்த தண்ணீரில் சமைப்பதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னர் ஊற வைத்தால் கூடப் போதும்.
- இட்லிக்கு மாவை மிக்சியில் அரைக்கும்போது, ஊற வைத்த அரிசி, உளுந்தம் பருப்பைச் சிறிது நேரம் குளிர்ச் சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு அரைத்தால் மா சூடாவது தவிர்க்கப்படும்.

**நாளை**
மாசி-22
சனிக்கிழமை 05.03.2016
திதி: ஏகாதசி பி.ப.02.14 வரை
நட்சத்திரம்: உத்துராடம்
பி.இ.02.31 வரை
ராகுகாலம்:
09.25-10.55 வரை
சுபநேரம்:
03.25-04.55 வரை
ஏகாதசி விரதம்

## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 300 | 200 | 300 | 400 | 500 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 450 | 600 | 700 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | 600 | 450 |
| சுறா | 500 | 400 | 600 | 800 | 700 | 800 | – |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 500 | 500 | – |
| விளை | 650 | 500 | 400 | 400 | 500 | 500 | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | 400 |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 300 | 150 | 250 |
| நகரை | 200 | 300 | – | 200 | 300 | 300 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | 100 |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 300 | 160 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 300 | 350 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 50 | – |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 400 | 300 | – |
| வாழை | 190 | 200 | 200 | 350 | 300 | 350 | 250 |



## பூண்டு ஊறுகாய்

**தேவையான பொருள்கள்:**

வெள்ளைப் பூண்டு உரித்தது – 4 கோப்பை
பொடி உப்பு – முக்கால் கோப்பை
மிளகாய்த் தூள் – ஒரு கோப்பை
வெந்தயம் – ஒரு மேசைக் கரண்டி
சீரகம் – ஒரு மேசைக் கரண்டி
பெருங்காயப் பொடி – சிறிதளவு
கடுகு – ஒரு தேக்கரண்டி
நல்லெண்ணெய் – ஒரு கோப்பை
எலுமிச்சைச் சாறு – ஒரு கோப்பை
துருவிய வெல்லம் – ருசிக்கேற்ப

**செய்முறை:**

- வெந்தயம், சீரகம், இரண்டையும் தனித்தனியாக வெறும் சட்டியில் லேசாக வறுத்து ஒன்றாகப் பொடி செய்து கொள்ளவும்.
- எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து வடிகட்டி அளந்து கொள்ளவும்.
- உரித்த பூண்டை மித தணலில் 5 நிமிடங்கள் வரை வேக வைக்கவும்.
- சட்டியில் நல்லெண்ணெய் விட்டுச் சூடாக்கி, கடுகு சேர்த்துப் பொரிந்ததும் பெருங்காயப் பொடி, பூண்டு சேர்த்து உடனே அடுப்பை அணைத்து விடவும்.
- அதிலேயே உப்பு, மிளகாய்த் தூள், வறுத்த பொடி வகைகள் சேர்த்துக் கலக்கவும்.
- எலுமிச்சைச் சாறு கலந்து, விருப்பப்பட்டால் துருவிய வெல்லம் சேர்த்துக் கரைந்ததும் உலர்ந்த போத்தலில் போட்டு வைக்கவும்.
- ஓரிரு தினங்கள் கழித்துச் சாப்பிடலாம்.
- 2 மாதங்கள் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நோலிமிட்டின் சீசன் 5 ஆரம்பம்



தொடர்ந்து புதிய நவநாகரிக அனுபவங்களை தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வரும் நோலிமிட் அதன் எண்ணக்கருவுடன் ஒத்ததாக வர்த்தக நாமங்களுடனான ஈடுபாட்டை அதிகரித்து வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்ப்பதில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது. தமது விசுவாசமிகு வாடிக்கையாளர்களுடன் இணைந்து, அவர்களை அங்கீகரித்து வெகுமதியளிக்கும் முகமாக நோலிமிட்-இமேஜ், வெள்ளவத்தையில் அண்மையில் நோலிமிட்டின் முன்னணி casual wear வர்த்தக நாமமான Deedat, தனது Ride with Style வருடாந்த மெகா ஊக்குவிப்புத் திட்டத்தைக் கோலாகலமாக ஆரம்பித்தது.

2011 இல் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட 'deedat' - Ride with Style' திட்டமானது,தொடர்ச்சியாக 5ஆவது தடவையாக இம்முறையும் வாடிக்கையாளர்களின் ஆதரவுடன் நடைபெறுகிறது. இந்தத்திட்டத்தின் பிரகாரம் ரூ.3,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு Deedat கொள்வனவுகளை நாடெங்கிலும் உள்ள நோலிமிட் அல்லது Glitz காட்சியறைகளில் பெப்ரவரி 10 தொடக்கம் மார்ச் 20 வரை மேற்கொள்வோர், யமகா எவ்.இசற் 2.0 மோட்டார் சைக்கிளை வெற்றி கொள்ளும் 5 அதிர்ஷ்டசாலிகளில் ஒருவராகும் வாய்ப்பைப்பெறுவர்.

பிரதேச முகாமையாளர், இம்ரான் நிஷாம் உரையாற்றுகையில்;

இந்த வருட ஊக்குவிப்புத் திட்டத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்க, 'Deedat வெற்றியாளர்களுக்கு அளிக்கப்படும் Yamaha FZ 2.0 மோட்டார் சைக்கிள் நிறுவனப்பிரதிநிதிகள், வாடிக்கையாளர்கள், விசேட அதிதிகள், ஊடகங்கள், மற்றும் நலன் விரும்பிகள் முன்னிலையில் நடைபெற்ற கண்கவர் வைபவத்தில் திரை விலக்கி காட்சிப்படுத்தப்பட்டது. மோட்டார் சைக்கிள் செலுத்துனர்களின் வருகையுடன் கொண்டாட்டங்கள் உச்சத்தை அடைந்ததுடன், நகரமெங்கும் திட்டம் தொடர்பான ஆர்வத்தை தூண்டும் முகமாக மோட்டார் சைக்கிள் பவனி இடம்பெற்றது. Deedat கொடிகளுடன் மோட்டார் சைக்கிள் செலுத்துனர்கள் நோலிமிட்-இமேஜிலிருந்து கொழும்பிலுள்ள அனைத்து நோலிமிட் மற்றும் Glitz காட்சியறைகளுக்கும் சென்று திட்டத்தின் ஆரம்பத்தை அறிவித்ததுடன் ஒவ்வொரு காட்சியறையிலும் மோட்டார் சைக்கிள் திரை விலக்கிக் காட்சிப்படுத்தப்பட்டது. கொழும்பில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் பவனியுடன் நோலிமிட் மற்றும் Glitz காட்சியறைகள் அமைந்துள்ள ஏனைய நகரங்களான நீர்கொழும்பு, குருநாகல், கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரியிலும் மோட்டார் சைக்கிள் பவனிகள் நடத்தப்பட்டன.

# நுட்பம்




துணி துவைக்க உதவும் சைக்கிள் சலவை இயந்திரம் ஒன்றை சீனாவைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் வடிவமைத்துள்ளனர்.

சைக்கிள் ஓட்டுவது என்பது உடலுக்கு சிறந்த உடற்பயிற்சியாகக் கருதப்படுகிறது. உடலின் இரத்த ஓட்டங்கள் சீரான முறையில்இயங்க வைக்க சைக்கிள் உடற்பயிற்சியை அன்றாடம் மேற்கொள்வது நல்லது.

இந்த நிலையில், சீனாவின் டலியான் தேசிய பல்கலைக்கழக மாணவர்கள் வடிமைத்துள்ள சலவை இயந்திரம் சைக்கிள் வடிவில் உள்ளது.

அதில், சைக்கிளின் அடிப்புறத்தின் அடைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியில் அழுக்கு துணிகளை அடைத்துவைத்துக்கொண்டு, சைக்கிளின் பெடலை வேகமாக அழுத்தும்போது, உள்ளே உள்ள துணிகள் சுழலுகையில் அதில் உள்ள அழுக்கு நீங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது உடலுக்கு ஒரு வித உடற்பயிற்சி மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் மின்சாரத்தைச் சேமிப்பதற்கு ஒரு சிறந்த வழியாகும் இது கருதப்படுகின்றது.

# LENOVO A 2010 - சிறந்த சலுகைகள் நிறைந்த 4G LTE டுவல் சிம் ஸ்மார்ட்போன் சந்தையில்

இலங்கையில் Lenovo ஸ்மார்ட்போன்களுக்கான ஒரே ஒரு விநியோகத்தரான அபான்ஸ்,அண்மையில் Lenovo A 2010 யை வெளியிட்டது. ஸ்மார்ட்போன் வகைகளில் உயர்தரமான அதிவேக தொழில்நுட்ப வசதிகளை கொண்டதாக 4G LTE டுவல் சிம் ஸ்மார்ட்போன் காணப்படுகின்றது.



Lenovo A 2010 ஸ்மார்ட்போனானது 4.5 - இன்ச் FWVGA (854 x 480 Pixels) டச் ஸ்கிறீன் டிஸ்பிளே மற்றும் Media Teek MT6735M இனால் வழங்கப்படுகின்றது.

1GHz உயர்த்தப்பட்ட quad-core CPU இணைக்கப்பட்டுள்ளது. இவ் ஸ்மார்ட் போனானது 1GB RAM மற்றும் 8GB Storage கொண்டதாகக் காணப்படுகின்றது.மேலும் LED Flash மற்றும் 2 - megapixel செல்பி கமராவுடன் 5 - Megapixel நிரந்தரமாக இணைக்கப்பட்ட முன் கமராவும் காணப்படுகின்றது.

4ஆம் ஜெனரேசனின் மொபைல் வடிவமைப்பின் பெயராக 4G காணப்படுகின்றது. இதற்கு முந்தைய ஜெனரேசனானது 3G எனப்படுகின்றது.4G LTE ஆனது அதி வேகம் கொண்டதாகவும், ஸ்மார்ட் போன் மற்றும் டெப்லட்களைப் போன்று அதி நம்பகமிக்க டிவைஸ்களுக்கான மொபைல் இன்டர்நெட் வசதிகளையும் , அதிவேக இன்டர்நெட் பாவனை,பாடல்கள் மற்றும் வீடியோக்களின் விரைவான பதிவிறக்கம், முகப்புத்தகம் மற்றும் ஏனைய அப்களின்விரைவான இணைப்பு என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது. 4G LTE ஆனது இரண்டு விடயங்களைக் கொண்டது. அதாவது, 4G எனப்படுவது டேடா தொழில்நுட்பம் மற்றும் 3G யை தொடர்ந்து வந்த தொலைபேசி வலையமைப்பின் 4 ஆவது ஜெனரேசனாகும். LTE ஆனது நீண்டகால மதிப்பீட்டைக் கொண்டதாகவும் மொபைல் டிவைஸ்களுக்கான அதிவேக டேட்டாவைக் கொண்ட சிறந்த தொழில்நுட்பத்தைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இந்த டிவைசானது மேலே VIBE UI laid உடனான 5.1 Lolipop அன்ரோய்டாக இயங்குகின்றது. கழற்ற முடியாத 2000 mAh கொண்ட பற்றரியையும் தாங்கியுள்ளது. 8.5 மணித்தியாலங்கள் நீடித்திருக்கக்கூடிய பற்றரி மேலும் 276 மணித்தியாலங்கள் நீடித்திருக்கக்கூடிய நேரத்தையும் கொண்டுள்ளது.

இணைப்பு வசதிகளை நோக்கும்போது Lenovo A 02010 ஸ்மார்ட் போன் 4G LTE ஆனது Wi-Fi,GPS,Bluetooth 4.0 LE மற்றும் microUSB 2.0 போன்றவை காணப்படுகின்றன.

வெள்ளை மற்றும் கறுப்பு ஆகிய இருவேறு நிறங்களைக் கொண்ட Handset ஆனது Lenovo வினால் வழங்கப்படுகின்றது. இந்த ஸ்மார்ட் போனானது,131.5mm நீளம்,66.5 mm அகலம் மற்றும் 9.95 mm தடிப்பத்தைக் கொண்டுள்ளது. சந்தையில் காணப்படும் ஏனைய ஸ்மார்ட் போன்களோடு ஒப்பிடும் போது, A2010 137 கிராம்ஸ் பாரத்தைக் கொண்டுள்ளது.

Lenovo ஆனது வியாபார ரீதியாக A2010 4G LTE டுவல் சிம் ஸ்மார்டினை மிக பிரம்மாண்டமான விதத்தில் அறிமுகம் செய்துள்ளது.

புதிய தொழில்நுட்ப வசதிகளை உள்ளடக்கி காணப்படும் IDC அறிக்கையின் படி Q2 2015 க்கு 30 சதவீத சந்தைப்பங்கைக் கொண்டுள்ளது. Lenovo A2010 சிறந்த சமநிலைப்படுத்தப்பட்ட வேகத்தையும் புதுவித OS-Ansroid 5.1 Lollipo உடன் இயங்குகின்றது. புதுமை மிக்க 2000mAh யைக்கு அடக்கமான பாரமற்ற வடிவத்தையும் தன்னுள் அடக்கியுள்ளது. A 2010 ஆனது சாதாரண விலையில் உயர்ரக தொலைபேசிகளை விரும்பும் இளையோரின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக அமைந்துள்ளது.

வணிகம்

உங்களின்பழையதொலைபேசிப் பாவனையைத் தவிர்த்து புதிய Lenovo ஸ்மார்ட்போன்வகைகளின் புதிய அறிமுகமான டுவல் சிம் 4G ஸ்மார்ட் போனைப் பெற்றுக்கொள்ள அபான்ஸ் ஓர் சிறந்த வாய்ப்பை வழங்குகின்றது. அத்தோடு வட்டியில்லா இலகு தவணைக் கொடுப்பனவுக்கான சந்தர்ப்பத்தையும் அபான்ஸினூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். Lenovo A2010 இணை நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் காட்சியறைகள், விநியோகஸ்தர்கள், டயலொக் வாடிக்கையாளர் சேவை மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(இ)

## தொடுதிரைக் கைபேசிக்கு உதவும் துணைச் சாதனம்

நவீன உலகில் தொடுதிரைக்கைப்பேசிப் பாவனை வெகுவாக அதிகரித்துள்ள நிலையில், அவற்றை அடிப்படையாகக் கொண்ட துணைச் சாதனங்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இவற்றின் தொடர்ச்சியாக தற்போது லெமினிஸ் கேற் கேபிள் எனும் புதிய சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.



இந்தச் சாதனமானது, பவர் பேங், யுஎஸ்பி டேற்றா கேபிள், காட்ரீடர் ஆகியவற்றை ஒருங்கே கொண்டதாகக் காணப்படுகின்றது.

அதில் உள்ள மின்கலம் ஆனது 3,200 எம்.ஏ.எச் மிக்சக்தியைத்தரக் கூடியதாக இருக்கின்றது. இந்தச் சாதனமானது எதிர்வரும் ஜூன் மாதமளவில் விற்பனைக்கு வரவுள்ளது.

## வளைதிரை கொண்ட தொலைக்காட்சி

உலகப் புகழ் பெற்ற இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான சம்சுங் ஆனது, வளை திரைகொண்ட தொலைக்காட்சிகளை அறிமுகம் செய்யவுள்ளது.

இவற்றில் 27 அங்குல அளவுடைய சம்சுங் சிஎவ் 591, 23.5 அங்குல அளவுடைய மற்றும் 27 அங்குல அளவுடைய சிஎவ்390 எனும் தொலைக்காட்சியை அறிமுகம் செய்யவுள்ளது. சம காலத்தில் மக்கள் மத்தியில் வளைதிரை கொண்ட எல்ஈடி தொலைக்காட்சிகளுக்கு அதிக கேள்வி இருப்பதைக் கொண்டு இந்த மூன்று வகையான தொலைக்காட்சிகளையும் இந்த மாதம் அமெரிக்காவில் அறிமுகம் செய்யவுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளில் அறிமுகம் செய்யத் தீர்மானித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்கத்தின்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும்செம்பிறைச் சங்கங்களின் செயலாளர் எல்ஹாஜ் அஸ்ஸி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னாவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தப் பேச்சுக் களின் போதே, ஜனாதிபதி மைத் திரிபால இவ்வாறு கூறியுள்ளார். இந்தச் சந்திப்புக் குறித்து ஜனாதி பதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

நல்லிணக்கத்தைப் பற்றிப் பேசும் போதெல்லாம் சர்வதேச முகவர் நிறுவனங்களும் – சமூகங்களும் மக்களிடம் நல்லிணக்கத்தைத் தேடி வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள போரினால் பாதிக்கப்பட்ட பிர தேசங்களுக்கு விரைகின்றன. நல்லிணக்கம் மக்களிடமிருந்து வர வேண்டும். வெளித்தூண்டு தல்களின் காரணமாக அதனை உருவாக்க முடியாது.

கடந்த சுதந்திரதின நிகழ்வின் போது, தேசிய கீதத்தைச் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பாட அனுமதிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்குக் குறிப்பிடத்தக்க ஒரு தொகை மக்களிடமிருந்து விமர்சனங்கள் எழுந்துள்ளன. எனவேதான், தெற்கிலுள்ள மக் களின் மனோநிலையை மாற்று வது அவசியமாகும்.

தெற்கிலுள்ள மக்களின் மனங் களில், குறிப்பாக வளர்ந்தவர் களிடமே நல்லிணக்கம் விதைக் கப்படவேண்டிய தேவையுள்ளது. இளம்தலைமுறையிடம்நிலைமை இதற்குச் சாதகமானதாகவேயுள் ளது என்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன குறிப்பிட்டார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த எல்ஹாஜ்,

யாழ்ப்பாணம் சென்றிருந்த போது, அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறையில் சிறப்பான பலமாற்றங்கள் நிகழ்ந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந் தது. அவர்களின் மனோநிலை யிலும் தற்போது ஒரு பெரும் மாற் றம் நிகழ்ந்துள்ளது. மக்கள் குறிப்பாக இளம் தலைமுறையி னர் மகிழ்ச்சியாக உள்ளனர் – என்றார்.

போரினால் பாதிக்கப்பட்ட பிர தேசங்களுக்குப் பயணம் செய்த போது, தான் பெற்றுக் கொண்ட நல்ல அனுபவங்கள் தொடர்பில் ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலு வலகத்துக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் எல் ஹாஜ் இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)

## அத்தியாவசிய

வர்த்தகர் சங்கத்தின் தலைவர் பந்துல ஜயமான்ன தெரிவித்துள் ளார்.

நெத்தலி, பருப்பு, சீனி, கோதுமை மா, பயறு, கொத்தமல்லி, மாசி, மஞ்சள் தூள், செத்தல் மிளகாய் மற்றும் உழுந்து போன்றவற்றுக் கான கட்டுப்பாட்டு விலையை நீக் குவதற்கே அரசு இணங்கியுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் குறித்த பொருள் களின் விலை அதிகரிப்புக்கு நிதி அமைச்சு இணக்கம் தெரிவித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

எனினும் அத்தியாவசியப் பொருள் களுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கம் பற்றித் தமக்கு அறிவிக்கப் படவில்லை என்று நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரட்ன தெரி வித்துள்ளார். கைத்தொழில் மற் றும் வர்த்தக அமைச்சினால் இது பற்றி தமக்கு அறிவிக்கப்படவில் லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வரவு – செலவுத் திட்டத் துடன் குறித்த 10 அத்தியாவசியப் பொருள்களுக்கும் கட்டுப்பாட்டு விலை, பாவனையாளர் நலன் கருதி நிர்ணயம் செய்யப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## மனித உரிமைகளை

தெரிவித்துள்ளார்.

குறித்த அமைச்சர்களின் வேண்டு கோளுக்கிணங்க, பொலிஸ் விசா ரணைகளுக்குத் தடை ஏற்படாத வகையில், நாட்டுக்குப் பொருத்த மான விதத்தில் குறித்த சட்டம் திருத்தப்பட்டுள்ளதாக அவர் சுட் டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சட்ட திட்டங்கள், விசேட மாக ஆசிய நாடுகளிலுள்ள சட்ட திட்டங்கள் குறித்து ஆராய்ந்து நீதியரசர், சட்டத்தரணிகள் சங் கம் ஆகிய தரப்புக்களின் ஆலோ சனைகள் – கருத்துக்கள் பெறப் பட்டு இந்தச் சட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளதாக ருமேஷ் டி சில்வா மேலும் குறிப்பிட்டார். (த-வ-5)

## பாதாள உலக

மோட்டார் சைக்கிளில் வந்த இரு வரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட நபர் சிறைச்சாலையில் இருந்து நேற்றுமுன்தினம்தான் விடுதலையாகி வீடு வந்தார் என வும், நேற்றுப் பகல் வீட்டில் சாப் பிட்டுக்கொண்டிருக்கும் போதே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-வ)

## மாதிரி வீட்டை

மேற் கொண்டனர்.

வடக்கு – கிழக்கில் தலா 21லட்சம் ரூபா செலவில் 65 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள் ளன. சீன நிறுவனம் ஒன்றினா லேயே இதன் கட்டுமானப் பணி கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த வீடுகள் பொருத்தும் வீடுக ளாக (பிற்றிங்) அமைக்கப்படவுள் ளன.

இதன் மாதிரி வீடு கோப்பாய் பிர தேச செயலாளர் பிரிவில் உரும் பிராயிலும், தெல்லிப்பழை பிர தேச செயலாளர் பிரிவில் மல்லா கத்திலும் அமைக்கப்பட்டுவருகின் றன. கடந்த மாதம் முதல் வாரத் தில் இதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகின. பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி இந்த வீடுகள் கையளிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அவற்றின் நிர்மாணப் பணிகள் நேற்று மாலைவரை யில் முடிவுறவில்லை.

இந்த நிலையில், யாழ்ப்பாணத் துக்கு இன்றைய தினம் வருகை தரும் புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், உரும்பிராயில் அமைக்கப்பட்டு வரும் வீட்டை காலை 8.30 மணிக்கு நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

இதற்காக நேற்றைய தினம் குறித்த வீட்டை அவசர அவசர மாக நிர்மாணிக்கும் நடவடிக்கை கள் மின்னொளியில் இடம்பெற் றன. சீன அதிகாரிகளே இந்த நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டி ருந்தனர். (த-வ-5)

## நடப்பாண்டு

அவர் குறிப்பிட்டார்.

நிதி ஆணைக்குழுவின் அனுமதி கடந்த ஆண்டு காலதாமதமாகக் கிடைத்தது என்றும், இதனாலேயே அபிவிருத்தி வேலைத் திட்டங் களை உரிய காலப் பகுதிக்குள் செய்து முடிக்க முடியாமல் போனது என்றும், சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபையில் டிசெம்பர் மாதம் இடம் பெற்ற வரவு – செலவுத் திட்ட அமர் வில் கருத்துத் தெரிவித்திருந் தார்.

இதனால் 2016 ஆம் ஆண்டுக் குரிய வேலைத் திட்டங்கள், நிதி ஆணைக்குழுவின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர் களது அனுமதி கிடைக்கப் பெறு வதற்கு முன்னதாகவே ஜனவரி மாதம் அதனை முன்னெடுப் பதற்கான நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்படும் என்று அவர் குறிப் பிட்டிருந்தார்.

எனினும் ஜனவரி மாதம் நடப்பு ஆண்டுக்குரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஆரம்பிக் கப்பட்டிருக்கவில்லை. ஆனால் நிதி ஆணைக்குழுவின் அனும திக்காக அபிவிருத்தித் திட்டங்கள் ஜனவரி மாதமே அனுப்பி வைக் கப்பட்டிருந்தன.

கடந்த மாதம் 23 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவினால், அபி விருத்தி வேலைத் திட்டங்களை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. அதற்க மையதற்போதுவேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கேள்வி கோரல்களை மேற்கொள்வதற் குரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-வ-5)

## கைதிகள்

வைத்தியசாலையில் சேர்க்கப்படு வதும், பின்னர் ஓரளவு இயல்பு நிலைக்கு வர மீண்டும் சிறைக்குச் சென்று உணவு தவிர்ப்பில் ஈடு படுவதுமாக இருந்து வருகின்றனர்.

இந்தநிலையில் நேற்றுச் சிறைச் சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில் 3 பேர் ஆபத்தான நிலையை எட்டியுள்ள னர் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் நட வடிக்கை எடுப்பதாக அரசியல் வாதிகளால் கூறப்படுவது ஊட கங்களில் செய்தியாக வருகின்ற போதும் இன்னும் உரிய நடவ டிக்கை எடுத்ததாகத் தெரிய வில்லை என்று கைதிகளும் அவர்களது உறவுகளும் கவலை தெரிவிக்கின்றனர். இனியாவது தாமதிக்காது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கள் கோருகின்றனர். (த-வ-4)

## தமிழில்

தமிழ் மற்றும் ஆங்கில மொழி களில் உரையாற்றுவதற்கும் கருவி ஒன்றை பயன்படுத்தி ய தாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இதற்காக மக்களின் பணம் இரண்ட ரைக் கோடி ரூபா செலவிட்டுள்ள தாக, ஜனாதிபதி செயலக அதி காரிகளினால் தகவல் வெளியி டப்பட்டுள்ளது.

இவ்வாறு கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

மகிந்த ராஜபக்ச மும்மொழியி லும் சரளமாகப் பேசுவார் என வெளிப்படுத்துவதற்காக ரெலிபு ரோம்ரர் என்ற கருவியைப் பயன் படுத்தியுள்ளதோடு, அந்தக் கரு விக்காக 24 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக ஜனாதி பதி செயலகக் கணக்குகளில் தெரியவந்துள்ளது.

தற்போதைய ஜனாதிபதிக்கு உரை யாற்றுவதில் எந்தச் சிக்கலும் இல்லாமையினால், குறித்த கருவி எதற்கு என்பதை ஆராய்ந்து பார்க்கும்போதே இந்தத் தகவல் கள் வெளியாகியுள்ளன.

குறித்த கருவிக்காக, 24 மில் லியன் ரூபாவைச் செலவிட்ட ஊடக அமைச்சு, தகவல் திணைக் களம், திரைப்படக் கூட்டுத்தாப னம் அல்லது இது தொடர்பிலான வேறு அரச நிறுவனங்களின் ஊடாகக் கொண்டுவரப்பட வில்லை. இந்தக் கருவி யாருக் குக் கொண்டுவரப்பட்டுள்ள தென்பது தொடர்பிலும் குறிப் பிடப்படவில்லை. எனினும் பணம் செலவிடப்பட்டுள்ளமை மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ரெலிப்ரோம்ரர் என் றின் பெறுமதி 24 மில்லியன் ரூபா இல்லை எனவும், அதில் பணம் கொள்ளையடிக்கப்பட் டிருக்கலாம் எனவும் சந்தேகிக் கப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ச தனக்குத் தெரி யாத தமிழ் மொழியை எந்த வொரு பேப்பரிலும் எழுதி வைக் காமல் உரையாற்றுவதனைப் போன்று, மக்களுக்குக் காட்டி கொண்டு சிங்களத்தில் உச்சரிப்பு களை எழுதி வைத்துப் பெரிய எழுத்துக்களில் குறித்த கரு வியை பார்த்து கொண்டு தான் உரையாற்றியுள்ளார். இதன் காரணமாக மகிந்த தமிழில் உரையாற்றியதைப் பார்த்து தமிழ் மக்கள் சிரிக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுகொள்வதற்காக, அவ் வாறு கடினமாகத் தமிழ் பேசிய மகிந்த ராஜபக்ச, தமிழ் மொழி யில் தேசிய கீதம் பாடப்பட்டமைக் குக் கடுமையான எதிர்ப்பு வெளி யிட்டவர் என்பது குறிப்பிடத்தக் கது. (த-வ-5)

## அரசமைப்பு

செயற்குழு ஏகமனதாகத் தீர்மா னித்துள்ளதாக, இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறி யுள்ளதாவது:-

புதிய அரசமைப்பை உருவாக்கு வது தொடர்பில் நாடாளுமன் றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவது குறித்த பிரேரணையை அண்மையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்றத்தில் சமர்ப்பித் தார். இந்த யோசனை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போது, குறித்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித் துள்ளது -என்றார். (த-வ-5)

## தமிழக

இந்திய நாடாளுமன்றத்தில் அறி வித்துள்ளார் உள்துறை அமைச் சர் ராஜ்நாத் சிங்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறை யில் அடைக்கப்பட்டுள்ள நளினி உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய முடிவு செய்துள்ளதாக நேற்று முன்தினம் புதன்கிழமை மத்திய அரசுக்கு, தமிழக அரசு கடிதம் எழுதியிருந்தது.

தமிழக அரசின் உள்துறைச் செய லாளர், மத்திய அரசின் உள் துறைச் செயலாளருக்கு இந்தக் கடிதத்தை எழுதியிருந்தார். அதில், எழுவர் விடுதலை தொடர்பாக மத்திய அரசு தமது கருத்தைத் தெரிவிக்குமாறு தமிழக அரசு கோரியிருந்தது.

இந்த நிலையில் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் பேசிய உள் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 7 பேர் விடுதலை செய்வது தொடர் பாக தமிழக அரசின் கடிதம் கிடைக்கப் பெற்றது. தமிழக அர சின் முடிவு குறித்து மத்திய அரசு ஆய்வு செய்து வருகிறது – என் றார்.

### காங்கிரஸ் எதிர்ப்பு

ராஜ்நாத் சிங் அறிவிப்புக்கு முன்ன தாக இந்திய நாடாளுமன்றத்தில் பேசிய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மல்லி கார்ஜுன கார்கே, தமிழக அரசின் கடிதத்தை மத் திய அரசு பரிசீலிக்கக் கூடாது. ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் விடுவிக்கப்படக் கூடாது – என்றார்.

### ராகுல் கருத்து

தமிழக அரசின் கடிதம் தொடர் பாக காங்கிரஸ் துணைத் தலை வர் ராகுல் காந்தி கூறும்போது, இந்த விவகாரத்தில் எனது தனிப்பட்ட கருத்தை தெரிவிக்க நான் விரும்ப வில்லை. மத்திய அரசு தனது முடிவை எடுக்கட்டும் – என்றார். (த-வ-5)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
மனோன்மணி அம்பலவாணர்

மலர்வு:
22.10.1938

உதிர்வு
28.02.2011

திதி: 04.03.2016

எத்தனை உறவுகள் அகிலத்தில் இருந்தாலும்
காலத்தின் மோதலினால் அவை மாறுபடும் – எமது
வாழ்வுக்கு வழி அமைத்துத் தந்தீர்களே – தாயே!
உமது ஆசி மட்டும் போதும்
எமது உயிர் உள்ளவரை உமை மறவோம்
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்...

651/13, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு. திருமதி சுகுமாரன்
நிதர்சினி
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ம.சு.முன்னணியைப் பலமாக்கும் மைத்திரி

## அறுவர் கொண்ட குழு நியமிப்பு

கொழும்பு, மார்ச் 4

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைப்பதற்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பலப்படுத்துவதற்குமாக அறுவரடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உப செயலாளர் மஹிந்த அமரவீர, அதன் பொருளாளர் எஸ்.பி. திஸாநாயக்க, அமைச்சர் சரத் அமுனுகம, இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு விரைவில் நியமிக்கப்படவுள்ள புதிய செயலாளரும் குழுவில் உறுப்பினராக இடம்பெறுவார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையில் 2005ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில், பொதுஜன ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, ஜன நாயக இடதுசாரி முன்னணி, சம சமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ஈ.பி.டி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகியன பங்காளிக் கட்சிகளாக அங்கம் வகித்தன.

எனினும், இதில் தலைவர், பொதுச் செயலாளர் ஆகிய முக்கிய பதவிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வசமிருந்தன.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலின்போது மேற்படி கூட்ட ணியிலிருந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலை யக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ஹெல உறுமய ஆகியன வெளியேறி நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்தன. இதனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரண்டாகப் பிளவடைந்தது.

தற்போது விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைபீடத்துடன் முரண்பட்டு வருவதாலும், புதியதொரு அரசியல் கூட்டணியை உதயமாக்குவதற்குரிய நடவடிக்கையில் இறங்கியுள்ளதாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, கூட்ட ணிக்குரிய பலமிழந்து காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மீளக்கட்டி யெழுப்புவதற்காக அறுவரடங் கிய குழுவொன்றை கூட்டணி யின் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால நியமித்துள்ளார்.

சிறுபான்மைக் கட்சிகள், சிறு கட்சிகள் ஆகியவற்றுடன் பேச்சு நடத்தி பலமானதொரு கூட்டணியைக் கட்டி யெழுப்புவதே இந்தக் குழுவின் நோக்கமாகும்.

இதன்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப் பதற்கு பச்சைக்கொடி காட்டி யுள்ள கட்சிகளுடன் இந்தக் குழு பேச்சு நடத்தவுள்ளது. நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்திலும் இது பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(த-வ-5)

---

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் நடராஜா



பருத்தித்துறை வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவி திருமதி நாகரத்தினம் நேற்று (03.03.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோகரதாஸ் மற்றும் சந்திரதாஸ், பவாநிதி, யசோசநிதி ஆகியோரின் அன்புத் தாயும், இராஜநாயகி, சித்திரா, ஆனந்தராஜா, புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2016) வெள்ளிக்கிழமை அவரது மகனின் இல்லத்தில் (50/18, செட்டித்தெரு நல்லூர்) நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகள் - இராஜநாயகி
(றியூ தாசன் சலூன் உரிமையாளரின் மனைவி)

(69803)
(10,17)

---

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பம் நடராசா



பண்ணாகத்தைபிறப்பிடமாகவும் தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்டதிருமதி புஸ்பம் (புஸ்பேஸ்வரி) நடராசா நேற்று (03.03.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் நடராசாவின் அன்பு மனைவியும், காலம்சென்றவர்களான சுப்பிரமணியம் சின்னம்மாதம்பதிகளின் அன்புமகளும், காலம்சென்றவர்கள்ான சின்னத்துரை சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு மருமகளும்,

உமாதேவி(டென்மார்க்) வளர்மதி (டென்மார்க்) பிறேமா (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், வசந்தன்(டென்மார்க்) இராஜகோபால் ஆகியோரின் அன்பு மாமியாரும், சக்திதாசன்(டென்மார்க்) டென்சன் (டென்மார்க்), சர்மிளி (டென்மார்க்), டென்சினி (டென்மார்க்), சுஜித்தா (டென்மார்க்) ஆகியோரின் அன்புபேத்தியும், காசினி (டென்மார்க்), ஹரிஸ் (டென்மார்க்), இஷா (டென்மார்க்) ஹருண் (டென்மார்க்) ஆகியோரின் அன்பூட்டியும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், மகேஸ்வரி, சிவ பாக்கியம் (ஆசிரியை) செல்லம் (மலேசியா) இராசரத்தினம் (தபாற் பகுதி எந்திரி) தம்பிநயினார் (காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலை ஆய்வு கூடபொறுப்பதிகாரி) அன்னம் (கமலசரஸ்வதி), மற்றும் திரவியம், இரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அனந்தி சசிதரனின் (வட மாகாண சபை உறுப்பினர்) பெரியதாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 06.03.2016 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 321 0524/0777600488

(69804)
(10,17)

---

## மரண அறிவித்தல்



தோற்றம்: 18 . 12 . 1945

மறைவு: 01 . 03 . 2016

### திருமதி நேசமணி கிறிஸ்ததாஸ்

வதிரி மேற்கு, சோனாவளவைப் பிறப்பிடமாகவும், அல்வாய் தெற்கு தங்கமாலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசமணி கிறிஸ்ததாஸ் 01.03.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான V.T. சின்னத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்)-இளையதங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஜோன் சண்முகம் (தலைமை ஆசிரியர்)-தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற J.S.கிறிஸ்ததாஸின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சமாதான நீதிவான்) அன்பு மனைவியும், சுபாஷினி (இத்தாலி), சுகந்தினி (ஜேர்மனி), ராஜ்குமார் (ஜேர்மனி), சுதர்மினி (கனடா), ரஞ்சித்குமார் (பிரான்ஸ்) லலிதா, ரமேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், செல்வராஜா (இத்தாலி), பரமதாஸ் (ஜேர்மனி), சுபாசினி (ஜேர்மனி), சாள்ஸ் புனிதவளன் (கனடா) றொனிற்றா (பிரான்ஸ்), இக்மால், நென்சி, அஸ்வினி, திலீபன், விக்கினேஸ்வரன், ராதா ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற நேசராஜனின் சிறிய தாயும், தேவகுமார் (கனடா), தேவமணி (உஷா-சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற J.S.சத்தியநாதன் (ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர்- பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), ஆனந்தி (கனடா), மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் றொசான், நர்மதன், பரமசுதன், பியூலா, திஷான் கிருஷானி, விருஷான், தக்ஷா, சாரோன், சியோன், அம்ஷன், றொனிஸ், ரித்திஸ், கின்ஷா, ஆசிவ், ஹஸ்னா, அக்மல், அயன், அஸ்ரின், அமீஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மயூதரன், மனோஷா, மாருதி, சத்தியராஜன் ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.03.2016) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்துக்காக அல்வாய் பங்குவம்படி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(c/29590)(15,17)

"தங்கமால்,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

தகவல்: குடும்பத்தினர்.
021 226 3921 076 646 5867

---

## மரண அறிவித்தல்



பிறப்பு: 14 01 1945

இறப்பு: 03 03 2016

### அமரர் திரு. சரவணமுத்து சிவசோதி

(கந்தன் களஞ்சியம்-உரிமையாளர்-கிளிநொச்சி
மாருதி களஞ்சியம்-உரிமையாளர்- யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், காரைநகர், மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.14,2/1, அருத்துசுஷா ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 ஐ வதிவிடமாகவும் கொண்ட திரு.சரவணமுத்து சிவசோதி அவர்கள் 03.03.2016 காலை அன்னாரது இல்லத்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி. சரவணமுத்து சரஸ்வதி தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி.சுப்பையா பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், திருமதி. பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவபாலன்-கனடா (Bsc.Quantity Surveying-University of Moratuwa). சிவகலா (கனடா), சிவசதீசன்-அவுஸ்ரேலியா (Bsc. Electrical Engineering-University of Moratuwa). சிவதாரணி (மெதடிஸ்த திருச்சபை ஞாபகார்த்த முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நாகறஞ்சனா (கனடா), தயாணந்தராஜா (கனடா), பிறேமினி (அவுஸ்ரேலியா), அருள்ராஜா (பொறியியலாளர், பாரிய நீர்ப்பாசனப் பிரிவு, நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹம்சினி, கிருஷாந், கிஷோர், நிலுக்ஷனன், ஹரிணி, வாசுகி, ஹரிஷ், தனுஷாந் (கொ/இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி-தரம்-4) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்
தொடர்புகளுக்கு: 077 3796373, 077 3405934, 011 2362087

---

## இந்திய மீனவர்கள் 8 பேருக்கும் மறியல்

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 8 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 17ம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார்.

மாதகல் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் போதே மேற்படி 8 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். குறித்த மீனவர்கள் தமிழ்நாடு நாகபட்டிணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களிடம் இருந்து படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களுக்கு மலேரியா தொற்று தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டபின்னர் அவர்களைக்கடற்படையினர் நீரியல்வளத் துறையினரிடம் ஒப்படைத்திருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (வ -10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிறிபேர்க் கல்லூரி

## ஆண் மாணவர்களுக்கான விடுதிக்கு

## அடிக்கல் நாட்டு வைபவம்

இடம் : கல்லூரி வளாகம்
காலம் : 04.03.2016 வெள்ளி
மு.ப. 10.00 - 10.30 மணி
தலைமை : திரு. ந. ஜெயகுமாரன் (கல்லூரி முதல்வர்)

யா/டிறிபேர்க் கல்லூரியின் லண்டன் சர்வதேச பழைய மாணவர் சங்க நிதியின் மூலம் இப் பாடசாலையில் அமையவிருக்கும் ஆண்களுக்கான விடுதியில் வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த வசதி குறைந்த 100 மாணவர்கள் வரை தங்கியிருந்து கல்வி பயிலக்கூடியதாக இந்த விடுதி அமையவிருக்கிறது.

**பிரதம விருந்தினர்கள்**

**கௌரவ சீ.வி. விக்கினேஸ்வரன்**
முதலமைச்சர்.
வடமாகாணசபை.

**கௌரவ மனோ கணேசன்**
தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்கள்,
மற்றும் மொழிகள் அமைச்சர்.



**சிறப்பு விருந்தினர்**

**கௌரவ இ. ரவீந்திரன்**
செயலாளர், கல்வி, கலாசார, விளையாட்டு மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணசபை.



**கௌரவ விருந்தினர்**

**உயர்திரு செ.உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர் , வட மாகாணம்.

**உயர்திரு சு. கிருஸ்ணகுமார்**
வலயக் கல்விப் பணிப்பாளர் , தென்மராட்சி.

**உயர்திரு க.ப. சிவராஜா**
டிறிபேர்க் கல்லூரி பழைய மாணவர்
சர்வதேச நலன்விரும்பிகள் சங்கம், (ஐக்கிய ராச்சியம்)

**T. சிவதாசன் - பொறியியலாளர்**
கட்டட ஒப்பந்தகாரர்
**T.S.V. CIVIL ENGINEERS** கொக்குவில்.

(C/29608)(10.17)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**கல்லூரிச் சமூகம்.**


# தாஜுதீனின் கொலை குறித்த காணொலியை ஒப்படைக்குக

## டக்ளசுக்கு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, மார்ச் 4

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுதீனின் கொலை குறித்த சி.சி.ரி.வி. கமராக்காட்சிகளை சமர்ப்பிக்குமாறு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பார்க் வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. கட்சியின் அலுவலகத்தில் பதிவாகியிருந்த காட்சிகளே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

குறித்த கொலைச் சம்பவம் நடைபெற்ற 2012ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி காணப்பட்ட சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகி, கணினி ஹாாட் டிஸ்கில் காணப்படும் காட்சிகளை இவ்வாறு சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

குறித்த காட்சிகளை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சமர்ப்பிக்க உள்ளார். குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கோரிக்கைக்கு அமைய நீதிமன்றம் இந்த உத்தரவினை அவருக்கு உத்தரவிட்டுள்ளது.

வசீம் தாஜுதீனின் சடலம் 2012ம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி நாரஹேன்பிட்டி சாலிகா மைதானத்தில் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சம்பவம் இடம்பெற்ற பகுதியில் ஈ.பி.டி.பி. அலுவலகமொன்றிலும் சி.சி.ரி.வி. கமராக்காட்சிகள் பதிவாகியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் காட்சிகளையே நீதிமன்றம் சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. (வ)

## எல்லை

கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையில்,

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது. எல்லை நிர்ணயம் செய்வது இலகுவான விடயம் அல்ல. கிடைக்கப் பெற்றுள்ள 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை ஆராய வேண்டும். முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளும் திகதி முடிவடைந்தபோதிலும் மக்கள் இன்னும் முறைப்பாடுகளை வழங்கி வருகின்றனர். இவற்றை எம்மால் புறக்கணித்துவிட்டு எதேச்சையாகச் செயற்பட முடியாது.

கடந்த மூன்று மாதங்களுக்குள் குருநாகல், புத்தளம், அநுராதபுரம், கேகாலை, காலி மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அமர்வுகளை நடத்தியுள்ளோம். மிகுதியுள்ள 19 மாவட்டங்களுக்குமான அமர்வுகளை நடத்திய பின்னரே எல்லை நிர்ணய இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதனை அடுத்தே தேர்தல் நடத்துவதற்கான திகதியை அறிவிக்க முடியும்.

இதில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இந்த மாத இறுதியில் அமர்வுகள் நடத்தப்படும் - என்றார்

இதேவேளை, இதன்போது கருத்துத்தெரிவித்த அமைச்சர் பைஸல் முஸ்தபா, மகிந்த யாப்பா அடுத்த வருடம் ஜூனில் தேர்தல் நடத்தப்படவுள்ளதாகக்குறிப்பிட்டிருந்தார். அது அவரது சொந்தக் கருத்து. தேர்தலை எப்போது வைப்பது என்பதைத் தீர்மானிப்பது நான். சிலவேளை எல்லை நிர்ணய இறுதி அறிக்கை கிடைக்கக் காலம் தாமதமானால் தேர்தல் நடத்துவதும் தாமதமாகலாம்.

எதிர்த் தரப்பினர் 31ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை அறிவிக்காவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத்தெரிவித்துள்ளனர். அவர்களுக்குச்சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முழுச் சுதந்திரமும் உண்டு. ஆனால், எல்லை நிர்ணயத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் எதிரணியினர் புரிந்து கொள்ளவேண்டும்- என்றார். (த-வ-5)


# கண்ணீர் அஞ்சலி



## திருமதி வள்ளிப்பிள்ளை பொன்னம்பலம்

**அனைவருடனும் சொந்தம் பாராது**
**அன்பாகவும் பண்பாகவும் பாசத்துடனும்**
**உதவிகள் பல புரிந்த நீங்கள் அனைவரின்**
**மனங்களிலும் என்றும் நிறைந்திருப்பீர்கள்**

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கதிர்வேலவன் அரிசி ஆலை,
கதிர்வேலவன் காட்வெயாரி
கனிடி வீதி, கைதடி

பிரிவால் துயருறும்
சின்னை
பிள்ளை

## MINISTRY OF HOUSING AND CONSTRUCTIOIN

### DEPARTMENT OF BUILDINGS INVITATION FOR BIDS

**CONSTRUCTION OF UPPER FLOOR OF RESEARCH FACILITATION CENTRE AND THE SECURITY GUARD ROOM AT PALMYRAH RESEARCH INSTITUTE, KAITHADY.**

1. **The Chairman, Regional Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for **Construction of Upper floor of Research Facilitation Centre and the Security Guard Room at Palmyrah Research Institute, Kaithady."** As described below and estimated to cost **Rs. 6.50 Million.**
   The construction period is 120 Days.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C7** or above with the Construction Industry Development Authority (CIDA), valid until **30th April 2016**.
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer (Jaffna), Department of Buildings, Jaffna,** and inspect the Bidding Document at the same address on any working day from **9.00 hrs to 16.00 hrs.**
   Contact numbers are: Phone: 021 – 222 2781, Facsimile: 021 – 222 2781.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Jaffna,** from **4th March 2016** until **16th March 2016** from **9.00 hrs to 15.00 hrs.** upon payment of a non refundable fee of **Rupees One Thousand & Five Hundred (Rs. 1,500/=).**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, C/O Chief Engineer (Zone 2), Department of Buildings Central, Beach Road, Jaffna,** to reach on or **before 10.00 hrs.** on **18th March 2016.** Bids will be opened soon after closing at the **Chief Engineer's office, Department of Buildings, Beach Road, Jaffna,** in presence of the bidder's representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of **77 Days** from the date fixed for Closing of Bids or any extend period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form include in Section 09 of the biding document
   - In favour of **Director General of Buildings**
   - For an amount of **Rupees One Hundred and Thirty Thousand Only (Rs. 130,000/=)**
   - Valid up to **3rd June 2016.**
   - Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Biding data

***Eng.A.Nawas Atham.***
Director (R2), Department of Buildings,
"Sethsiripaya", Battaramulla.
www.buildings.gov.lk

(C/29603)
(11,17,18,20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

*யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்*

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் இக்பால் அணியை எதிர்த்து எபிசி அணி மோதவுள்ளது.



*கழுகுகள் வி.கழகத் தொடர்*

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்திவரும் தாஸ் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து வல்வை அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி அணியை எதிர்த்து யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.

*வைகறை வி.கழகத் தொடர்*


யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆலடிசிந்து 'ஏ' அணியை எதிர்த்து இருபாலை விக்கினேஸ்வரா அணி மோதவுள்ளது.

*யுனைற்ரெட் வி.கழகத் தொடர்*

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற் ரெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசப் வாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாந்தை சென். லூட்ஸ் அணியை எதிர்த்து தேவன் பிட்டி சென். சேவியர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சின்னக்கடை கிறின்பீல்ட் அணியை எதிர்த்து பள்ளிமுனை சென்.லூசியா அணி மோதவுள்ளது. 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாழ்வுப்பாடு சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து சாந்திபுரம் குரோஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

# தோல்விகளால் நம்பிக்கை சீர்குலைந்துள்ளது மூத்த வீரர்களின் துடுப்பாட்டமே இதற்குக் காரணம்

## மத்தியூஸ் தெரிவிப்பு



ஆசியாக்கிண்ணத் தொடரில் இலங்கையின் தொடர் தோல்விகளால் அணியில் நம்பிக்கை சீர்குலைந்துள்ளதாகக் குறிப்பிட்ட அணித்தலைவர் மத்தியூஸ், இந்தத் தளம்பல் நிலைக்கு துடுப்பாட்ட வீரர்களே காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆசியக்கிண்ணத் தொடரின் லீக் ஆட்டங்களில் இலங்கை அணி, தான் எதிர்கொண்ட மூன்று ஆட்டங்களில் இரண்டில் தோல்வியடைந்துள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்துடன் மட்டுமே வெற்றி பெற்றது. அணியின் தலைவரான மலிங்க தொடர்ந்து காயத்தால் அவதிப்பட்டு வருவதும் இலங்கைக்கு பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது. இந்த நிலையில் தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் தற்போதைய தலைவரான மத்தியூஸ் பந்துவீச்சாளர்களை விட துடுப்பாட்ட வீரர்களை அதிகம் சாடியுள்ளார்.

மத்தியூஸ் மேலும் தெரிவிக்கையில்; - 'தோல்விகளால் எங்களது நம்பிக்கையும், மன உறுதியும் சீர்குலைந்து போயுள்ளன. தொடர்ச்சியான தோல்விகளை ஜீரணிப்பது கடினம். எங்களது சிறந்த ஆட்டம் இன்னும் வெளியாகவில்லை. இதில் கவலை அளிக்கும் அம்சம் எதுவென்றால், எங்களது துடுப்பாட்ட வரிசை மோசமாக இருப்பதுதான். பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் துடுப்பாட்டத்தில் தளம்பல் இருப்பதென்பது இயல்புதான். ஆனால், இது மிகவும் மோசமாகவுள்ளது. குறிப்பாக மூத்த வீரர்கள் சிறப்பாகச் செயற்படாதமை பின்னடைவாக உள்ளது. இளம் வீரர்களும் தங்களது முழுத் திறமையை வெளிப்படுத்த வேண்டும். - என்றார். (ம)



சண்டிலிப்பாய் கோட்டமட்ட கரப்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 19 வயதுக்கு உட்பட்ட அணி. (ம)

# சம்பியனானது உதயசூரியன் நாணயச் சுழற்சியின் மூலம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண்கள் அணிகளுக்கு இடையிலான எல்லே தொடரில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயா விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இரண்டு அணியினருக்கும் தலா 30 பந்துகள் வழங்கப்பட்டது போதும் இரண்டு அணியினரும் எந்தவித ஓட்டங்களையும் பெறவில்லை. எனவே, மேலதிகமாக 10 பந்துகள் வழங்கப்பட்டன. இதிலும் இரு அணிகளாலும் ஒரு ஓட்டத்தையும் பெறமுடியாது போக முடிவில் நாணயச்சுழற்சி மூலம் செம்மலை உதயசூரியன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# வலிகாமம் வலய பெருவிளையாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 4

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன. 19வயது இருபாலாருக்குமான எல்லேத் தொடர்கள் இன்று நடைபெறவுள்ளன. ஆண்களுக்கான தொடர் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான தொடர் யூனியன் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ம-23)

# வென்றது அல் மதீனா

யாழ்ப்பாணம், மார்ச் 4

சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அல் மதீனா அணி வெற்றி பெற்றுள்ளது.

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சண்சையின் அணியை எதிர்த்து அல் மதினா அணி மோதிக் கொண்டது. இதில் அல் மதீனா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# பாரதியை வீழ்த்தியது சாந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 4

வைகறை வி.கழகம் நடத்திவரும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சாந்தை அணி வெற்றி பெற்றுள்ளது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி பாரதி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை அணி மோதிக் கொண்டது. இதில் பண்டத்தரிப்பு சாந்தை அணி 12:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# நல்லூர் பிரதேச கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்குஇடையிலானஇருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடர் நாளை சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அரங்கில் இடம்பெறவுள்ளன. (ம-23)

# உயிலங்குளம் றோ.க.த.க. மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

மன்னார் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் மூன்றாம் இடத்தை உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி தனதாக்கிக் கொண்டது.

அல் அசார் மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற குறித்த மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து எருக்கலம்பிட்டி மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி 2:1 என்ற செற் கணக் கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வலய பூப்பந்து

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ். கல்விக் வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15, 19வயதுப்பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்டத் தொடர் இன்று வெள்ளிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரியின் உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளது. (ம-422-23)

## வடமராட்சி கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கான கரப்பந்தாட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

## கரவெட்டி கரப்பந்தாட்டம்

கரவெட்டி பிரதேச செயலக கழகங்களின் பெண்கள் அணிகளுக்கான கரப்பந்தாட் டத் தொடர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

## கரவெட்டி எல்லே

கரவெட்டி, மார்ச் 4
கரவெட்டி பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான எல்லேத் தொடர் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அல்வாய்மனோகரா மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

## அரேகவிக்கு தடைவிதிப்பு

ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பெண்கள் பிரிவின் உலகசம்பியனான சுவீடனின் அபேபா அரேகவி, ஊக்கமருந்துச் சோதனையில் இடைக் காலத் தடை விதிக்கப்பட்டுள்ளார்.
25 வயதான அவர், 2013 ஆம் ஆண்டு மொஸ்கோவில் இடம்பெற்ற உலக சம்பியன் சிப் தொடரில் தங்கம் வென்றிருந்தார்.
2014ஆம் ஆண்டு இடம்பெற்ற உலக உள்ளக சம்பியன்சிப் தொடரிலும் சம்பியனாகியிருந்தார்.
இந்நிலையில் கடந்த வருட இறுதிப்பகுதியில் அவருக்கு நடத்தப்பட்ட ஊக்கமருந்துச் சோதனையில் 'அரேகவி தடைசெய்யப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்தியமை உறுதியாகியுள்ளது. இதனால் அவர் மீது தற்பொழுது இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஓகஸ்ட் மாதம் ஒலிம்பிக் தொடர் நடை பெறவுள்ள நிலையில், அரே கவி மீதானதடை சுவீடனுக்குபெரும் பின்னடைவாக இருக்கும் என்று கருதப்படுகிறது. (ம)

# கிண்ணம் வென்றது சென்.பற்றிக்ஸ் யாழ். கல்விக் கோட்ட கால்பந்தில்



யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ். கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 17வயதுப் பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றுள்ளது.
சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை குறித்த இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. இரு அணிகளும் சிறப்பான போராட்டக் குணத்தை வெளிப்படுத்தின. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே போராட்டகரமான நிலைமை தான். மாற்றங்கள் ஏதும் இல்லாமல் ஓடி மறைந்தன நிமிடங்கள். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணத்தை தீர்மானிக்க வேண்டிய நிலைமை. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.
மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நாவாந்துறை ஆர்.சி. பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் சென்.ஜோன்ஸ் கல் லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23-422)

## ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 4
றோயல் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற சென். நீக்கிலஸ், யங்ஹென்றிஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.
தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதிக் கொண்டது.
இரண்டு அணியினரும் எந்த வித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

## நீக்கிலஸ் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## 200 சிக்சர்களை விளாசிய ஒரே தலைவர் டோனி



ஆசியக்கிண்ணத் தொடரில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணித்தலைவர் டோனி, சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அதிக சிக்சர்களை விளாசிய தலைவர் என்ற புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.
139 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலுக்கு களமிறங்கிய இந்தியா 126 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்த நிலையில், 19ஆவது பந்துப்பரிமாற்றத்தில் டோனி களமிறங்கினார். சிறிவர்த்தன வீசிய அந்த பந்து பரிமாற்றத்தின் 3ஆவது பந்தை சிக்சராக மாற்றிய டோனி, சர்வதேச ஆட்டங்களில் 200 சிக்சர்களை விளாசிய முதல் தலைவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். (ம)

## யாழ். கல்வி வலய துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ். கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான துடுப்பாட்டத் தொடர்கள் எதிர்வரும் 8ஆம் 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.
ஆண்களுக்கான தொடர் 8ஆம் திகதி கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலும், பெண்களுக்கான தொடர் 9ஆம் திகதி கோப்பாய் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. (ம-422)

# சம்பியனானது விக்னேஸ்வராக் கல்லூரி வடமராட்சி கல்வி வலய துடுப்பாட்டத்தில்

வடமராட்சி, மார்ச் 4
வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளின் ஆண்கள் அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி அணி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வராக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் ஆறு இலக்குகளை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுபெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 24 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 6 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
3ஆம் இடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூசியின் மாட்டின் குரோவ் புற்றுநோயால் நேற்றுச்சாவு



நியூசிலாந்து கிரிக்கெட் ஜாம்பவான்களில் ஒருவராகக் கருதப்பட்டு வந்த அந்த அணியின் முன்னாள் தலைவரான மாட்டின் குரோவ், புற்று நோயால் பாதிக்கப்பட்டு நேற்றுச்சாவடைந்தார். குரோவ், நியூசிலாந்து அணிக்காக 13 ஆண்டுகள் விளையாடியுள்ளார். 4 ஆண்டுகள் அவர் தலைவராகப் பணியாற்றினார். இவர் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் நியூசிலாந்து பலமான அணிகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. ஓய்வின் பின்னர் வர்ணனையாளர், எழுத்தாளர் என பற்பலவாய்ப்பணியாற்றிய அவருக்கு புற்றுநோய் இருப்பது கடந்த வருடமே தெரிய வந்தது. புற்றுநோய் முற்றிய காரணத்தால் சிகிச்சை பயனின்றி அவர் நேற்றுச் சாவடைந்தார். இவரதுமறைவுக்குபிளெமிங், மக்கலம், ஸ்ரைறிஸ், வில்லியம்சன் போன்ற நியூசிலாந்து வீரர்கள் மட்டுமல்லாது சர்வதேச வீரர்கள் பலரும் தமது அனுதாபங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் பார்வையாளராகக் கலந்துகொண்ட குரோவ், "நியூசிலாந்து கிண்ணம் வெல்லும். மாறாக இன்று தோல்வியடைந்தாலும் நான் இறப்பதற்கு முன்னர் எனது நாடு உலகக் கிண்ணம் வெல்வதைப் பார்ப்பேன்" என்று தெரிவித்திருந்தார். ஆனால் உலகக்கிண்ணக்கனவு நிறைவடையாமலேயே அவர் சாவடைந்துள்ளார். (ம)



## அரபு இராச்சியத்தை ஊதித்தள்ளியது இந்தியா

ஆசியக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இந்திய - ஐக்கிய அரபு இராச்சிய அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 9 இலக்குகளால் வெற்றிபெற்றது இந்திய அணி. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஐக்கிய அரபு இராச்சியம்முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக முஸ்தபா மற்றும் படில். முதல் பந்துப்பரிமாற்றத்தில் ஓர் ஓட்டத்தைத் தானும் கொடுக்கவில்லை புவனேஸ்குமார். ஒரே ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் படில். ஒரு ஓட்டத்தை யேனும் பெறவில்லை செசாட். முஸ்தபாவை வெளியேற்றினார் பாண்டியா. அன்வர் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் அவரது இன்னிங்ஸில் பெரிதான பவுண்டரிகள் என்று இருக்கவில்லை.

ஹர்பஜனின் சுழலும் நேற்றுச் சிறப்பாக அமைந்தது. பின்வரிசை வீரர்களில் ஒருவர் கூட இரட்டை எண்களில் ஓட்டங்களைப் பெறவில்லை. ஐக்கிய அரபு இராச்சியத்தின் பின்வரிசை நம்பிக்கையான ஜாவிட்டை வெளியேற்றினார் ஹர் பஜன். அன்வரும் 43 ஓட்டங்களுடன் ரண்அவுட் செய்யப்பட முடிவில் 9 இலக்குகளை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது ஐக்கிய அரபு இராச்சியம்.

பந்துவீச்சில் இந்தியா சார்பாக புவனேஸ்குமார் 2 இலக்குகளையும், பும்ரா, ஹர்பஜன்சிங், நெகி, யுவராஜ், பாண்டியா ஐவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். 4 பந்துப்பரிமாற்றங்களை முழுமையாக வீசிய புவனேஸ்குமார் 8 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்திருந்தார். இதில் இரண்டு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களும் அடங்குகின்றன.

பதிலுக்குக்களமிறங்கிய இந்தியாவுக்கு ஆரம்பம் கச்சிதமாக அமைந்தது. ஆனால் தவானின் ஆட்டத்தில் அதிரடி என்று சொல்லுமளவுக்கு ஒன்றும் இருக்கவில்லை. தவான் மூலம் வீணடிக்கப்பட்ட பந்துகளைச்சரிசெய்தார் ரோகித் சர்மா. அணியின் ஓட்ட எண்ணிக்கை 43ஆக இருந்தபொழுது 39 ஓட்டங்களுடன் ரோகித்தை வெளியேற்றினார் அகமட். மூன்றாவது வீரராகக்களமிறங்கினார் யுவராஜ். யுவராஜ், தவான் இணைய ஓட்டங்கள் பெறப்படும் வீதம் இரட்டிப்பானது. பவுண்டரிகளாக நொறுக்கினார் யுவராஜ். தவானின் ஆட்டத்திலும் மாற்றம் ஏற்பட 59 பந்துகள் மீதமிருக்க ஐக்கிய அரபு இராச்சியத்தை வீழ்த்தியது இந்தியா. ரோகித் சர்மா ஆட்டநாயகனானார். (ம)


பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். (இரு இடத்திலும்) K.K.S. றோட், இணுவில்.
A/L Day Class
தமிழ்
N. சத்தியவேந்தன்
B.A (Hons)Tamil.spl M.phil in Tamil
இரு இடத்திலும் திங், செவ், பு, வியா, வெள்
யாழ். நகரில் 9.00 - 10.00 am
இணுவிலில் 10.30 - 11.30 am
புதிய மாணவர்கள் இப் பிரிவுக்கு உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
Note:
❖சனி, ஞாயிறு A/L 2016, A/L 2017, A/L 2018 பிரிவுகள் இரு இடங்களிலும் வழமையான நேரப்படி நடைபெறுகின்றன.
❖இது வரையில் அனுமதி பெறாத மாணவர்கள் சனி, ஞாயிறு பிரிவுக்கு உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.



தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்
*தமிழ் இணையக் கல்விக் கழகத்தினூடாகத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் BA சிறப்புப் பட்டதாரியாகும் வாய்ப்பு.
*கல்விப் பொது தராதர உயர்தரத்தில் எத்துறையில் கல்வி பயின்றவர்களும் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம்) நேரடியாக இணைந்து இந்தப் பட்டப்படிப்பைத் தொடரமுடியும்.
*மார்ச் மாதம் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதால் விண்ணப்பதாரிகள் எமது அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பதிவுகளை 12.03.2016ஆம் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ள வேண்டும்.
*உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டது. இப்பட்டம் இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவாலும், இந்தியப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவாலும் (University Grant Commission) அங்கீகரிக்கப்பட்டது.
தமிழ் இணையக் கல்விக்கழகம், பாரதி இன்ஸ்ரிரியூட், காளிகோயில் வீதி, மீசாலை மேற்கு, மீசாலை,
077 805 1173, 077 076 9457
(8/29600)(1.16.20)









வடக்கின் சிகரம்
உயர்கலைக்கல்லூரி
A9 வீதி, மீசாலை. T.P: 021 2270851
க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு இன்னும் 150 நாள்கள் இருக்கும் வேளையில்
A/L DAY 2016 Class
கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழினுட்பவியல்
துரித மீட்டல் வகுப்புக்களுடன் பொறியியல் தொழினுட்பம் உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் மாணவர்களுக்கான Paper Class மற்றும் செயன்முறை வகுப்புக்கள் திங்கள் முதல் - வெள்ளி வரை காலை 8.30 - பி.ப ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.
வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி உண்டு.
கடந்த வருட பரீட்சையில் எமது மாணவர்கள் 5 பாடத்துறையிலும் மாவட்ட தேசிய நிலைகளில் முதல் நிலைகளைப் பெற்றுள்ளனர்.
T.P: 0772367520 நிர்வாகி.



விசேட கருத்தரங்கு
SLAS / SLEAS
(OPEN / LIMITED)
(பிரதி சனி-9-4 PM)
விரிவுரையாளர்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
துறைசார்ந்த விரிவுரையாளர்கள்
❖சமுர்த்தி உத்தியோகத்தர்
❖கிராம சேவையாளர்
❖சட்டக் கல்லூரி அனுமதி
போட்டிப் பரீட்சை வகுப்புகள் ஆரம்பம்
05.03.2016 சனி 2.00 PM
(பிரதி சனி-2-5 PM)
விரிவுரையாளர்கள்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
T.P: 0774696695


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org